www.tamilarangam.net

# எரிமலை

மே 1997




## தலைவரின் பாதையில் உலகத் தமிழினம்!

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## அக்கறைப் பூக்கள்

அன்பான எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

அன்பு கலந்த வணக்கங்கள். நான் கடந்த நான்கு வருடங்களாக தவறாது எரிமலை வாசித்து வருகிறேன். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உரிமைக் குரலை ஒலிக்க வைக்கும் ஓர் உந்துகோலாகவும் தமிழீழத்தின் நிலைமைகளை உண்மையாக எடுத்து வெளியிடுவதிலும் 'எரிமலை' இன்று போல் என்றும் விளங்கவேண்டும் என்றும், 'உலைக்களம்' வியாசனின் கவிதையை ஆர்வத்துடன் எதிர்பார்க்கிறேன் என்றுகூறி, இளைஞர்களின் மனதில் படியும்படி கட்டுரைகளையும், கவிதைகளையும் வெளியிட்டு வரும் ஆசிரியர் குழுவிற்கு எனது வணக்கங்களைக் கூறி விடைபெறுகிறேன்.

சோ. பத்மநாதன்
பிறேமன்,
ஜேர்மனி

★★★

வெல்லட்டும் புலிகள்,
மீளட்டும் தமிழீழம்.

அன்புள்ள எரிமலை ஆசிரியர் குழுமத்திற்கு வணக்கங்கள்.

எரிமலை இதழில் தளபதி பொன்னம்மானைப் பற்றி "அற்புதன்" என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள்.

தாங்கள் எழுதியிருந்ததைப்போல், தளபதி பொன்னம்மானைப் பற்றி எழுதினால், எழுதிக் கொண்டே இருக்கலாம்.

ஆனால் பொன்னம்மானைப் பற்றிய இன்னும் பல அரிய செய்திகளை வெளியிட்டிருக்கலாம். ஏனென்றால், பொன்னம்மான் இந்த மானுடத்தை முழுமையாக நேசித்த மாமனிதன். தன் தாய் நாட்டின் விடுதலையை மட்டுமல்ல, தமிழ் நாட்டின் விடியலையும், ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலையையும் நோக்கிய உண்மைப் புரட்சி வீரன். அவனது வாழ்க்கை வழிகாட்டல், அவனளித்த போர்ப் பயிற்சி, பயிற்சிக் களத்தில் "பிழைகளுக்கு" வழங்கப்பட்ட அறிவு சார்ந்த அன்பு கலந்த, மனிதநேய தண்டனைகள். பயிற்சிக் களத்தைச் சுற்றி வாழும் மக்கள் அனைவரும் தாங்கள் ஈன்ற மக்களை விட, அதிகமாகப் போராளிகளையும், பயிற்சிப் பொறுப்பாளர்களையும் நேசிக்கவைத்த பொன்னம்மானின் நிர்வாகம். இவையெல்லாம் போராடும் புலிகள் மட்டுமல்ல, தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமல்ல, உலகப் பந்தில் எங்கெல்லாம் விடுதலைக்காக போராடும் விடுதலை போராளிகள் இருக்கிறார்களோ, அவர்களெல்லாம் அறிந்து, தெளிந்து கொள்ளும் போராட்டப் பாடம் தான் பொன்னம்மானின் வாழ்க்கை.

கிட்டண்ணா சொன்னது போல், பொன்னம்மான் பயிற்சிக் களத்தில் மூவாயிரம் போர் வீரர்களை உருவாக்கவில்லை, மூவாயிரம் புரட்சி வீரர்களை, உருவாக்கியவன் என்றாரே, அப்படிப்பட்ட ஒரு தாய்ப் புலியைப் பற்றி ஓரிரு செயதிகளை மட்டும் தாங்கி வந்த எரிமலையின் கட்டுரை எமக்கு, ஏமாற்றத்தை தந்துள்ளது.

மூவாயிரம் புரட்சிக் காரர்களை உருவாக்கிய அந்தத் தாய்ப் புலியைப் பற்றி மீண்டும் தொடர்ந்து முழுமையாக வெளியிடுங்கள்.

புலிப்படையின் அடிக் கற்கள் எல்லாம் உலகப் பரட்சியாளர்கள் அறிந்து கொள்ள வேண்டிய பாடம் தான். அந்த அடி நாள் வீரனின் அரிய செய்திகளை எரிமலையில் எதிர்பார்க்கிறோம்.

என்றும் அன்புடன்,
புலித் தோழர்கள்,
புலியூர், கொளத்தூர், மேட்டூர்.
(சேலம் மாவட்டம், தமிழ்நாடு)

★★★

வணக்கத்துக்குரிய ஆசிரியருக்கு,

தங்களின் 'எரிமலை' இதழ்கள் அனைத்தும் தவறாமல் பெற்று, உலகம் வியக்கும் நம்மின விடுதலைப் புலிகளின் இயக்கத்தைப் பற்றியும், ஈழத்தமிழர்களாம் நம் சொந்தங்களின் உண்மை நிலை பற்றியும், ஏற்றமிகு தமிழர்களாம் உலகத் தமிழர்கள் பற்றியும் இக்காலகட்டத்தின் நிலையை அறிய எங்கள் பேரவைத் தோழர்கள் அனைவர்க்கும், சுற்றியுள்ள இளைஞர்களுக்கும் ஏதுவாகவும், பயன் உள்ளதாகவும் இருக்கிறது என்பதைக் கூறிப் பெருமை கொள்கிறோம்.

த. இலங்கேஸ்வரன்
தமிழர் எழுச்சிப் பேரவை,
செ. நா. பாளையம்

★★★

வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!!

பேரன்புக்குரிய 'எரிமலை' ஆசிரியருக்கு வணக்கம்.

எரிமலை இதழைத் தொடர்ந்து பெற்றுவருகிறேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நவம்பர் இதழுடன் இணைக்கப்பட்டிருந்த லெப். கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகிய இரண்டு மாவீரர்களின் வண்ணப்படங்களையும் பெற்றுக் கொண்டேன். 'எரிமலை'யின் ஒவ்வொரு இதழும் எழிலார்ந்த இதழாகவும், வரலாற்று ஏடாகப் பாதுகாத்து வைக்கத்தக்க நிலையிலும் சிறப்பாகத் திகழ்கின்றது. 'எரிமலை' இதழை எல்லா நண்பர்களிடமும் கொடுத்து படியுங்கள் என்று சொல்வேன். எரிமலையை என்னிடம் வாங்குபவர்கள் திருப்பிக்கொடுப்பதேயில்லை என்றார் பார்த்துக்கொள்ளுங்களேன்.

நன்றி! வணக்கம்.

என்றும் தமிழீழ விடுதலை உணர்வில் வாழும்

அன்பன் கா.அ.வீ. வெற்றிவேல்
அருப்புக்கோட்டை, தமிழ்நாடு.

★★★

எரிமலை ஆசிரியர் அவர்கட்கு,

எரிமலைப் புத்தகத்தினூடாக ஈழத்தில் எமது விடுதலை வீரர்கள் நடாத்தும் களங்களின் உண்மை நிலவரங்களை அறிவதற்கு ஆவலாக இருக்கின்றோம். எரிமலை தொடர்ந்து கிடைப்பதற்கு ஆவன செய்யவும்.

கே. சுரேஸ்
சவுதி அரேபியா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...


★ நீங்காத நினைவுகள்
– பக்கம்.....04

★ சிங்களம் தோண்டும் புதைகுழி
– பக்கம்.....05

★ மன்னார்க் கடலில் மூழ்கி மாண்டுபோன ஈழத் தமிழர்களுக்கு கண்ணீர்அஞ்சலி
– பக்கம்.....10

★ குடாவிலொரு நண்பனுக்கு விடாமல் விடுத்த மடல்
– பக்கம்.....22

★ மேல் நோக்கிய பயணி
– பக்கம்.....27

★ சுட்டும் விழிச் சுடர்
– பக்கம்.....29

★ இசைக் கலை
– பக்கம்.....32

★ மண்ணின் சுதந்திரம் முள்ளியவளை வன்னியர்கள்
– பக்கம்.....34

★ பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணம்
– பக்கம்.....40

★ புத்தொழி பிறந்தது
– பக்கம்.....46





ஒன்றுசேரும் சிங்கள இனவாதம்
– பக்கம் 06





சமாதானத் தீர்வு யோசனை சம்பந்தமான வெள்ளை அறிக்கை
– பக்கம் 08





போர்க்கால நெருக்கடியும் கலாச்சார விடையளிப்பும்
– பக்கம் 11





ஈழத்தமிழின பாதுகாப்புக் கருத்தரங்கு
– பக்கம் 16





லெப்.கேணல். ராதா 10–ம் ஆண்டின் பசிய நினைவுகள்
– பக்கம் 20





தேசிய சுதந்திரத்தை நோக்கி...
சிறப்புக் கட்டுரை
– பக்கம் 23





நரக நகரம்
– பக்கம் 41






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழீழத்தில் இன்று இராணுவ அராஜகம் தலைவிரித்தாடுகிறது. தமிழீழப் பகுதிகளில் சிங்கள ஆயுதப்படைகள் சதா குவிக்கப்படுகின்றன. நவீனரகமான ஆயுத தளபாடங்களும் புகுத்தப்படுகின்றன. கடலாலும், நிலத்தாலும் தமிழீழம் முற்றுகையிடப்பட்டிருக்கிறது. பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தமிழ் மக்கள் பயந்து வாழ்கிறார்கள். இராணுவ அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் இருக்கிறது. இது தான் இன்றைய நிலை. இந்நிலையில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பதாயின் ஒரு பலம் வாய்ந்த தேசியப்படை அமைப்பை நாம் கட்டியெழுப்பவேண்டும். தமிழீழ விடுதலைக்கு இன்று அத்தியாவசியமான தேவை இதுவாகும். இந்த இலக்கில் தான் எமது முழு முயற்சியும் இன்று பிரயோகிக்கப்படுகிறது. இந்த இலக்கை நாம் அடைவதற்கு வெளிநாடுகளில் வதியும் தமிழீழ தேசபக்தர்களின் உதவியும் ஒத்தாசையும் இன்றியமையாதது. இந்த வகையில் நீங்களும் எமக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும்.

எமது விடுதலை இயக்கம் ஒரு தேசிய பாதுகாப்பு நிதியை ஆரம்பித்திருக்கின்றது. இது பற்றிய எனது விபரமான அறிக்கை எமது இயக்கப்பத்திரிக்கையில் வெளியாகியிருக்கிறது. அதனை உங்ளுக்கு அனுப்பிவைக்கிறேன். இந்நிதிக்கு அமெரிக்காவிலுள்ள தமிழீழ விடுதலை விரும்பிகள் தம்மாலான நிதி உதவியைச் செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன். யுத்த காலத்தில் மக்களின் பாதுகாப்புத் திட்டமொன்றை செயற்படுத்தவே இந்நிதி தேவையாகிறது. இன்று நாம்ஒரு தேசிய விடுதலை யுத்தத்திற்குத் தயாராகி வருகிறோம். இந்த யுத்தத்திற்கு வெளிநாட்டுத் தமிழரின் நிதி உதவி அத்தியாவசியம். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அவர்கள் செய்யக்கூடிய அளப்பரிய சேவையும் அதுவே.

(நியூயோர்க் நகரில் நடைபெறவிருந்த 'உலகத் தமிழீழ மாநாடு' சம்பந்தமான மாநாட்டின் அமைப்பாளர் டாக்டர் பஞ்சாச்சரம் அவர்களுக்கு 19.05.1984 அன்று தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து...)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# நாம் செயல்படுவோம்

ஒவ்வொரு போர் முனையிலும் பல்லாயிரம் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு கனரக ஆயுத தளபாடங்கள், விமானப் படைகளின் குண்டு மழை, கடற்பரப்பில் நகர்த்தப்பட்ட பீரங்கிப் படகுகள் என்பவற்றுடன் தமிழர்கள் மீது போர் தொடுப்பது சந்திரிகா அரசின் 'சமாதானத்திற்கான போர்' என்ற நடவடிக்கையாகிவிட்டது. தமிழர்கள் தமக்கென்ற அடையாளத்துடன் வாழத்தலைப்படும் ஒவ்வொரு பிராந்தியங்களையும் குறிவைப்பது சந்திரிகா - பீரிஸ் - ரத்வத்தை கூட்டணியின் தலைமைத்துவம் என இலகுவாகக் குறியிடலாம். யாழ். போர்முனையில் பல்லாயிரம் படையினரை குவித்து தமிழர்களின் இருப்பையே முழுமையாக அகதிகளாக்கிய அரசு பின்னர் பரந்தன் - கிளிநொச்சி, மன்னார், தற்போது வவுனியா என எமது இருப்புக்கும் எழுச்சிக்குமான நிலப்பரப்புக்களை தொடர்ச்சியாக தாக்கி வருகின்றது.

இந்தப் போர்த் தந்திரம் வெற்றி பெறுமா? ஒரு தேசத்தின் விடுதலைக்கான விருப்பம் நிலப்பரப்புக்களை 'கைது' செய்வதனால் நசுக்கப்படுமா?

எமது போர் முற்றுமுழுதான தமிழீழ விடுதலைக்கானது. எமது விடுதலை இயக்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் இறுதி வெற்றிக்கான போர்த் தயாரிப்புக்களே. நாம் முன்னேறுவது; கட்டுப்பாட்டில் வைத்திருப்பது; எதிரி முனைப்புடன் தன் அரக்கத்தனத்தை வெளிக்காட்டும்போது தேவைகளைக் கணக்கில் எடுத்து போர் புரிவதும், போரை ஒத்திவைப்பதும் ஒரு முழுமையான போர்த்திட்டத்தின் ஒரு பகுதியே. நாம் யாழில் இழந்த பரப்பிலும் பன்மடங்கு நிலப்பரப்பினை இன்று தென்தமிழீழத்தில் எமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளோம். எமது படையணிகள் அங்கே கட்டியெழுப்பப்படுகின்றன. தென்தமிழீழம் இன்று எம் தேசத்தின் உட்கட்டுமானத்திற்கான அனுபவங்களைப் பெறுகின்றது. இது தொடர்ச்சியான ஒரு போராட்டத்தின் படிக்கற்கள்.

இதனைக் கருத்தில் எடுக்காத சந்திரிகா அரசின் பெரும் தாக்குதல்களை எமது விடுதலைப் போராளிகள் காலத்திற்குக் காலம் எதிர்கொள்கின்றனர். போர் முனையில் பல்லாயிரம் விடுதலைப் புலிகள் இரத்தம் சிந்தி எம் மண்ணில் உன் கால்கள் பதிவதென்பது இலகுவான காரியமல்ல எனப் புரியவைக்கின்றனர். கால் பதித்த எதிரியின் மூச்சழித்து - முகமழித்து விரட்டியடிக்க எம் இளைய பிரபாகரன் தலைமுறை தொடர்ந்து உழைக்கின்றது. ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட எமது மக்களை பராமரிப்பது முதல் பாதுகாப்பது வரை பரந்து கிடக்கும் பல்வேறு தரப்பட்ட ஒரு தேசத்திற்கான கடமைகளை எமது விடுதலை அமைப்பும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், செஞ்சோலை அமைப்புக்கள் மற்றும் எமது ஆய்வுநிறுவனங்கள் நிறைவேற்றுகின்றன.

சர்வதேச அவதானிப்புக்களை திசைதிருப்பி - உலகை நோக்கி சமாதானப் புறாவாக ஜி.எல். பீரிசையும், எம்மை நோக்கி இராணுவக் கழுகாக ரத்வத்தையையும் பறக்க விடும் சந்திரிகா அரசின் சுயரூபத்தை வெளிக்காட்ட எமது தேசம் சர்வதேச ராஜதந்திரப் போர்முனையில் உழைக்கின்றது .

இந்த உழைப்பும் அமைப்பும் எம் மக்களின் அரசியல் இலட்சியமான சுதந்திரமான தமிழீழம் எனும் சாத்தியமான அரசியல் தீர்வை நோக்கி கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. நாங்கள் ஒரு உருவாகி வரும் தேசத்தின் பிரஜைகளும் - கனவான்களும் ஆகும்.

எமது கடமைகள் என்ன? ஒரு யுகப் புரட்சியாக தமிழர் வரலாற்றில் எழுந்து நிற்கும் எமது சுதந்திரப் போருக்கான கடப்பாடு என்ன? நாம் ஒரு ஆக்ரோஷமான எதிரியை எதிர்கொள்கின்றோம். சிங்கள நாட்டின் 50 வீதமான பொருளாதார வளங்களானது சிங்கள இராணுவத்தை தாங்கி நிற்கின்றது. ஒன்றுபட்ட சிங்கள இனவாதம் அந்த இராணுவத்தை உரமூட்டுகின்றது. காலத்திற்கு காலம் நவீனமயப்படும் இனவாத அரசமைப்பு இந்த இராணுவ இயந்திரத்திற்கு முதுகெலும்பாகத் திகழ்கின்றது. இந்த அமைப்பிற்கு எதிராக நாம் போராட வேண்டுமானால் நாமும் ஆக்ரோஷம் பெறவேண்டும். எமது நாட்டின் தேசிய இராணுவமாக எழுந்து நிற்கும் விடுதலைப் புலிகளின் கரங்கள் பலப்படுத்தப்பட வேண்டும். தமிழீழ தேசத்தின் அரசியல் அபிலாசைகளை முன்னெடுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் பின்னால் முழுத் தமிழினமும் அணிதிரள வேண்டும். தமிழீழ தேசத்தின் கருக்கோளைப் பற்றிநிற்கும் சமூக கலாச்சார வாழ்வு பலப்படுத்தப்பட வேண்டும்.

உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் முன் வைக்கப்பட்ட பணி இது. சிறீலங்காவின் பட்ஜெட்டினால் பலப்படுத்தப்பட்ட சிங்கள இராணுவத்தை எதிர்கொள்ளும் விடுதலைப் புலிகளின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். எம் உழைப்பின் ஒரு துளி, இந்தத் தேவையின் ஒரு அணுவைப் பொறுப்பேற்றால் நாம் விடுதலைக்குத் தகுதியான சமூகமாகக் கருதப்படலாம். சிறீலங்கா என்ற அமைப்பே தமிழர்களின் சுதந்திரப் போருக்கெதிரான பிரச்சார யுத்தத்தில் தம்மை ஈடுபடுத்தியுள்ளது. பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பலப்படுத்தும் இந்தப் பிரச்சாரப் போரை முறியடிக்க எமது புத்திஜீவிகள், எமது மாணவர்கள், எமது பத்திரிகையாளர்கள், எமது அரசியல்வாதிகள், மற்றும் புலம்பெயர்ந்து வாழும் நாம் அனைவரும் கடுமையாக செயல்படவேண்டும்.

சகல தமிழ் மக்களும் இந்த இலட்சியத்தின் தேவையைப் புரிந்துகொண்டால் சிங்கள இனவாதத்தின் சிரம் அறுக்கப்படும். தேசத்தை நேசிக்கும் ஒவ்வொரு பிரஜையும் தன் கடமையை உணர்ந்து செயற்பட்டால் அடுத்த 'பொங்கலில்' எம் வானம் குண்டுகளால் அல்ல மகிழ்வு எனும் பட்டாசுகளால் சிலிர்க்கும்.


கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
மே 1997

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு


*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்காத நினைவுகள்

# லெப். கேணல். ராதா

ராதா! பல்வேறு ஆற்றல்களைத் தன்னுள் புதைத்து வைத்திருந்த அழகிய புத்தகம் அவன். எதற்கும் ராதா சிரிப்பான். சிரித்தபடியே நண்பர்களுடன் பழகுவான், அவர்களை அரவணைப்பான். இனிய நண்பனாய் வழிகாட்டும் ஆசானாய், உற்ற சகோதரனாய், அன்பைப் பொழியும் தாயாய், இப்படி இப்படி பல்வேறு பாத்திரங்களுடன் எம்முடன் வாழ்ந்தவன்.

ராதா 1983 இன் இறுதிப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தன்னை முழுமையாக இணைத்துக்கொண்டான். 1983 ஜூலை கலவரத்தின்போது தமிழ் மக்களிற்கு சிங்கள இனவாதம் புரிந்த கொடுமைகளை எல்லாம் ராதா நேரில் கண்டான். அதுவே அவனை ஒரு விடுதலைப் புலியாகவும் மாற்றியது.

இந்தியாவின் முதலாவது பயிற்சி முகாமில் சுமார் 100 போராளிகளுடன் பயிற்சியைப் பெற்றுக் கொண்டான். தேசியத் தலைவராலேயே ராதா என்ற அழகான பெயரும் சூட்டப்பட்டான். பொன்னம்மானும், ராதாவும் நெருங்கிய நண்பர்களாகவே இருந்தனர். போராளிகளை உருவாக்குவதில் பொன்னம்மானோடு தோளோடு தோள் நின்று உழைத்தவன் ராதா. இந்தியாவில் ஐந்தாவது பயிற்சி முகாமை முற்று முழுதாக தானே பொறுப்பெடுத்து வீறுகொண்டு பாயும் பல வேங்கைகளை உருவாக்கிய பெருமையும் ராதாவுக்கு உண்டு.

ராதாவுக்கு கோபிக்கத் தெரியாது. போராளிகளை அவன் அரவணைக்கும் பாங்கே எல்லோரும் அவன் மீது பாசமும், பற்றும், மதிப்பும் வைக்கக் காரணமாகியது. ஒரு தளபதி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ராதா உதாரணமாகத் திகழ்ந்தான். நன்றாகப் பழகியவர்களின் இழப்புக்களை அவனால் தாங்கமுடியவில்லை. அழுதும்விடுவான். விக்டர் வீரமரணம் அடைந்தபோது ராதா அழுதேவிட்டான். ஆனாலும் மறு நிமிடம் அந்த வீரனின் இடத்தை நிரப்பி தோழர்களிற்கு தெம்பூட்டி மன்னார்த் தளபதி ஆனான். சிங்கள இராணுவத்தை ஓடஓட விரட்டினான். மன்னார் மண்ணிலே புதிய வரலாற்றை எழுதினான். தளபதி கிட்டு காலை இழந்த போது தேசியத் தலைவரினால் யாழ்ப்பாணத் தளபதியாக ராதா நியமிக்கப்பட்டான்.



மன்னார் பொலிஸ் நிலையத்தாக்குதல் யாழ். கோட்டை இராணுவ முகாம் தாக்குதல், காங்கேசன்துறை காபர் வியூ முகாம் தாக்குதல், தளபதி விக்டரின் வீரச்சாவின் போதான தாக்குதல் என்று ராதா பங்குபற்றிய தலைமை தாங்கிய தாக்குதல்களை பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம்.

சிறீலங்கா அரசு கண்ணிவெடித் தாக்குதல்களிற்கு உடையாது என்று மிகவும் நம்பிக்கையோடு கொள்வனவு செய்த "பவல்" கவச வாகனங்கள் இரண்டு ஒரு தைப்பொங்கல் நாளிலே பானைகள் பொங்கி நுரை சொரியும் போதிலே ராதா கண்ணிவெடிகள் மூலம் தகர்த்தெறிந்து தமிழர்களின் இதயங்களில் நம்பிக்கையை விதைத்தவன். இதுவும் ராதாவின் மிகப் பெரும் சாதனைகளில் ஒன்று. தமிழீழத்திற்கு வெளியேயும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ராதா மேற்கொண்ட பணிகள் மகத்தானவை.

சண்டைகளில் மட்டுமல்ல அவன் வீரன். புகைப்படக் கலையில் மக்களோடு பழகும் விதத்தில் போராளிகளை அரவணைப்பதில்....... இவ்வாறு அவன் ஆளுமையின் வீச்சு எல்லாவற்றிலுமே நிலைத்திருந்தது. தமிழுடன் ஆங்கிலமும், சிங்களமும் அவன் நாவில் அழகாகப் புரளும்.

இறுதியாக 20. 05. 1987 அன்று எந்த மண்ணிலே சுதந்திரக்காற்று வீச வேண்டும் என்று துடித்தானோ, எந்த மண்ணிலே மக்கள் நிம்மதியாக வாழவேண்டுமென்று நினைத்தானோ அந்த மண்ணுக்கே தன்னை உரமாக்கிக் கொண்டான்.

மிகவும் நெருக்கடியான காலகட்டங்களிலெல்லாம் தேசியத் தலைவருடன் துணையாக நின்று நெருக்கடிகளைச் சமாளித்தவன் ராதா. தேசியத் தலைவரின் நன்மதிப்பிற்குப் பாத்திரமான ராதாவின் இழப்பு எமக்குப் பேரிழப்புத்தான்.

ராதா! நீ மறைந்தாவிட்டாய். இல்லையே. உந்தன் நீங்காத நினைவுகள் எங்கள் இதயங்களில் தினம் தினம் எழுந்து ஆர்ப்பரிக்கின்றனவே. விடிவொன்று புலர்கின்ற நாள்வரையில் உந்தன் இலட்சியக் கனவுகளைச் சுமந்தபடி எங்கள் பயணம் தொடரும்.

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிங்களம் தோண்டும் புதைகுழி!

இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பதே தனது நோக்கம் என்பதைச் சிறீலங்கா அரசு மீண்டும் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. யாழ். குடாநாட்டுக்கான தரைவழிப்பாதையினைத் திறப்பதாகக் கூறிக்கொண்டு இம்மாதம் 13ம் திகதி சிறீலங்கா அரச படைகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு படையெடுப்பு இதனைத் தான் செய்தியாகக் கொண்டுள்ளது.

சிங்களப் பேரினவாதிகளுக்கு மகிழ்வூட்டும் நோக்குடன் 'வெற்றி நிச்சயம்' என்ற குறியீட்டுப் பெயருடனான இவ் இராணுவ நடவடிக்கையில் 20,000க்கும் மேற்பட்ட படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தன்னால் திரட்டக்குடிய அதி உச்ச இராணுவ வளங்களைத் திரட்டி, சிறீலங்கா படைத்தலைமை ஆரம்பித்துள்ள இவ் இராணுவ நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம் பெயர வேண்டிய நிலையும் தோற்றம் பெற்றுள்ளது.

இப்பத்தியினை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில், சிறீலங்கா படையினரின் முன்னேற்றம் விடுதலைப் புலிகளின் பலத்த பதிலடித் தாக்குதலால் ஓமந்தைப் பகுதியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இதேவேளை எரிமலையின் இவ் இதழ் உங்கள் கைகளுக்கு கிடைக்கும் போது கள நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருத்தலும் இயல்பானது.

இவ் இராணுவ நடவடிக்கை மூலமாக அரசு முனையும் இலக்குத் தான் என்ன? அவ் இலக்கினை அடைய முயற்சிப்பதன் ஊடாக அரசு சாதிக்க விரும்பும் விடயங்கள் எவை?

நாம் மேலே குறிப்பிட்டவாறு, யாழ். குடாவுக்கான தரைப்பாதை ஒன்றினைத் திறப்பதனைத் தான் அரசின் இலக்காக வைத்துக் கொண்டால், அத்தகைய பாதை ஒன்றினைத் திறப்பது மூலம் இரண்டு வகையான நன்மைகளை அடைந்து கொள்ள அரசு விரும்புகிறது எனலாம்.

ஒன்று, யாழ். குடாநாட்டினை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தினருக்குத் தேவையான விநியோகங்களைத் தரை வழிப்பாதையின் மூலம் மேற்கொள்வது. கடல் வழி, வான் வழி விநியோகங்கள் மிகுந்த செலவினை ஏற்படுத்துவதும், அப்பாதைகள் புலிகளின் தாக்குதலால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதும் இத்தகைய தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பதற்கான அவசியத்தினை சிறீலங்கா அரசு தரப்புக்கு ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவது, வவுனியா – கிளிநொச்சியினை கண்டி வீதியூடாக இணைத்து தரைவழிப்பாதையினை உருவாக்க முடியின், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பரந்த வன்னிப்பகுதியினை இரு கூறுகளாகப் பிரித்து, விடுதலைப்புலிகளின் நகர்வாற்றலைக் கட்டுப் படுத்திப் பலவீனப்படுத்தலாம் என்ற எண்ணம்.

இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழர் நிலங்களை ஆக்கிரமிக்கும் போதெல்லாம் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளையும் பலவீனப் படுத்துகிறோம் என சிங்களப் படைத்தரப்பு கதை கூறும் போது, ஒருவிடயத்தை வசதியாக மறந்துவிடுகிறது. ஒவ்வொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போதும் தனக்கான புதைகுழியினைத் தானே தோண்டிக் கொள்கிறது என்பதே அவ்விடயமாகும்.

1991 ஆம் ஆண்டில் ஆக்கிரமித்த பூநகரிப் பகுதியில் 1993 இல் பூகம்பம் வெடித்து. அப்பகுதி இராணுவத்தினரின் புதைகுழியாக மாறியது. 1996 இல் முற்றாகவே அவ் இடத்தை விட்டு நகரவேண்டிய நிலை இராணுவத்தினருக்கு ஏற்பட்டது. 1995 இல் யாழ் குடா நாட்டை ஆக்கிரமிக்க முற்பட்டபோது தென் தமிழீழப்பகுதி படையினரின் புதைகுழியாக மாறத் தொடங்கியது. படை முகாம்களை மூடி பெரும் பகுதி நிலத்தினை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்துவிட்டு ஒதுங்கவேண்டிய நிலை படையினருக்கு ஏற்பட்டது. 1995 டிசெம்பர் 5ம் திகதி யாழ் மண்ணில் சிங்களக் கொடி ஏற்றிக் குதூகலித்த போது முல்லைத்தீவில் இராணுவத்தினருக்கான புதைகுழி தயாராகத் தொடங்கிவிட்டது. இப்படியாக எத்தனையோ படிப்பினைகள் இருந்தும் சிங்கள அரச தலைமையோ அல்லது படைத் தலைமையோ அதனை இன்றுவரை புரிந்து கொண்டதாக இல்லை. சிங்கள பௌத்த இனவாத வெறி நிறுவனமயப்பட்டு, ஆழப்புரையோடி இருப்பதனால் தான், தாம் தமக்கே தோண்டும் புதைகுழிகளை இவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை போலும்.

சிங்கள அரசு தரப்போ அல்லது படைத்தரப்போ எண்ணுவது போல இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அடிமை கொண்டு விடவும் முடியாது; இராணுவ அழுத்தங்கள் மூலம் அரைகுறைத் தீர்வொன்றினைத் தமிழ் மக்கள் மீது திணித்து விடவும் முடியாது. தமிழ் மக்களின் முன்னணிப் படையாக, அரசியல் தலைமையாக இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பினதும் தேசியத் தலைவரதும் உறுதியின் முன்னே சிங்கள பௌத்த பேரின வாதம் தோல்வியினைத் தழுவும் என்பது திண்ணம்.

உலக வரலாறு, ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நடாத்துபவர்கள் தொடர்பான பரிதாபகரமான ஒரு உண்மையினைக் குறித்து நிற்கிறது. ஒரு ஆக்கிரமிப்பாளனின் வீழ்ச்சியில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் இருந்தும், ஆக்கிரமிப்பு வெறி காரணமாய் அதனை உதாசீனம் செய்து தானும் வீழ்ந்து கொள்ளும் இன்னொரு ஆக்கிரமிப்பாளனைப் போல சிறீலங்காவின் சிங்களத் தலைமை ஆக்கிரமிப்பு யுத்தத்தினை நடாத்திக் கொண்டிருக்கும் போதே தனது வீழ்ச்சிக்கான புதைகுழியினையும் தோண்டிக் கொள்கிறது.

**- திலீபன்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒன்றுசேரும் சிங்கள இனவாதம்

## சந்திரிகா அரசின் புதிய முயற்சிகள்



பதினாறு வருடங்களுக்கு முன்னர், கொடியோரால் தீ மூட்டி எரிக்கப்பட்ட யாழ் பொதுநூலகத்தை மீளக்கட்டியெழுப்புதல் என்ற "பிடிவாதமான" அறிவிப்போடு., மூன்றாண்டுகளைக் கடக்கும் நிலையிலுள்ள சந்திரிகா அரசு, இனப்பிரச்சினையைத் தீர்த்துவைத்தல் என்ற பிரதான தேர்தல் வாக்குறுதியை காலில் போட்டு மிதிக்கும் செயற்பாட்டிலேயே பிரதானமாக கவனம் செலுத்திவருகின்றது.

பௌத்த சிங்களப் பேரினவாதப் பெரும் பூதத்தின் கோரவெறித்தனத்தை நினைவுபடுத்தும், யாழ்நூலக இடிபாடுகளை, செங்கல் கொண்டும் சீமெந்து கொண்டும் சரிப்படுத்த முனையும் சந்திரிகா, உலக அரங்கில், தனது அரசு பெற்றுவரும் பொது அபிப்பிராயத்தை மறைத்து பூசிமெழுக முற்பட்டிருப்பதையே தற்போதைய அறிவித்தல் வெளிப்படுத்துகின்றது.

பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கி யாழ்நூலகத்தை மீளக்கட்டியெழுப்பப் போவதாக சிறீலங்கா சனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கா விடுத்திருக்கும் அறிவிப்பு, தமிழ்மக்களைப் பொறுத்தவரை, 1994 இல் தேர்தலில் வெற்றி பெற்றகையோடு அவர்விடுத்த இதே அறிவிப்போடு சமப்படுத்திப் பார்க்க முடியவில்லை. அப்போதிருந்த எதிர்ப்பார்ப்பு இப்போது அறவே கிடையாது. இந்த முயற்சியை சந்தேகக்கண்கொண்டே மக்கள் தற்போது பார்க்கின்றனர்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை, யாழ்நூலக எரிப்பு என்பது ஆறாத மாறாத வடு. செங்கற்களும் சீமெந்தும் இதனைச் செப்பனிட முடியாது. அந்த இனவெறித்தீயில் எரிந்து சாப்பராய்ப் போன அறிவுப் பொக்கிசத்தை, விலை மதிப்பில்லா பெரும் சொத்தை எவராலும் மீளத்தரமுடியுமா?

வெறும் மில்லியன்கள் தீர்மானிக்க முடியாத இந்தச் சொத்து அழிந்ததென்பது தமிழ்மக்களுக்கு அழியாத ஒரு பாடத்தைப் புகட்டி நிற்கின்றது. இந்த நூலக எரிப்பையும் அதனை மீளக் கட்டுதல் என்ற அறிவிப்பையும் ஒரு அரசியல் நாடகமாக்கும் பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சிகளில், தமிழ் மக்களிற்கு உரித்தான எதற்குமே பாதுகாப்பில்லை என்பதே அந்த மறக்கப்படமுடியாத பெரும் பாடமாகும்.

நாகர்கோவிலில் பாடசாலையை குண்டுவீசித் தாக்கியும், நவாலித் தேவாலயத்தை குண்டுபோட்டு தகர்த்தும் மனித நாகரீகம் வெட்கித் தலைகுனியும் மனித அவலத்தை மேடையேற்றிய சந்திரிகா அம்மையார், சமாதானத்

பௌத்த சிங்களப் பேரினவாதப் பெரும் பூதத்தின் கோரவெறித்தனத்தை நினைவுபடுத்தும், யாழ்நூலக இடிபாடுகளை, செங்கல் கொண்டும் சீமெந்து கொண்டும் சரிப்படுத்த முனையும் சந்திரிகா, உலக அரங்கில், தனது அரசு பெற்றுவரும் பொது அபிப்பிராயத்தை மறைத்து பூசிமெழுக முற்பட்டிருப்பதையே தற்போதைய அறிவித்தல் வெளிப்படுத்துகின்றது.

**- சுப்பு -**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தின் அடையாளமாக இனவெறி பிடித்த கொடியவர்கள் எரித்த நூலகத்தைத் மீளக்கட்டியெழுப்பப் போவதாக அறிவித்துள்ளது நகைப்பிற்கிடமான வெறும் அரசியல் நாடகமன்றி வேறாக இருக்கமுடியாது.

சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள யாழ்குடாநாட்டில், மக்களின் நாளந்த வாழ்க்கையே ஒரு கேள்விக்குரியதாகியிருக்கும் நிலையில், மக்களின் வாழ்வைச் சுற்றிலும் முட்கம்பி வேலிகளும் மண்மூட்டைகளும், துப்பாக்கி முனைகளும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், மேடும் பள்ளமும் நிறைந்த கரடுமுரடான நாளாந்த வாழ்க்கைப் பாதையில் சோதனை முகாம்களும் தடுப்புமுகாம்களும் அச்சுறுத்திக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், சந்திரிகா அம்மையாரின் இந்த யாழ்நூலக புனர்நிர்மாண அறிவிப்பு ஆச்சரியத்தைத்தான் ஏற்படுத்துகின்றது, பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் சூதாட்டத்தில் தமிழர்களது பெருமைக்குரிய யாழ் நூல்நிலையம் சூதாட்டப் பொருளாக்கப்பட்டுள்ளது என்பதை தமிழினம் வேதனையோடு நினைத்துப்பார்க்கின்றது.



உலகத்தின் கவனத்தை ஈர்க்கவும், சரிந்துவரும் உலக அபிப்பிராயத்தை நிமிர்த்தவும், பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க இதனைச் சாட்டாக வைத்து, உலக நாடுகளின் உதவிகளைப் பெறவும் சந்திரிகா அரசு, யாழ்நூலகத்தை மீளக் கட்டியமைத்தாலும். அது ஆன்மா அற்ற வெறும் கூடாகவே இருக்கும். இறைவனும் பக்தனும் அற்ற ஆலயத்தைப் போன்றே அது காட்சிதரும்.

சந்திரிகா அம்மையாரின் ஆட்சி பற்றி, ஆரம்பத்தில் உலக அரங்கில் இருந்த நல்லெண்ண மாயை மெல்ல மெல்ல விலக ஆரம்பித்திருக்கின்றது. விடுவிக்கப்பட்ட பிரதேசமாக சிறீலங்கா அரசால் அறிவிக்கப்பட்ட பகுதிகள், திறந்தவெளிச் சிறைக்கூடங்களாய், மனித உரிமைமீறல்களின் கூடாரமாய் ஆக்கப்பட்டிருப்பதை உலகம் மெல்ல மெல்ல உணரத்தலைப்பட்டிருக்கின்றது.

ஒரு இராணுவ இயந்திரத்தின் பிடியில் தமிழ்மக்களின் வாழ்க்கை சிக்குண்டுள்ளதை உலக நாடுகள் புரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கின்றன.

இதற்கிடையில், ஒரு சமாதான நாடகம் பரபரப்பாக அரங்கேற்றப்பட்டது. இரு பிரதான சிங்களக் கட்சிகள் உடன்பாடுகண்டுள்ளன என்ற பரபரப்பான செய்தி, செய்தித் தாபனங்களுக்கு தீனிபோட்டன. பிரித்தானிய அரசின் துணையுடன், இருபிரதான கட்சிகளும் பரஸ்பரம் கடிதங்களைப் பரிமாறிக்கொண்டன. சந்திரிகா அம்மையாரின் அரசு எடுக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிக்கு குறுக்கே நிற்கமாட்டோம் என்ற எதிர்க் கட்சியின் ஒப்புதல், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக சித்தரிக்கப்பட்டது. இதோ இனப்பிச்சினைக்கான தீர்வு மிகவிரைவில்... என்று மக்களை வாய்பார்க்க வைத்து விட்டு, அடுத்தகட்ட தாக்குதல் நடவடிக்கை குறித்து சந்திரிக்கா அரசு தீவிரமாக சிந்தித்துவருகின்றது.

**தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வுக்கு எதிராக, பௌத்த சிங்களப் பேரினவாதிகள் ஒரு குடையின் கீழ் வருகின் றார்கள் என்றால் தமிழீழ விடுதலைப் போரின் வெம்மையைத் தனித்துச் சந்திக்க அவர்களால் முடியவில்லை என்பதே பொருள்.**

விடுதலைப் புலிகள் வலியுறுத்தும் மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை புறந்தள்ளி, ஆயுதங்களைக் கையளித்தல் என்ற காலத்துக்கு சிறிதுமே ஒத்துப் போகாத நிபந்தனையை முன்வைத்து, சமாதானப் பாதைக்கு முட்டுக்கட்டை போட்டு, ஒரு பெரும் போருக்கான பாதையமைக்க சந்திரிகா அரசு முற்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் ஆக்கிரமித்து நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கான, விநியோகப் பாதையமைத்தலே சந்திரிகா அரசின் அடுத்த இலக்காக உள்ளது.

குடாநாட்டை இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டாலும், அடுத்தடுத்து அது பெற்றுவந்த வரலாற்றுத் தோல்விகளின் வலி சிறீலங்கா அரசை தூங்கவிடாமல் செய்துகொண்டிருக்கின்றது. இன்னும் பெறப் போகின்ற தோல்விகள் குறித்து சிறீலங்கா அரசு அச்சம் கொண்டுள்ளது. இந்த நிலையிலேயே அதற்கு ஒரு துணை தேவைப்பட்டிருக்கின்றது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில் அது மேற் கொள்ளும் இன அழிப்புப் போருக்கு, அரசியல் ஆதாயத்தோடுதன்னும் எதிர்ப்புக்காட்டாத எதிர்க்கட்சி தேவைப்படுகின்றது. தமிழ்க் குழுக்களும், சிங்களக் கட்சிகளும் ஒத்து ஒருமித்து தீர்வு குறித்து ஒருமனதாகி நிற்கின்ற நிலையில், அம் முயற்சிக்கு எதிராக விடுதலைப் புலிகள் நிற்கின்றர். அவர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை நியாயமானதே என சாதிக்கவேண்டியுள்ளது. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை என்ற ஆன்ம உயிரைக் கசக்கி வீசவே சந்திரிகா அம்மையாருக்கு இந்தத் துணை தேவைப்படுகின்றது.

இந்தக் கூட்டு எதைக் காட்டுகின்றதென்றால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியையும் வீச்சையுமே காட்டுகின்றது. தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வுக்கு எதிராக, பௌத்த சிங்களப் பேரினவாதிகள் ஒரு குடையின் கீழ் வருகின்றார்கள் என்றால் தமிழீழ விடுதலைப் போரின் வெம்மையைத் தனித்துச் சந்திக்க அவர்களால் முடியவில்லை என்பதே பொருள். இந்த இனவாதக் குடைக்குள் நின்று, அந்த இனவாதிகளுக்கு சாமரம் வீசிக்கொண்டிருக்கும் தமிழ்க் குழுக்களை நினைக்கும் போதுதான் தமிழ் மக்களிற்கு வெம்மை தாங்கமுடியாமல் இருக்கின்றது. ★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானத் தீர்வு யோசனை சம்பந்தமான வெள்ளை அறிக்கை



"ஆயிரம் இடங்களிலிருந்து எதிர்ப்புக்கள் எழுந்தாலும், முழுமையான பிரதேச சுயாட்சியை அளிக்கும் சமஷ்டி ஆட்சி முறையே இனப்பிரச்சினைக்கான ஒரே ஒரு தீர்வு!" 1926. ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா நிகழ்த்திய உரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அதே ஆண்டில், 'மோனிங் லீடரு'க்கு அவர் எழுதிய கட்டுரையிலும் அவருடைய இந்தக் கூற்று இடம்பெற்றது.

"வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு சமஷ்டி ஆட்சி முறையே சிறந்த தீர்வாகும்!" என ஜே. ஆர். ஜெயவர்த்தன 1995–ஜனவரி 6–ம் திகதி 'ஸண்டே ரைம்சு'க்கு செவ்வி அளித்தார்.

சமஷ்டி ஆட்சிமுறைதான் இனப்பிரச்சினைக்கான ஒரேயொரு தீர்வு என்பதை தான் அதிகாரத்துக்கு வருவதற்கு வெகு முன்னதாகவே பண்டாரநாயக்கா குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியாக அதிகாரத்தில் வெகு காலமாக அமர்ந்திருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பதவியிலிருந்து ஒய்வுபெற்ற பின்பு, சமஷ்டி ஆட்சிமுறையே சிறந்த தீர்வு என்ற முடிவுக்கு வந்தார்.

பதவியில் இல்லாதபோது சிறந்தது என அவர்கள் கூறும் சமஷ்டி ஆட்சி முறையை, பதவிக்கு வந்ததும் உதாசீனம் செய்வதுதான் பிரச்சினையாகும். பதவியில்லாதபோது சிங்களத் தலைவர்கள் விதந்து உரைப்பதற்கும், பதவிக்கு வந்ததும் அவர்கள் செய்வதற்கும் இடையே உள்ள பேதமே இலங்கையின் சோக வரலாற்றிற்குக் காரணமாக உள்ளது.

இவ் விடயத்தில் சிங்களத் தலைவர்கள் பல தலைகள் கொண்ட புராணக்கதைப் பாம்பாக இருக்கின்றனர் – பல தலைகளல்ல – இரு தலை கொண்டவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அவர்களது சொல்லையும் செயலையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது நமக்குப் புலனாகிறது.

சிங்களத் தலைவர்கள் தமிழர்களின் வாக்குச் சீட்டுக்களைப் பெறுவதற்கு சூரியனையும் சந்திரனையும் கூடத்தருவதாக வாக்குறுதி அளிப்பார்கள். ஆனால், வாக்குறுதிகள் எவ்வளவு வேகமாக அளிக்கப்பட்டதோ அதே வேகத்தில் அந்த வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டுவிடுகிறார்கள்.

தீக்கோழியைப் போன்று தலையை மணலுக்குள் புதைத்துக் கொண்டு சந்திரிகா வெண்புறாவாக இறக்கைகளை விரிப்பது இன்று தெளிவானதொரு விடயம். இந்த வெண்புறாவின் எதிர்கால நடவடிக்கைகள் எவ்வாறு அமையப் போகின்றன என்பதை அறிய விழைவது யாருக்கும் இயல்பாகவே எழக்கூடிய எண்ணந்தான்.

மாவட்ட சபைகளை அமைப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை 1965–ல் ஐக்கிய தேசியக் கட்சி, சமஷ்டிக் கட்சியுடன் செய்துகொண்டது. 1967–ல் மாவட்ட சபைகள் சம்பந்தமான வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது மட்டுமே அந்த ஒப்பந்தத்தின் ஒரேயொரு பலனாக இருந்தது. இதேரீதியில், சந்திரிகாவின் சமாதானத் திட்டமும் தெரிவுக்குழு நிலையைத் தாண்டி அப்பால் முன்னேறாது என்பது பெரும்பாலும் நிச்சயமாகும். இந்த விடயத்தை நாம் நுணுக்கமாக ஆராய்வோம்.

**மு. திருநாவுக்கரசு**

1. 1995–ஆவணி சமாதான யோசனைகளைப் பார்த்தபோது, சந்திரிகா தனது தேர்தல்கால வாக்குறுதிகளை பெருமளவுக்கு ஒடுக்கி, குறைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

2. 1995–ஆவணி சமாதானத் திட்ட ஆலோசனைகளின் ஆதாரசுருதியான அம்சங்கள் பெருமளவுக்கு வலுகுறைந்தும், கைவிடப்பட்டும் இருப்பதை, தற்போது முன்வைத்துள்ள சமா



தானத்திட்ட யோசனைகளுக்கான நகல் நன்கு புலப்படுத்துகின்றது.

3. அண்மையில், மூன்று நிக்காயக்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரோக்கள் உட்பட இரண்டாயிரம் புத்தபிக்குகள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் ஒன்றுகூடி, சந்திரிகாவின் சமாதா தீர்வு திட்டங்களுக்கான நகல் யோசனைகளை நிரா



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கரித்துள்ளனர். இதற்கு மேலும் ஒரு படி அதிகமாக மதுரவேவ சோபித்த தேரோ "தமிழர்களுக்கு என்னதான் குறைகள் உண்டு?" என்று இச் சந்தர்ப்பத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறார். நெருக்கடியான இக் காலகட்டத்தில் இந்தக் கேள்வி அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.

4. "மகா சங்கத்தால் அங்கீகரிக்கப் படாத எதுவுமே தமிழர்களுக்குத் தரப் படமாட்டாது!" என தெரிவுக் குழுத் தலைவரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அண்மையில் மகாநாயக்க தேரோக்களுக்கு உறுதிமொழி அளித்திருக்கின்றார்.

5. தமிழர்களின் அடிப்படை உரிமைகளை பட்டவர்த்தனமாக நிராகரித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நகல்திட்ட யோசனைகளுக்கு உரிய சமயத்தில் பொருத்தமான பல திருத்தங்களை ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கும் எனத் தெட்டத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார்.

6. ஆட்சியில் அங்கம் வகிக்கும் டி.யு.என்.எல்.எப். – லலித் அணி, நகல் திட்ட யோசனைகளுக்கு எதிர்ப்புக்கள் பலவற்றைத் தெரிவித்திருப்பதுடன், பல திருத்தங்களை முன்வைக்கும் தமது எண்ணத்தையும் அறிவித்துள்ளது.



றும் லலித் அணி முன்மொழிந்துள்ளது.

இணக்கம் காணப்பட்டதெனக் கருதப்பட்ட நான்கு அம்சங்களுக்குமே இந்தக் கதியென்றால், ஏனைய யோசனைகளுக்கு என்ன நேரும் என்பதைக் கூறத் தேவையில்லை. ஆகவே, தீர்வுத் திட்ட யோசனைகள், அவற்றின் முழுமையான சராம்சத்துடன் மசோதாவாக உருப்பெறும் என்பது சாத்தியமில்லை. எனவே தான், 1967–ல் ஐக்கிய தேசியக் கட்சி, பாராளுமன்றத்

## இணக்கம் காணப்பட்டதெனக் கருதப்பட்ட நான்கு அம்சங்களுக்குமே இந்தக் கதியென்றால், ஏனைய யோசனைகளுக்கு என்ன நேரும் என்பதைக் கூறத் தேவையில்லை.

இணக்கம் காணப்பட்டதெனக் கருதப்பட்ட, நகல் திட்டத்தின் நான்கு அம்சங்களையும் தெரிவுக்குழு ஆலோசனைக்கு எடுத்தபோது, லலித் அணியானது, பிரதேச ஆளுநர்கள், முதலமைச்சரின் சிபார்சின் பேரில் நியமிக்கப் படுவதற்குப் பதிலாக, ஜனாதிபதியின் சிபார்சின் பேரிலேயே நியமிக்கப்படல் வேண்டும் என முன்மொழிந்துள்ளது. பிரதேச அமைச்சரவையில், நகல் திட்டத்தில் உள்ளவாறு ஆறு அமைச்சர்கள் இருக்கக்கூடாதென்றும், அதற்குக் குறைவான எண்ணிக்கையையே அமைச்சரவை கொண்டிருக்க வேண்டும் என்

துக்கு மாவட்டசபை சம்பந்தமாக சமர்ப்பித்த வெள்ளை அறிக்கையுடன், இன்றைய நகல்திட்ட யோசனைகளை ஒப்பிடுவது பொருத்தமாக உள்ளது.

மாவட்ட மசோதா பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என சமஷ்டிக் கட்சிக்கு உறுதிமொழி அளித்த அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி, அந்த விஷயம் சம்பந்தமாக ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிடுவதற்கு அப்பால் எதுவுமே செய்யவில்லை. மாவட்ட சபை மசோதாவை சட்டமாக்குவதற்கோ, சமஷ்டி ஆட்சிமுறையை அமுல்படுத்துவதற்கோ, அன்றைய சோல்பரி அரசியலமைப்பின்படி, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் அவசியமாக இருக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி, சமஷ்டிக் கட்சி இரண்டும் இணைந்து பாராளுமன்றத்தில் மிகப் பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டிருந்தபோதும், மாவட்ட சபை சம்பந்தமாக ஒரு வெள்ளை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு அப்பால் செல்ல ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை.

இந்நிலையில், தற்போதைய அரசியலமைப்புக்கு அமைய, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை சந்திரிகா பெற்று, அரசயலமைப்பை மாற்றுவதற்கான மசோதாவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும்.

அண்மையில், தெற்கு மாகாணசபையில், நகல் யோசனைகளுக்கு ஆதரவளிக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, அச் சபையின் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் வாக்களிக்காமலே வெளிநடப்புச் செய்துள்ளனர்.

எனவே, நகல்திட்ட யோசனைகள் மசோதா வடிவத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, ஐக்கிய தேசியக் கட்சி வெளிநடப்புச் செய்யும் என்பது வெட்ட வெளிச்சமான விடயம். தற்போதைய நகல்திட்ட யோசனைகள் அரைகுறை ஆதரவுடன்தான் முன்வைக்கப்படுகின்றன. அரைகுறை ஆதரவு மட்டுமே கொண்ட யோசனைகளை, லலித் அணி, ஐக்கிய தேசியக் கட்சி, மகாசங்கம் என்பவற்றின் விருப்பங்களுக்கு ஏற்ப மேலும் வெட்டிக் குறைத்து, அதன் பின்னரும் அது ஒரு மசோதாவாக உருப்பெறுமானால், அதனால் கிடைக்கும் தீர்வு, தீவிர கருத்து மோதல்களையே ஏற்படுத்தும். இது சந்திரிகா நன்கறிந்த ஒன்றாகும்.

ஈற்றில், சந்திரிகா வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பிப்பதுடன் நின்றுவிடவே தீர்மானிப்பார் என்பது மேற்கூறிய விடயங்களைக் கருத்துக்கு எடுக்கும்போது தெளிவாகின்றது. இதன் காரணமாகவே அவர் தெரிவுக்குழுவின் ஆலோசனைக் காலத்துக்கு ஒரு திட்டவட்டமான காலவரையறையை வகுக்கவில்லை.

நாலரை ஆண்டுகள் வெறும் பேச்சுப் பேசிக்கொண்டே உண்டு கழித்து சந்தோஷமாகக் காலத்தைக் கழித்துவிடும் தெரிவிக்குழு.★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மன்னார்க் கடலில் மூழ்கி மாண்டுபோன ஈழத் தமிழர்களுக்கு கண்ணீர் அஞ்சலி

## புதுச்சேரியில் இரங்கல் பொதுக்கூட்டம்

சிங்கள முப்படைத் தாக்குதலில் இருந்து தப்பித்து உயிர்பிழைக்கத் தஞ்சம் தேடி தமிழகம் புறப்பட்ட ஈழத் தமிழர்களின் படகு மன்னார் கடலில் கவிழ்ந்து 130 பேர்களுக்கு மேல் இறந்துபோன துயரச் செய்தி தெரிந்ததே.

19.02.97 அன்று நடந்த இக்கோர விபத்தின்போது இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் 22.02.97 அன்று ஈழம் முழுவதும் துக்கநாள் கடைப்பிடித்தனர். தமிழ்நாட்டில் இயங்கிவரும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு, கடலில் மூழ்கி மாண்ட ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு 07.03.97 அன்று இரங்கல் ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடத்தும்படி வேண்டுகோள் விடுத்தது.

இதற்கிணங்க, புதுச்சேரி முதலியார் பேட்டை வானொலித்திடலில் 07.03.97 இரவு இரங்கல் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருவள்ளுவர் மன்றத் தலைவர் கோ. புகழேந்தி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். ஈழமக்கள் ஆதரவுக் கூட்டமைப்பு அமைப்பாளர் திரு. இரா. அழகிரி வரவேற்புரை நிகழ்த்தினார். புதுவை சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சி. இராம்சிங் (பாட்டாளி மக்கள் கட்சி) முன்னாள் சட்டப் பேரவை திரு. மா. இளங்கோ (தலித்சேனா), செ.முத்து (ம.தி.மு.க), வ.சு. சம்பந்தம் (பகுத்தறிவாளர் கழகம்), கே.எஸ்.மணி (இ.ஸா.க.) (ம.பெ.) வே. அன்பரசன் (தி.க.) கோ. சுகுமாரன் (தமிழ்நாடு இளைஞர் பேரவை), திருமதி. பவானி மதுரகவி (பா.ம.க.), அரிமா வளவன் (ஆதி தமிழர் கலை இலக்கிய ஆய்வு), உள்ளிட்டு பலர் இரங்கல் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி பொதுச் செயலாளர் திரு. பெ. மணியரசன் இரங்கல் உரை நிகழ்த்தினார்.

திரு. பெ. மணியரசன் தனது இரங்கலுரையில்,

இரு நாடுகளுக்கிடையே போர் நடக்கும்போதோ அல்லது ஒரு நாட்டில் விடுதலைப் போர் நடக்கும் போதோ அப்பாவிப் பொதுமக்கள் உயிர் பிழைக்கப் பக்கத்து நாடுகளுக்கு அகதிகளாக வருவது வழக்கம். அவ்வாறு வரும் அகதிகளை வரவேற்று அரவணைப்பது அந்தப் பக்கத்து நாட்டின் சர்வதேசக் கடமை.

ஆனால், ஈழ அகதிகள் தமிழ்நாட்டு எல்லைக்குள் நுழைவதற்குள், சிங்களக் கடற்படை அவர்களைத் துரத்துகிறது. அவர்களிடமிருந்து தப்பி வந்தால் இந்தியக் கடலோரக் காவல் படை அவர்களைத் துரத்துகிறது. அவர்களிடமிருந்து தப்பி வந்தால் தமிழகக் காவல் துறையினர், அகதிகள் வந்த படகுகளைப் பறிமுதல் செய்கின்றனர்.

அகதிகளைச் சோதனை என்ற பெயரில் அவமரியாதையாக நடத்துகின்றனர். அவர்களுள் இளம் ஆண்களையும் பெண்களையும் பிடித்து சிறப்பு முகாம்கள் எனப்படும் புதுவகைச் சிறைச்சாலைக்கு அனுப்புகின்றனர்.

இப்படிப்பட்ட கெடுபிடிகள் இருக்கின்ற காரணத்தினால்தான் ஈழத் தமிழர்கள், கொள்ளளவுக்கு மேல் ஒரு படகில் ஏறி பதட்டமாக அதைச் செலுத்தி விபத்திற்குள்ளாகி இறந்துள்ளனர். தமிழக அரசு இனியாவது, மன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையில் முறையான படகுப் போக்குவரத்தை அனுமதித்து அகதிகள் பாதுகாப்பாக வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

பெ. மணியரசன் பேசி முடித்ததும், இறந்த ஈழத்தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மௌனம் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொண்டார். திடலில் திரளாகக் கூடியிருந்தோர் எழுந்துநின்று மவுன அஞ்சலி செலுத்தினர். திரு. இருதயராஜ் (தி.க.இ.ரா.) நன்றியுரை கூறினார்.

★★★

## தஞ்சையில் இரங்கல் ஊர்வலம்

19.02.97 மன்னார்க் கடலில் படகு கவிழ்ந்து இறந்துபோன ஈழத் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு தஞ்சாவூரில் 07.03.97 அன்று இரங்கல் ஊர்வலம் நடந்தது. இவ் ஊர்வலத்தை தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி ஏற்பாடு செய்திருந்தது.

தஞ்சை மேரி முனையிலிருந்து புறப்பட்ட இரங்கல் ஊர்வலத்திற்கு தோழர் த.கா. பரமசிவம் தலைமை தாங்கினார். முக்கிய வீதிகள் வழியாக வந்த ஊர்வலம் பழைய பேருந்து நிலையம் அருகில் முடிவடைந்தது. அங்கு தோழர்கள் க.பழநி மாணிக்கம் (த.தே.பொ.க. மாவட்டச் செயலாளர்) அய்யனாபுரம் சி. முருகேசன் (தமிழர் தேசிய இயக்க மாவட்டத் தலைவர்), பழ. இராசேந்திரன், ஆ. சண்முகம், சி. அன்பழகன், நா. சேகர், பி. முருகையன் (த.சே. பொ.க) ஆகியோர் இரங்கல் உரையாற்றினர். இறுதியில் 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர்க்கால நெருக்கடியும் கலாச்சார விடையளிப்பும்

அ. கேதீஸ்வரன்



தமிழர் தம் வாழ்வியலை பார்க்கும் ஒருவனுக்கு அந்தச் சமூகத்தின் உள்ளகச் சூழல் சுமந்து வருகின்ற துன்பியல் ஒரு கணம் இதயத்தை இறுகச் செய்யும். மறு நிலையில் பொதுச் சூழல் என்பதனைப் பார்க்கும் போது அது இவர்களின் தியாகம், வீரம், சாதனை என்பவற்றின் பூரிப்பில் திணறச் செய்யும். இந்த இரு நிலை தரிசனத்துக்கும் அடிப்படையாகவுள்ள சுய உரிமைப் பற்றுதல், தோற்றுவிக்கக் கூடிய மாற்றங்கள், பயணப்பாதையின் இறுதி இலக்கு நிறைவுறும் வரை ஏற்பட்டுக்கொண்டுதான் இருக்குமெனினும், தமிழர் கலாச்சாரத்தின் பிரதான செயலாக்கம் இந்த நிலைமைகளை எல்லாம் தீர்வு நோக்கி எடுத்துச்சென்று பயணிப்புப் பாதையை உறுதிப்படுத்தும் கடமைப்பாடுடையதாகும். துன்பியலை தீர்க்கும் செயல் கலாச்சாரத் தளத்தைச் சார்ந்த அம்சமாக கருதும் சமூகவியலாளர்களின் கருத்துத் தளத்தில் நின்று, இயக்க முறையாக சமூக அமைப்பில் காத்திரம் மிக்க செயல்பாட்டைப் புரிந்து வருகின்ற நிறுவன அமைப்புக்களும் அதன் செயல்வீச்சுக் குறித்தும் ஒரு நோக்காகவே இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

தொடரான இடப்பெயர்வுகள் பலவற்றின் பின்னரும் வாழ்வை நிலைப்படுத்திக்கொள்ள எம்மக்கள் கொண்டிருக்கும் உறுதி தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடாகும். தேசிய பற்றுறுதியுடன் சமூக அமைப்பாக்கலில் தனி நிலைப்படுகின்ற சமூக குழுமத்தின் மெய்யியல் இதுவாகும். இந்த வகையில் இயங்கிக்கொண்டிருக்கும் எமது சமூகத்தின் துன்பியல் பாரம் எப்படிக் குறைக்கப்பட முடியுமோ அந்தச் செயலாக்கம் எமது விருப்பாக முன்னுருமைப்படுத்தப்பட வேண்டும். இந்த அடிப்படையில் எமது இடர்கள் பலவற்றின் பிரதான செயற்புலம் பொருளாதாரக் காரணிகளில் இருந்துதான் உருப்பெறுகின்றன. இந்தப் பொருளாதாரத்தளத்தின் சரிவே எமக்கெதிரான பிரதான உள்ளகச் சவாலாக மாறிவருகிறது. எனினும் இவற்றுக்கு எதிராக விழிப்புப் பெற்று செயற்பட்டு வரும் துறைசார் நிறுவனங்களினால் மட்டும் இந்த நிலைமையை வெற்றிகொள்ள முடியுமா ன்பதும் முக்கியமானதாகும். எந்த ஒரு சமூகத்தின் உள்ளகச் சூழலிலும் இயங்கிக்கொண்டிருக்கும் நிறுவன அமைப்புக்கள், முகாமையியல் முறைகள், சட்டம், தொழில்நுட்பம், அரசியல் நெறிமுறைகள், பொருளாதாரக் கொள்கை என்பவற்றின் ஒருமித்த செயற்பாடுகளின் செயல்திறனுடைய ஆதரவுதான் இந்தப் பிரச்சினையை வெல்லும் மார்க்கமாக கருதப்படுகிறது.

எந்தவொரு போரரங்கும் மக்களின் இயல்பு வாழ்வின் மீது முதலில் விளை



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விக்கும் தாக்கம் அவர்களது பொருள் சார் நலனின் மீதே ஏற்படுத்தப்படுகிறது. அவற்றை நாம் இரு வகைகளாகப் பிரித்து நோக்கலாம்:

1. பொருட்கள், சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய கொள்வனவு வலு இழந்து போதல்

2. மக்களின் தேவைக்கான நுகர்வுப் பண்டங்கள் கிடைக்காது போதல்

முதலில் பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யக்கூடிய கொள்வனவு வலு (Purchasing Power) இழந்து போதல் என்பது வருமானத்தைத் தந்த ஆக்க வளங்கள் கைவிடப்படல், தொழிலிழப்பு, வாழ்வாதாரத்துக்கு உதவி தந்த துணைத் தொழில்களின் இழப்பு, பொருள் தட்டுப்பாடு காரணமாக ஏற்பட்ட விலைவீக்கத்துக்கு (Price Influation) உட்பட்ட பொருட்களை நுகருவது என்பன காரணமாக ஏற்படுவதாகும்.

அடுத்து மக்களின் நுகர்வுப் பண்டங்கள் கிடைக்காது போதல் என்பது எதிரியின் திட்டமிட்ட செயல்பாட்டினாலும், உள கட்டமைப்பில் ஏற்படக்கூடிய தொடர்புத் தன்மை அறுக்கப்படும் போதும், உள்ளூரில் இருந்த உற்பத்தித் துறைகள் செயல்படக்கூடிய சூழல் இழக்கப்படும்போதும் ஏற்படக்கூடியதாகும். இந்த வகையில் எமது சூழலில் திட்டமிட்ட எதிர்தரப்பு நடத்தையே மிகப் பெரிய காரணியாக செயற்படுகிறது. இது சமூக நோக்கில் இரு நிலை விளைவுகளை உருவாக்க வல்லதாகும்.

இவ்விரு பெரும் நெருக்கடிகளில் மிகவும் அபாயகரமான சமூக விளைவுகளை கொள்வனவு மீதான வலுவின் உழப்பு ஏற்படுத்தக்கூடியதாகும். தற்சார்புடைய வாழ்வை தங்கியிருப்பு வாழ்வாக மாற்றல், சமூக பொறுப்புணர்வை மிக உயர்ந்த மட்டத்துக்கு எடுத்துவரல், சமூக பிறழ்வுகளையும், ஒழுக்க முரணையும் ஏற்படுத்துதல், போசாக்கின்மை, நோய் எதிர்ப்பின்மை காரணமாக உயிரிழப்பு, விருப்பம் சார்ந்த முதலீடின்மை போன்ற விளைவுகள் மூலம் எமது சமூக அசைவியக்கத்தில் கலாச்சாரப் பிறழ்வை நிர்ப்பந்திக்கக்கூடியதாகும்.



இந்தவகையில் இவற்றின் மீதான தடுப்பு முயற்சிகள் பற்றிய எமது அனுபவ தளத்தை நோக்குமிடத்து இடப்பெயர்வு காரணமாக மிகை வருமானத்தைத் தந்த ஆக்க வளங்கள் கைவிடப்படுவது எந்தவொரு சமூகத்திலும் இயல்பானது. எனினும், புதிய நம்பிக்கையுடன் கூடிய இருப்பை மீண்டும் ஏற்படுத்துவதற்கென புதிய பகுதிகளில் முயற்சிகளைத் தொடங்கக்கூடிய வளங்களை நோக்கி இயப்பெயர்வாளர் எடுத்துச் செல்லப்படல் வேண்டும். இதற்கென செய்கை பண்ணக்கூடிய நிலங்கள், நீர்ப்பரப்புக்கள், தொழில் சார் துணை வளங்கள் என்பன எமது தேசத்தில் நிறையவேயுள்ளன. ஆனால் இவற்றினைப் பற்றிய செய்திகள் மக்களை சென்றடைவதில் காலத்தோடு இணைய மறுக்கின்றன. இடமாற்றம் நடக்கும் நேரம் வழிப்படுத்துனர் எவருமே காணக்கிடக்காமை மக்களின் திட்டமற்ற குடியிருப்புக்களை உருவாக்கக் காரணமாகிறது. நிவாரணப் பணிகளுக்கென செயல்படும் அமைப்புக்களும், தமது பணிகளில் கொள்வனவு சக்தியை இணைத்துக்கொண்டு தமது வரையறைகளைக் கொள்ளாது, மனிதாபிமான நோக்காக மட்டும் கருதி சுயவிருப்பு வாழ்விடங்களாக இந்த வளமற்ற குடியிருப்புக்களை அங்கீகரித்து விடுவதால் பின்னரான காலத்தில் பல உற்பத்தி முயற்சிகளை பங்களிக்கும் நிலையில் இருந்து இவர்கள் கைவிடப்படுகின்றனர். இன்றைய நிலையில் வளமற்ற, திட்டமிடல் எதுவுமற்ற வாழ்விடங்களைக் கொண்ட இடப்பெயர்வாளர்கள் வளம் சார்ந்த பகுதிகளை நோக்கி தொழில்த்துறை இலக்கோடு நகர்ந்து செல்ல வழிகாட்டப்படல் வேண்டும். இந்த முயற்சிக்கென பலதரப்பட்ட நிறுவனத்தரப்பாரும் தமது பங்களிப்பை சமூகப் பொறுப்புடன் வளங்க முடியும்.

**இன்றைய நிலையில் வளமற்ற, திட்டமிடல் எதுவுமற்ற வாழ்விடங்களைக் கொண்ட இடப்பெயர்வாளர்கள் வளம் சார்ந்த பகுதிகளை நோக்கி தொழில்த்துறை இலக்கோடு நகர்ந்து செல்ல வழிகாட்டப் படல் வேண்டும்.**

மறு நிலையில் ஆதாரவசதிகளுடன் இடம்பெயர்வின் முன்னர் தமது நலன்களைச் சார்ந்து இயங்குமென உருவாக்கிய அரசு சாரா நிறுவனங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் கைவிடப்பட்டு, தனித்துப் போய், ஆதாரமற்றுப்போன மனோபாவத்தை தணிக்கப் பாடுபடுவது அவசியமாகும். மாறாக இந்நிறுவனங்களே இடப்பெயர்வு என்பதனைத் தகுதிக் குறைவாகக் கொண்டு கடன்களைத் தரமறுத்தல், புதிய தொழில் வளங்களை பங்கீடு செய்ய மறுத்து மாவட்ட எல்லைகளைக் காரணம் காட்டல், தொழிலாக்கமுடைய வேலைத்திட்டங்கள் பலவற்றை நிறுத்திக்கொண்டு வேலை நீக்க அறிவிப்பை விடுத்துக்கொண்டிருத்தல் போன்றன நிறுவன அமைப்புக்களின் சமூகப் பொறுப்புக் குறித்து பல விசனங்களை எழுப்பிவிடக் காரணமாகின்றன.

அடுத்து வாழ்வாதாரத்தை வழங்கி வந்த துணைத் தொழில்கள் சிறுமூலதனத்துடன் இலகுவான முகாமையுடன் தொடங்கப்பட்டு சிறிய வருமானத்தைத் தந்த தொழில்களைக் குறிக்கின்றது. இது இன்றைய இடப்பெயர்வின் சூழ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லில் புதிய முனைப்பான தொழிலைத் தொடங்க பெரும் பங்கை வழங்கக் கூடிய ஒரு தளமாகும். அத்துடன் நிறுவனங்களின் வேலைத்திட்ட உதவியளிப்புடன் விரைவாக மீண்டும் நிலை நிறுத்தக்கூடிய தொழில் வகைகளாக இவையுள்ளன. கோழி வளர்ப்பு, பாவனைப் பொருள் உற்பத்தி, வீட்டுத் தோட்டம், பொதியிடல் போன்றன இதற்கு சில உதாரணங்களாகும். நேரடியாக குடும்பச் செலவினைக் குறைத்து, கொள்வனவு வலுவை சேமிப்பு மூலம் உயர்த்தும் செயலை இத்துறை வளங்கக்கூடியதாகும். இது பேரளவு முதலீட்டுக்குப் புறம்பாக நம்பிக்கை மிக்க மறுவாழ்வுக்கு ஊக்கம் தரக்கூடியதாகும்.

அடுத்து தொழிலிழப்பு என்பது காரணமாக ஏற்படும் கொள்வனவு வலுவின் இழப்பினை நீக்குவதற்கு புதிய தொழிலாக்கங்களை ஏற்படுத்துவதில் உறுதித்தன்மை குறைந்துள்ள நிலையில் சுயசார்பு தொழில்த்துறைகளை நோக்கி புதிய வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொள்வது சாத்தியமானதாகும். தங்கியிருப்போராகவுள்ள குடும்ப அங்கத்தவர் பலரையும் இணைத்து வழங்கக் கூடிய உற்பத்தித் திட்டங்களில் நிறுவன உதவிகள் வழங்கப்படவேண்டும். முன்னர் பழக்கத்தில்லாத புதிய தொழில்களாகக்கூட இவை இருக்கலாம். அதுபோல இலாபத்தை ஈட்டுகின்ற வருமான நிறுவனங்கள் முடிந்தவரை ஊழியர்களை உள்வாங்கிக்கொள்வதும் சுற்றோட்டத்திற்கான கொள்வனவு வலுவை தோற்றுவிக்கும். கூலி கொடுப்பனவு மூலமான கொள்வனவு வலு சுற்றோட்டத்தன்மையுள்ளதாகும், இது மக்களின் தேவைகளை நிறைவாக்க உதவுவதுடன், நிறுவன சந்தை வாய்ப்பையும் உறுதிசெய்யக்கூடியதான இரு பக்க நன்மை கொண்டதாகும்.



அதுபோலவே விலைவீக்கம் காரணமாக எழும் கொள்வனவுச் சக்தித் தேய்வு என்பதில் சுயதேவைக்கான உற்பத்தி அதிகரிப்பும், துணைத் தொழில்களின் உற்பத்தி அதிகரிப்பு என்பன உள்ளூர் நிரம்பலை அதிகரித்து விலைவீக்கம் குறைய வாய்ப்பை ஏற்படுத்துகிறது. அதனுடன் திட்டமிடப்பட்ட இருப்புக் கொள்கை, கட்டுப்பாட்டு விலைநுட்பம், போன்ற பொருளாதார தொழில்நுட்பம், இதனை மேலும் குறைத்துக்கொள்ள உதவக்கூடியதாகும்.

மறு நிலையில் பொருட்களின் கிடைப்பனவில் ஏற்றப்பட்ட தட்டுப்பாட்டை எதிர்கொள்ளவதில் எமது சமூகத்தில் வியத்தகு மாற்றங்கள் நிலைநாட்டப்பட்டுள்ளன. மக்களது நுகர்வுப் பழக்கவழக்கங்கள் மாற்றத்துக்குள்ளாகியுள்ளது. புதிய உள்ளூர் வளங்களை கொண்ட பொருட்கள் ஆக்கப்படுகின்றன. மேலாக தேவைகளில் கூட விருப்புக்கு முன்னுரிமையற்ற அத்தியாவசிய விடயங்களில் மட்டுமே மக்கள் தம்மை இணைத்துக்கொண்டுள்ளார்கள்.

இதுவிடயத்தில் நிறுவனங்களாக நிலைப்படுத்தியுள்ள செயல் தொகுதிகள் இந்த விடயங்களில் தமது பங்களிப்புப் பற்றிய பொறுப்பேற்றலை விளங்கிக்கொள்வது பொருத்தமானது. கலாச்சாரம், நிறுவனம் என்ற அம்சங்கள் தொடர்பான சமூகவியல் ஆய்வுகளின்படி "கலாச்சாரம் என்பது ஒருவன் ஒரு சமூகத்தின் அங்கத்தவனாகவும் அதன் அறிவாற்றல், நம்பிக்கை, கலை, மாதிரியமைப்புக்கள் போன்ற தன்மைகளுக்கும் உள்ளாக்கப்படுதல்" என வரையறுக்கப்படுகிறது. இந்தக் கலாச்சார மூலகத்தில் நிறுவனங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன என்பது பிரான்சிய சமூகவியலாளரான மைக்கேல் குரோசியர் (Michal Crozier) என்பவரது விவாதமாகும். அவரது கருத்துப்படி, "நிறுவனத்தின் தொழில் முறைகளாவன மனிதனின் ஒருமுகப்படுத்தப்பட்ட பிரச்சினைகளின் தோற்றத்திற்கான கலாச்சார விடையளிப்பு" என்கிறார். இவ் அறிவியல் புலத்தினின்று எமது நிறுவனங்களை இந்தப் பொறுப்பேற்றலுக்கு இழுத்து வருவது அவசியமாகும். பரஸ்பரம் துறைசார் தொகுதியாக நிறுவனங்கள் இயங்கும்போது அவை மட்டுமே இப்பிரச்சினைக்கான பொறுப்புடையவர் என நிறுவனங்கள் வாதிடுவது சமூகவியல் நியமங்களுக்கெதிரானதாகும். அதுபோல் முன்னுரிமை குறைந்த எதிர்விளைவுகளை நிலை நிறுத்தாத செயல் திட்டங்களை செயல்படுத்திவிட்டு அதுவே சாதிப்பு எனவும் நிறுவனங்கள் கருதமுடியாது. சமூக மட்டத்தில் தனிமனிதனுக்கு ஏற்படும் பாதிப்பானது அது எல்லாத் துறையினருக்கும் எதிரான விளைவுகளை ஏற்படுத்தவல்லது.

இவ்வகையில் இறுதியாக சமூக மட்டத்தின் வேறுபட்ட பாத்திரங்களைக் கொண்டுள்ள மக்களின் மீது பொருளாதார சரிவும், கொள்வனவு வலு இழப்பும் ஒரே மாதிரியாகவே தாக்கத்தை விளைவிக்கிறது. இதன் காரணமாகவே இப்பிரச்சினையானது சமூக முன்னுரிமையுடையதாகவும் சமூகத்தாக்கத்தினை விளைவிப்பதில் அடிப்படையான ஒன்றாகவும் எமது உள்ளகச் சூழலில் செயற்பட்டு வருகின்றது. இதனைத் தீவிர கவனத்துக்கு கொண்டு வந்து உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் கிடைக்கும் வளங்களை முன்னுரிமை பெறுமானத்தோடு இடமாற்றிக்கொள்வது அவசியமாகும். இதற்கென நிறுவனங்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதும், உள்ளார்ந்த சமூக செயல்பாட்டு அலகுகளும் இன்றைய நெருக்கடியின் விடையளிப்புக்கான மூல உபாயமாகும்.

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூமிப்பம்பரம் சுழல்வது உன் காலின் கீழே.....

என் இளைய தலைமுறையே! எழுக,
உறங்கும் நேரம் இதுவல்ல.... உணர்க.
புலர்ந்தது பொழுது.
பள்ளியெழுந்தருளாய்.
எழுவான் திசையின் அடிவானம்
கழுவி முகம் திருத்தி குங்குமம் பூசிக் கிடக்கிறது.
முற்றத்து மல்லிகைக் கன்னி
பனிநீராடி நிற்கின்றாள்.
குமரியழகோடு தலைவாசலில் காலைப்பொழுது.
குளு, குளுவென்று குளித்து வருகிறாள் காற்றுப்பெண்.
இன்னுமா உறக்கம் இளைய தலைமுறையே! எழுக.
கோயில்மணி வா, வாவென்றழைக்கிறது.
போர்வைவிட்டெழுவாய்.
பச்சைநிறப் பாவாடை கட்டி
வயலெங்கும் பயிர்களின் நடனம்.
சிறகடித்துப் பறவைகள் குரலெடுத்துப் பாடுகின்றன.
கழுத்தில் வெண்டயம் சப்திக்க
உழவுக்குப் போகின்றன இளநாம்பன்கள்.
இன்னுமா உறக்கமென்று
"சென்றி" முடித்த சேவல்கள் கூவுகின்றன.
என் இளைய தலைமுறையே! எழுக.
உன் வேர்களிலும் வீரியம் சுவறட்டும்.
சூரியக்கதிர்களுன் மேனியிற்பட்டுத் தெறிக்கட்டும்.
பாரம் அழுத்தாத பலத்தோடு
வலியன உன் தோள்கள்.
ஆற்று நீரையே தடுத்து நிறுத்த வல்லன
உன் கைகள்.
விழி திறந்து நோக்கின்
எதிரேயுள்ளன எரிந்து போகவல்ல
கனலின் தணல்பூத்த கண்களுனக்கு.
உன் காலின் கீழேதான்
பூமிப்பம்பரம் சுழல்வதறிவாய்.
தாயாள் முலையில் தமிழ்ப்பாலருந்திய
வாயே, உனக்கென் வந்தனங்கள்.
"பாட்டாலிவ் வையத்தைப் பாலித்த" பாரதியின்
கூட்டில் உயிரெடுத்த சிறுகுஞ்சு உன்னருகில்
நீட்டோலையோடு நிற்கின்றேன்.
இளைய தலைமுறையே!
நெருப்பெரியும் நேரம் நித்திரையா கொள்கின்றாய்?
எழுவாயென் இனத்தின் சிறுபொறியே!
போராடும் நாளொன்று புலர்ந்துளது புதிதாய்
ஒரு காலையொழி பரவுகின்றது.
இரு இந்நாளில் நெருப்பாய்.
இதுவுன் நாடிலையாம்.
தனக்குக் கீழேதானாம் நீயென்று
சங்கூதுகின்றான் ஒருவன்.
குதிரையேறிய இன்னொருவன்
உன் தெருவில்......





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரமமதையுடன் உலாவருகின்றான்
விடாதே என்றுன்னை எழுப்புகின்றது
வீரமாகாளியின் கோயில் மணி.
காதில் விழவிலையோ அக்காண்டாமணிச் சத்தம்?
இன்னும் உறங்குதியோ
என் இளைய தலைமுறையே!
வையப் பரப்பெங்கும் ஓடி இளைத்தும்
உய்யவில்லை நீ.
உன் பரம்பரையின் மூத்தோன் கைகட்டி நின்றான்.
குற்றேவல் செய்து குளிர்ந்தான்.
கற்பனைத் தேரில் பவனிவந்து களித்தான்
நிமிரவழி தெரியாது குறுகிக்கிடந்து போனான்.
அனற்குஞ்சே!
அவன் போலவே நீயுமா கிடப்பாய்?
என் கவிதைக்கு நீ பொருளாவதெப்போ?
பாட்டுக்குள் உனைவைத்து நான்பாடவேண்டாமோ?
பூட்டு கவசம் உன் நெஞ்சுச் சுவரில்
சாட்டையெடுத்து விளாசு.
என் சந்ததி நிமிர்ந்ததென்று சந்தோஷப்படுவேன்.
தீயிலெரியுதுன் தேசம்.
வீடிழந்த உறவெல்லாம் வீதியில்.
ஒரு நாயைத் துரத்துவதுபோல
எம்மைத் துரத்துகின்றான் ஒருவன்.
உன் ஊரைப் பார். உறவைப் பார்.
வேரிழந்துபோன வீதிகளைப்பார்.
எல்லாமே கண்ணீரோடு நாளைக் கழிக்கின்றன. கொடுமை இது.
என்ன நடந்தது இந்த மண்ணுக்கு?
அரக்குமாளிகைபோல எல்லாமே எரிகின்றன.
எம்மினமென்ன காலிற்செருப்பா
அறுந்ததும் தூக்கி வீசுவதற்கு?
வழிமறித்தெம்மை வாவென்றிழுத்துச் செல்ல
களவெடுத்துத் திரிகின்றனரா எம் பிள்ளைகள்?
வாணவிளையாட்டு எம் தலைக்கு மேலே....
கொட்டுகிறான் பார் குண்டுகள்.
எழுக என் இளைய தலைமுறையே!
நீயுன் வீட்டுக்கு மட்டுமா விரிந்தாய்?
வானவில்லாக ஜாலம் காட்டிப் போகவா மானுட ஜென்மம்
எடுத்தாய்?
வண்டூதும் மலர்களுன் வாசலில் மலர்ந்துளது. வா வெளியே.
புண்ணாக்குத் தின்னப் பிறப்பெடுத்தவைகூட
புறப்பட்டு மேச்சலுக்குப் போய்விட்டன.
நீ என்ன செய்கின்றாய்?
எழுக என் இளைய தலைமுறையே!

**புதுவை இரத்தினதுரை**

# சிறீலங்காவிற்கான அமெரிக்க இராணுவ உதவி நிறுத்தப்பட வேண்டும்

20–ம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் பல்வேறுபட்ட இனப்போராட்டங்கள் உருவாக்கப் பட்ட அல்லது உருக்குலைந்த தேசங்களில் இடம்பெறு வதை காணக்கூடியதாகவுள்ளது. பொஸ்னியா, ருவாண்டா, மற்றும் செச்சினியன் ஆகியன மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்களின் குறியீடுகளாகத் திகழுகின்றன. ஆனால் மற்று மொரு இரத்தம் சிந்தும் இனப்போராட்டமானது உலகக் கிராமத்தின் பார்வையிலிருந்து தப்பிவிட்டது. சிறீலங்கா அரசின் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமென்ற பிரி வினைவாத இயக்கத்தை முற்றுமுழுதாக அழிப்பதற்கான நடவடிக்கையே இது. இந்தப் போருக்கான குற்றம் யாருக் குரியது என கணிப்பிடுவது இலகுவானதல்ல. விடுதலைப் புலிகள் 1995–ல் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முறிவ டைந்ததைத் தொடர்ந்து போராட்டத்தை மீள ஆரம்பித் தனர். இது சந்திரிகா விஜகுமாரணதுங்காவிற்கு வட கிழக்குப் பிரதேசங்களில் இராணுவம் புகுந்து ஆக்கிரமிப் பதற்கு ஒரு காரணத்தைக் கொடுத்துவிட்டது.

இப்போது இடம்பெறும் வன்முறைகளை யார் ஆரம் பித்திருந்தாலும் பொதுமக்கள் படும் துன்பங்கள் கற் பனைபண்ணமுடியாதளவு கொடூரமாகவுள்ளது. அரை மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். ஏராளமானோர் அகதிமுகாம்களில் நோய்வாய்ப்பட்டு இறக்கின்றனர். அண் மையில் ஜெனிவாவில் இடம்பெற்ற ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்க இராஜாங்க அமைச்சானது யாழ்ப்பாணத்தில் காணாமற்போன 700 பொதுமக்கள் தொடர்பான விடயத்தில் சிறீலங்காவைச் சாடியுள்ளது. மனித உரிமை மீறல்கள் புரிந்த பாதுகாப்புப் படையினருக்கான விசாரணைகள் மிக மெதுவாகவே இடம்பெறுகின்றது.

ஒரு தொடர்ச்சியான கொள்கை அடிப்படையில் அமெ ரிக்க அரசாங்கமானது மெதுமையாக இராஜாங்க மொழி யில் இடம்பெறும் படுகொலைகள், கற்பழிப்பு மற்றும் மக்கள் இடம்பெயர்வு என்பனவற்றைச் சாடுவதிலும் பார்க்க கூடுதலாகச் செய்ய வேண்டும். வாசிங்டன் ஆனது பர்மா, ஈரான், ஈராக் போன்றன புரியும் மனித உரிமை மீறல்களுக்காக அவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை பிரேரிக்க முடியுமாயின் சிறீலங்காவிற்கு எதிராக ஆகக்குறைந்தது இராணுவ உதவிகளுக்கான தடையை அமுல் படுத்தலாம். அமெரிக்க இராணுவ உதவியானது சிறியள வாக இருந்தபோதிலும் அது குறியீட்டளவில் முக்கியத் துவம் வாய்ந்தது. சிறீலங்காவில் இடம்பெறும் இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு கிளின்டன் நிர்வாகமானது இரு தரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை ஆதரிக்க வேண்டும். ஒரு சர்வதேச மத்தியத்துவம் இந்த விடயத்தில் விரும்பத்தக்கது. இதன் இலக்கானது ஒரு மாநில சுயாட்சி அரசமைவைக் கொண்ட ஒரு குறிப்பிடத்தக்க சுயாட்சியை வடக்குப் பிரதேசங்களுக்கு வழங்குவதாக இருக்கவேண் டும். இது ஐக்கிய சிறீலங்காவுக்குள் இருக்கலாம்.

அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'பொஸ்ரன் குலோப்'
ஆசிரியர் தலையங்கத்திலிருந்து மே -12-1997



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஈழத்தமிழின பாதுகாப்புக் கருத்தரங்கு

தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியின் பெரியார் மாவட்டக்கிளை சார்பாக ஈரோடு அருகேயுள்ள சென்னி மலையில் பரணி திருமண அரங்கில் *09.03.97* ஞாயிற்றுக் கிழமை காலை முதல் இரவு வரை ஈழத் தமிழினப் பாதுகாப்புக் கருத்தரங்கு நடைபெற்றது,

காலை, மாலை என இரு அமர்வுகளாக நிகழ்ந்த கருத்தரங்கிற்கு தமிழ்நாடு மாநில லெனினியக் கட்சியின் தலைவர் கி.வே.பொன்னையன் தலைமை வகித்தார்.

“விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீக்கக்கோரி சட்டப் பேரவையில் தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்; தமிழீழத்திலே உணவின்றியும், வாட்டுகின்ற நோய்க்கு மருந்தின்றியும் நொந்துசாகும் தமிழ் மக்களுக்கு தமிழக அரசு நேரடியாக உணவும் மருந்தும் அனுப்புவதுடன் அந்த முயற்சியில் ஈடுபடும் மாந்த நேயப் பற்றாளர்களையும் அனுமதிக்க வேண்டும்; துயருறும் ஈழமக்களுக்கு மருந்து அனுப்ப முயற்சித்ததற்காக சிறைப்படுத்தப்பட்டுள்ள ஆஸ்திரேலிய தமிழ்ப்பேரவைத் தலைவர் மாலினி ராசநாயகம், ஈழவேந்தன், தமிழ்நூல் பதிப்பாளர் சச்சிதானந்தனம் மற்றும் தேசியப் போராளி பாண்டியன், பெ. மணியரசன், சுப.வீரபாண்டியன், இரா. பாவாணன் மற்றும் மருத்துவர் சிறீதர் ஆகியோர் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டும்” என வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காலை அமர்வில் அ.க.பாரி வரவேற்புரையாற்றினார். பொ.வே.இராமானுசம் (தமிழ்நாடு மார்க்சிச லெனினிச கட்சி) ம.தி.மு.க. ஒன்றியச் செயலர் முத்துச்சாமி, தமிழர் பண்பாட்டுக் கழகத்தச் சார்ந்த இரவிக்குமார், பெரியார் மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தைச் சேர்ந்த வடிவேலனார், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

திராவிடர் கழகம் நடுவண் நிர்வாகக் குழு உறுப்பினர் குளத்தூர் ‘தடா’ மணி, தி.க.வைச் சேர்ந்த ‘தடா’ இரத்தினசாமி, ‘தடா’ சண்முகம் ஆகியோர் ஈழத்தமிழர்கட்காகச் சிறை சென்றதைப் பாராட்டிச் சென்றிதழ் வழங்கப்பட்டது.

ம.தி.மு.க. கொள்கை பரப்புத் துணைச்செயலர் பாவாணன் “தமிழன் என்று சொல்லடா! சிறைச்சாலைக்குச் செல்லடா“ என்ற பொருளில் உரையாற்றினார். ‘பொது நோக்கம் கருதி சிறைச்சாலைக்குச் செல்வது தமிழர்கட்குப் புதிதல்ல. நேதாஜி தலைமையில் இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தமிழர் சிறை சென்றனர். அவரது சுதேசி இராணுவத்தில் தமிழர்கள் தான் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். இவர்கள் இந்தியா, பர்மா எனப்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல்வேறு நாடுகளில் சிறையிலிருந்தனர். தமிழக வரலாற்றில் சமஸ்கிருதத்தை எதிர்த்தும், இந்தியை எதிர்த்துப் பலர் சிறைக்குச் சென்றுள்ளனர். உலகிலேயே மருத்துவத்தை முதன்முதலாகத் தமிழில் கற்பித்தவர்கள் ஈழத்தமிழர்கள். உலகில் முதன்முதல் தோன்றிய நெருப்பு வண்ணப்பாறை இருப்பது தமிழீழத்தில்! இப்படிப்பட்ட பெருமைமிகு நாட்டிற்கு ஆதரவுகாட்டியதற்காகவும் தமிழ் ஆர்வலர்கள் தற்பொழுது சிறையில் பூட்டப்படுகின்றனர். காலமெல்லாம் தமிழ் – தமிழர் – தமிழக மேம்பாட்டிற்காக உழைத்த பெருஞ்சித்திரனார் மகன் பொழிலனுக்கு ஆயுள் விதிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது. எவ்வளவோ வழக்குகள் தமிழகத்தில் திரும்பப் பெறப்பட்டுள்ளன. அதுபோலவே பொழிலன் மீதான வழக்கும் திரும்பப் பெறப்படவேண்டும். எவ்வளவு தடைகள் போடப்பட்டாலும் ஈழத்தமிழர்க்கான ஆதரவு, தமிழகத்தில் தொடரும்" என்றார் பாவாணன்.

தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சார்ந்த வழக்கறிஞர் கரூர் குப்புசாமியின் "பறிக்கப்படும் கருத்துரிமை' எனும் உரையுடன் பிற்பகல் அமர்வு துவங்கியது.

"கருத்துரிமை என்பதே மேற்கத்திய சொல்லாடல். இருப்பினும் சனநாயகத்தின் அச்சாணியாக இது விளங்குகிறது. காலம்காலமாக கருத்துரிமைகள் அரசியல் தளத்தில் அங்கீகரிக்கப்பட்டே வந்துள்ளன. லெனினுக்கும், டிராட்ஸ்சிக்கும், காந்திக்கும் நேருவுக்கும், பெரியாருக்கும், அண்ணாவிற்கும் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன. இருப்பினும் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசமைப்பில் கருத்துரிமைகள் கடுமையாக ஒடுக்கப்படுகின்றன. தவிரவும் நிர்வாக அமைப்பு, சமூக அமைப்பு ஆகிய தளங்களிலும் கருத்துரிமைப் பறிப்பு தொடர்ந்து நிகழ்ந்த வண்ணமுள்ளது. கருத்துரிமைப் பறிப்பு மூன்று படி நிலைகளில் நிறைவேற்றப் படுகிறது. முதலில் சரியான கருத்து உருவாகாமல் பார்த்துக்கொள்வது; அடுத்து கருத்தைத் திரித்து, சிதைத்து தவறாகப் பரப்புவது; இறுதியாக, இவ்வளவையும் மீறி கருத்து எழுமானால், அடக்கி ஒடுக்குவது என்பதாக நடைமுறை உள்ளது. மக்களிடம் சரியான கருத்துக்கள் பரவுவதை மறைமுகமாகத் தடுப்பதற்காக 'அனுமதி வாங்கவேண்டும்' என அரசு நிபந்தனை விதிக்கிறது. தமிழீழப் பிரச்சினையிலும் இதே அணுகுமுறை பின்பற்றப்படுவது வருத்தத்திற்குரியது" எனப் பேசினார் பூ.அர. குப்புசாமி.

இரண்டாம் அமர்வில் வாழ்த்துரை வழங்கிய ஜனதா தளத்தின் பெரியார் மாவட்டப் பொருளாளர், கி. வடிவேல் "காந்தியாரின் உண்ணாவிரதக் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்துப் போராடிய ஈழப் போராளி திலீபனின் தியாகத்திற்கு காங்கிரஸ் கட்சியினர் உரிய மரியாதை தரவில்லை. இலங்கையின் இனச் சிக்கலைத் தீர்க்க அகிம்சைக் குழுவைத்தான் இந்தியா அனுப்பியிருக்க வேண்டும். அமைதிப் படையை அனுப்பியது வரலாற்றுத் தவறாகும்.




இந்த அமைதிப் படையும் அமெரிக்காவின் செல்வாக்கால் ஈழத் தமிழர்கட்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. அகிம்சை பற்றிப் பேசிக்கொண்டே காங்கிரஸார், இந்திரா கொலைக்குப் பிறகு 3000 சீக்கியர்களை வெட்டிக் கொன்றனர். மனிதாபிமானமற்ற இக் கோரச் செயலைச் செய்தவர்களில் பலர் இன்றுவரை தண்டிக்கப்படவேயில்லை. முன்பு பாதுகாப்பு அமைச்சராக இருந்த எஸ். பி. சவான் 'அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்புத்தான் ராஜீவ் காந்தியைக் கொன்றது' எனச் சுட்டிக்காட்டினார். அவ் விபரம் விரிவாக ஆராயப்பட வேண்டும்." என வலியுறுத்தினார்.

"தமிழீழமும் இந்திய அரசும்" எனும் பொருளில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த வெங்கட்ராமன் கருத்துரை ஆற்றினார். "ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் அணுகுமுறையில் ஓர் அடிப்படை நோக்கம் இருப்பது நுணுக்கமாகப் பார்க்கும்போது புலனாகும். ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு முன்பும் பின்பும் அந்த நோக்கத்தில் மாற்றமில்லை. இந்து மகா சமுத்திரத்தில் தன் வல்லாதிக்கம் மேலோங்கி இருக்கவேண்டும் என இந்திய ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர். இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுக்களைச் சுட்டிக்காட்ட முடியும். 1970ம்–ஆண்டில் பாகிஸ்தானைப் பலவீனப்படுத்துவதற்காக வங்காளதேசம் உருவாக இந்தியா உதவியது. அதேபோல், 1971–ம் ஆண்டில் இலங்கையை தன் பிடிக்குள் கொண்டுவர, ஜனவிமுக்திப் பெரமுன (JVP) எனும் அமைப்பிற்கு எதிராக அதன் போராட்டத்தை நசுக்க இந்திய அரசு இலங்கைக்கு ஆயுத உதவி அளித்தது. அதேபோல் திம்புப் பேச்சுவார்த்தையும் தொடர்ந்து தோல்வியடைந்தது. அப்பேச்சுவார்த்தையில் போராளிகள் மூன்று அம்சங்களை வலியுறுத்தினர். முதலாவது, இலங்கையில் இரு தேசிய இனங்கள் உள்ளன; இரண்டாவதாக, தமிழர்களுக்கென வரலாற்றுபூர்வமான தாயகபூமி இலங்கையில் இருக்கிறது. மூன்றாவதாக, சுயநிர்ணய உரிமை கோர தமிழர்கட்கு உரிமை உண்டு. இம் மூன்று அடிப்படை அம்சங்கள் இலங்கை அரசால் மறுக்கப்பட்டன. இலங்கை அரசு யாருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும் இனப்பிரச்சினையை அவர்கள் பெரும்பான்மை – சிறுபான்மை என்ற அடிப்படையிலேயே அணுகுகின்றனர். இது இரு தேசிய இனங்களுக்கிடையேயான உரிமைப் பிரச்சினை என்பதை முற்றாக சிங்கள அரசுகள் மறுத்தே வந்துள்ளன. இடையில் சில இடதுசாரி இயக்கங்கள் சிங்களப் பாட்டாளி வர்க்கமும் இணைந்தே போராடவேண்டும் எனப் பேசிவந்தனர். ஆனாலும் இனவெறி மேலாதிக்கம் செலுத்தும் சூழ்நிலையில் இத்தகைய முழக்கம் பொருளற்றதும், நடைமுறைக்கு ஒவ்வாததும் ஆகும். தமிழீழம் இல்லாத, விடுதலைப் புலிகள் அல்லாத ஓர் பொம்மை ஒப்பந்தம் 'இலங்கை – இந்திய ஒப்பந்தம்' என்ற பெயரில் ராஜீவ் காந்தியால் திணிக்கப்பட்டது. இதை 'துக்ளக்' சோவும் மார்க்சீயக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் வானளாவப் புகழ்ந்து வரவேற்றனர். இதிலும் சிங்களவர்களின் ராஜதந்தி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரம் வென்றது. "ஒரு சிறிய நாட்டில், ஜெயவர்த்தனா பெரிய மனிதராக ஓங்கி நிற்கிறார்; ஆனால், ஒரு பெரிய நாட்டில், ராஜீவ் காந்தி சிறிய மனிதராகக் குறுகி நிற்கிறார்" எனப் பத்திரிகைகள் பகிடி பேசின. விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்வதற்காகக் கூறப்படும் காரணங்கள் எதுவுமே நிரூபிக்கப்படாதவை; அவை இட்டுக்கட்டிக் கூறப்படுபவை. தடைக்காக மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, 'விடுதலைப் புலிகள் அகண்ட தமிழீழம் அமைக்க முயல்கின்றனர்' என்று ஒரு பொய்யான காரணம் கூறப்படுகிறது. இதுபற்றி புலிகளின் ஆவணங்களிலோ, பத்திரிகைகளிலோ ஆதாரம் காட்டமுடியுமா? புலிகளின் ஆதரவாளர்கள் என்பவர்கள்கூட இது பற்றி ஒருமுறையேனும் கூறியதில்லை. இரண்டாவதாக, 'தமிழீழ மீட்சிப் படை' என்ற அமைப்பு தமிழகத்தில் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. ஆனால், இது பற்றி சட்டரீதியாக எதுவுமே நிரூபிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை நிலவரம். மூன்றாவதாக, தடைசெய்யப்பட்ட அசாமின் விடுதலை முன்னணிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு உண்டு. அதனால் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது எனக் காரணம் காட்டுகின்றனர். ஆனால் அசாமின் உல்பா இயக்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமுள்ள உறவு உறுதிசெய்யப்படவில்லை. அதுமட்டுமல்ல, இதுபற்றி ஒரு வழக்கு கூட இந்தியாவில் இல்லை என்பதுதான் உண்மை.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளோ, தீவிரவாதிகளோ அல்லர். அவர்கள் விடுதலைப் போராளிகள். ஆனால், உண்மையில் சந்திரிகாதான் பயங்கரவாதி. ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய உரிமையை ஆயுதங்களைக் கொண்டு நசுக்கி அழிப்பது பயங்கரவாதமாகும். இப்பிரச்சினையில் சந்திரிகாவின் அணுகுமுறை சூழ்ச்சிமிக்கதாகும். அனைத்துலக அளவில் தமிழீழத்தை எதிர்த்துப் பொய்ப்பிரச்சாரத்தை பரவலாகவும், வலிமை வாய்ந்த செய்தி ஊடகங்கள் வழியாகவும் நடத்துவது; இந்தியாவைத் தமிழீழத்திற்கு எதிராகத் திருப்புவது; பேச்சுவார்த்தை என இழுத்தடிப்பது ஆகியவையே அவரது சதித்தனமான நடைமுறை உத்தியாகும்.

அண்மையில் தமிழீழத்தில் நடைபெற்ற போரில் இந்திய விமானி ஒருவர் பலத்த அடிபட்டு இறந்துள்ளார். அந்த விமானி இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிக்கச் சென்றவர். இதுபற்றிய முழு விபரத்தையும் இந்தியா வெளியிட வேண்டும்.

இலங்கைச் சிக்கலைப் பொறுத்தவரை இந்தியா நடுநிலை வகிக்கவில்லை. அதுவே போரைத் தூண்டுகிறது என்பதுதான் மறைக்கப்படும் உண்மை" எனக் குறிப்பிட்டார் வெங்கட்ராமன்.

அடுத்து, தமிழீழம் பற்றிய தன் கருத்துக்களை வெளியிட்டார் தமிழர் தேசிய இயக்கத தலைவர் நெடுமாறன். "ஈழ ஆதரவு, தமிழகத்தில் நீறுபூத்த நெருப்பாக உள்ளது. இப்பிரச்சினையில் ஆதரவு சக்திகள் எவை, எதிர்ச் சக்




திகள் எவை என்பது தெளிவாக உள்ளது. தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவும் எண்ணற்ற தமிழின உணர்வாளர்களும் ஆதரவு சக்திகள். அனைத்திந்தியக் கட்சிகள் யாவும் எதிர்ச் சக்திகள். இரண்டுமற்ற நிலையில் தி.மு.க., அ.தி.மு.க. போன்ற கட்சிகள் இருக்கின்றன. கலைஞர், தான் தமிழீழத்தை ஆதரிக்கவில்லையென அண்மைக்காலமாகப் பேசிவருகிறார். ஆனால், தமிழீழ ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து 'டெசோ' எனும் அமைப்பை முன்பு உருவாக்கியிருந்தோம். 'டெசோ' ஆதரவாளர்கள் மூன்று உறுதிமொழிகளை ஏற்கவேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. "இலங்கைச் சிக்கலில், தமிழீழம் ஒன்றே தீர்வு என்பதை ஏற்கிறேன்; ஈழப் போராளிகளுக்கு அனைத்துவிதமான ஆதரவுகளையும் நான் தருவேன்; இதன் விளைவாக மத்திய, மாநில அரசுகள் அடக்குமுறையை ஏவினால், அவற்றை ஏற்பேன்" என்ற இந்த மூன்று உறுதிமொழிகளையும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நடந்த 11 பேரணிகளில் கலைஞர் வாசிக்க, இலட்சக்கணக்கான மக்கள் அதை ஏற்றனர். வரலாறு இவ்வாறு இருக்க, கலைஞர் தற்பொழுது பின்வாங்குவது அழகல்ல.

"அண்டை நாட்டின் இறையாண்மைக்கு ஊறுவிளைவிக்கும் எதையும் நாங்கள் ஆதரிக்கமாட்டோம்" எனப் பேராயக்கட்சி (காங்கிரசு) கூறுகிறது. ஆனால், பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசம்பிரிய கட்சியும் அரசும் ஆதரவளித்தன. பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பறுசிஸ்தான் அமைக்க காபர்கான் போராடிய பொழுது இந்திரா காந்தி அதை ஆதரித்தார். பாகிஸ்தான் அரசு அவரைக் கைதுசெய்த பொழுது, அவரை விடுதலை செய்யவேண்டும் என்று இந்திரா முழங்கினார். அதுமட்டுமல்ல, அவரைப் பாராட்டி, ஐந்து கோடி ரூபாய் இந்திரா காந்தி அளித்தார். காங்கிரசின் பின்னணி இவ்வாறென்றால், பாரதீய ஜனதாக் கட்சியும் இரட்டை வேடம் போடுகிறது. பாகிஸ்தானுக்குள் சிந்துஸ்தான அமைக்க, அத்வானி ஆதரவு தருகிறார். அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களை பத்திரிகையாளர்கள், அகில இந்தியத் தலைவர்கள், அமைச்சர்கள் ஆகியோருக்கு அத்வானியே முன்னின்று அறிமுகம் செய்து வைக்கிறார். ஏனெனில், அத்வானி சிந்துஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு ஓடிவந்த அகதி ஆவார்.

'அகில இந்திய தேசியம்' பேசும் கம்யூனிஸ்ட் கட்சிகள், ஈழத்தைப் பொறுத்தவரை தங்கள் அரசியல் லாபம் கருதி நிலைப்பாடுகளை எடுக்கின்றன. 1946–ம் ஆண்டு ட.இ. ஜோஷி, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காக வாதாடினார். ஆனால் தற்பொழுது 'ஈழம் அமைவதை அனுமதிக்க மாட்டோம்' என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கங்கரையா பிரகடனப்படுத்துகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்காரா, 'ஈழத் தமிழருக்கு சுய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிர்ணய உரிமை உண்டு' என உரத்த குரலில் வலியுறுத்துகிறார்.

இலங்கையிலுள்ள தமிழர்கள் இந்தியாவின்பால் கரிசனம் கொண்டவர்கள். வங்கதேச விடுதலைப் போரின் போது இலங்கைத் தமிழர் தலைவர் செல்வநாயகம், இந்தியாவை முழுமையாக ஆதரித்தார். ஆனால் சிங்களவர்களின் இலங்கை அரசு, நம்மை எதிர்த்தது. பாகிஸ்தானுக்கு ஆதரவாக பல உதவிகள் செய்தது. பாகிஸ்தான் போர் விமானங்கள் கொழும்பு வழியாகப் பறக்கவும், எரிபொருள் நிரப்பிக்கொள்ளவும் அனுமதித்தது. இத்தகைய துரோகியைத்தான் இந்தியா தற்பொழுது ஆதரிக்கிறது.

அமெரிக்கா அண்மைக்காலமாக இலங்கையில் வேகமாகக்காலூன்றி வருவது இந்தியாவின் எதிர்காலத்திற்கு மிகவும் கேடுவிளைவிக்கும். புத்தளத்தில், அமெரிக்க வானொலிக் கோபுரம் நிறுவப்பட்டுவிட்டது. அமெரிக்காவின் வானொலி (Voice of America) இலங்கையிலிருப்பது நம் நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது. நம் இராணுவ இரகசியங்களை இடைமறித்து அமெரிக்கா அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இந்தப் பின்னணியில் ஈழப் போராட்டத்தை மனிதாபிமானத்தோடு பார்க்க வேண்டியது இந்திய அரசின் கடமை. தடை செய்யப்பட்ட உல்பா அமைப்போடு இந்திய அரசு பேசும் பொழுது, ஈழப் போராளிகளை ஒதுக்கிவைப்பது நியாயமல்ல" எனச் சுட்டிக்காட்டினார் நெடுமாறன்.

அடுத்து கருத்துரையாற்றிய தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியைச் சார்ந்தவரும், இக் கருத்தரங்கை சிறப்புற ஏற்பாடு செய்தவருமாகிய கி.வெ. பொன்னையன் தனது உரையில் தற்காலத் தமிழகத்தின் அவல நிலையைச் சுட்டிக்காட்டி, தமிழீழம் நமக்கு ஓர் ஆதர்சமாக விளங்குகிறது என்றார். 'ஓரினம் வாழ்வதற்கு அரசுரிமை முக்கிய தேவை. அதைப் பெறுவதற்கான போராட்டம்தான் தமிழீழத்தில் நடைபெறுகிறது. அவ்விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய தேசியமும், மதவாத சக்திகளும் நடைமுறை ரீதியில் மட்டுமல்லாமல் கருத்தியல் ரீதியான தடைகளையும் எழுப்புகின்றனர். சாதியம் – பார்ப்பனீயம் – முதலாளியம் எனும் இந்தத் தொடர் சங்கிலி தகர்த்தெறியப்பட வேண்டும். இச்சமரில் திராவிட தேசியத்தை உயர்த்திப்பிடிக்க முடியாது. ஏனெனில் அது ஒரு மாயை! மொழித் தேசியந்தான் நம்மை இணைக்கும் சரம். மேலும் திராவிடக் கட்சிகள், இந்திய தேசியக் கட்சிகளை விட மிகக் கேவலமாகச் சிதைந்து கிடக்கின்றன. அனைத்துலக மூலதன வெள்ளத்தில், தமிழர்கள் வெறும் நுகர்வியல் பிண்டங்களாக ஆக்கப்பட்டுவிட்டனர். இத்தகைய தலைவர்களிலிருந்து மக்களை மீட்டு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வைப்பதும், விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவுகொடுக்க வைப்பதும் இயக்கவாதிகளின் தலையாய கடமையாகவுள்ளது. இந்தப் பங்கு பணியை நிறைவேற்றும் இயக்கமே இன்றைய உடனடித் தேவையாகும்." எனக் குறிப்பிட்டார்.

**ஓரினத்தின் எதிர்காலத்தை அவர்கள்தான் தீர்மானிக்க முடியும். அந்நியர்கள் அதில் வந்து நுழைவதை எக்காலத்திலும் அனுமதிக்க முடியாது.**

'தமிழீழமும் தேசிய இனப் போராட்டங்களும்' எனும் பொருளில் உரையாற்றிய தனித் தமிழர் இயக்கத்தின் பொதுச்செயலர் தியாகு. "பார்வைக் கோளாறு இரண்டு வகைப்படும். ஒன்று, கிட்டப் பார்வை. இரண்டு, எட்டப் பார்வை. அரசியல் கண்ணோட்டங்களிலும் இதுபோலவே குறைகள் உள்ளன. அருகிலுள்ள சிக்கல்களை மட்டுமே பார்க்கும் கிட்டப்பார்வை கோளாறினை திராவிட இயக்கங்களின் அரசியல் கட்சிகளிடையே காண்கிறோம். தூரத்திலுள்ளவற்றை மட்டுமே பார்க்கும் எட்டப் பார்வைக் கோளாறினை தேர்தல் அரசியலில் மூழ்கிவிட்ட பொதுவுடமை இயக்கங்களிடையே காண்கிறோம். இவர்கள் அங்கோலாவின் விடுதலைக்காகக் குரல் எழுப்புவார்கள்; தென் ஆபிரிக்காவின் விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பவர்கள். ஆனால், தமிழீழ விடுதலை பற்றி வாய் திறக்கமாட்டார்கள்.

உண்மையான ஒரு கம்யூனிஸ்ட், தேசியம் / சர்வதேசியம் ஆகியவற்றை எதிர்நிலையில் வைத்துப் பார்க்கமாட்டான். ஹோசிமின், கஸ்ரோ, லெனின் ஆகியோர் சிறந்த தேசிய உணர்வுமிக்கவர்களாக இருந்த அதேசமயத்தில் ஒப்பற்ற சர்வதேசியவாதிகளாகவும் இருந்திருக்கின்றனர். 'தான் ஒரு ஜார்ஜியன்' என்பதை ஸ்டாலின் அடிக்கடி வலியுறுத்தி வந்தார். நம்மூர் கம்யூனிஸ்ட்டுக்கள் இதை எல்லாம் வசதியாக மறந்துவிடுகின்றனர்.

ஓரினத்தின் எதிர்காலத்தை அவர்கள்தான் தீர்மானிக்க முடியும். அந்நியர்கள் அதில் வந்து நுழைவதை எக்காலத்திலும் அனுமதிக்க முடியாது. காம்ப்டேவிட் ஒப்பந்தத்தின் மூலம் தங்கள் இனத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்க, எகிப்துக்கு உரிமையில்லை எனப் பலஸ்தீனியர்கள் பிரகடனப்படுத்தினர். எகிப்தும், இஸ்ரேலும் இது குறித்து அறிவித்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தனர். இதைப் போன்றதுதான் இந்திய – இலங்கை ஒப்பந்தம். களத்திலுள்ள போராளிகளைத் தவிர்த்து, ஒப்பந்தம் போட இந்தியாவுக்கு உரிமை இல்லை.

ஆனால், நமது வலது – இடது கம்யூனிஸ்ட் தோழர்கள், ஏகாதிபத்தியத்தின் சதியால்தான் ஈழப்போராட்டம் நடக்கிறது என்கின்றனர். திருகோணமலை, கொழும்புத் துறைமுகம் ஆகியவற்றைப் பயன்படுத்த அமெரிக்காவிற்கு இலங்கை அனுமதி வழங்கியதை கண்டிக்க இவர்கள் ஆயத்தமாக இல்லை. அது மட்டுமல்ல, வியட்நாமில் குழப்பத்தை உண்டாக்க 'பச்சைத் தொப்பி' அணியினரைத்தான் முதன்முதலில் அமெரிக்கா அனுப்பிவைத்தது. அதே பச்சைத் தொப்பி அணியினரை அமெரிக்கா இன்று இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளது. இவர்கள், தமிழீழப் போராட்டத்திற்கெதிராகச் செயல்படுகின்றனர்.

ரஷ்யப் புரட்சி வெடித்ததும் உலகிலுள்ள பல நாடுகள், அப்புரட்சியை நசுக்கி பல்வேறு வகைகளிலும் அதற்கெதிராகச் செயல்பட்டன. தற்பொழுது தமிழீழத்திலும் அதுதான் நடக்கிறது.

சீனப்புரட்சி, ஆசிய – ஆபிரிக்கப் புரட்சிக்கு முன்னோடி! அதேபோல் தமிழீழப் புரட்சி, தெற்காசிய எழுச்சிக்கோர் முன்னோடியாகத் திகழப் போகிறது" எனக் குறிப்பிட்டார் தியாகு.

ச. முகிலனின் நன்றியுரையுடன் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

தமிழீழ ஆதரவு, தமிழகத்தில் நீறுபூத்த நெருப்பாக உள்ளது. சிறுகாற்று வீசினாலும் தமிழீழ ஆதரவு கனன்று வீறிட்டெழும் என்பதற்கு இக்கருத்தரங்கு ஒரு உன்னத சாட்சியாக விளங்கியது.

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லெப். கேணல். ராதா

## 10-ம் ஆண்டின் பசிய நினைவுகள்

யார் இந்த ராதா? தமிழீழ போராட்ட வரலாற்றை தெரிந்து கொண்டவர்கட்கு ராதாவைத் தெரியாமல் இருக்க முடியாது. யாழ் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போதே ஆற்றலும் ஆளுமையும் மிக்க இளைஞனாயிருந்த ஹரிச்சந்திரா தான் 1983ல் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டதும் தலைவரினால் ராதா எனப் பெயரிடப்பட்டு எமது விடுதலைப் பயணத்தில் தளபதி ராதா ஆகினார்.

கல்லூரியில் படிக்கும் காலத்திலும், பின்னரும் தான் ராதா எப்போதும் அழகான ஆடம்பரமற்ற உடைகளை உடுத்தும் பழக்கம் உடையவர். இதனால் யாழ் வீதிகளில் மோட்டார் சைக்கிளில் உலா வந்த ராதாவைப் பார்ப்பவர்கட்கு அவர் ஓர் அரச அதிகாரியைப் போலவோ அல்லது ஓர் மருத்துவரைப் போலவோ தோன்றினாரே அன்றி வேறு விதமான பார்வையைக் கொடுக்கவில்லை.

சாந்தமும் வசீகரமும் கொண்ட அவரது தோற்றத்தைப் போலவே அவரது அணுகு முறைகளும் அமைந்திருந்தன. 8–ம் வகுப்பில் படிக்கும் போதே சாரணர் இயக்கத்தில் சேர்ந்துகொண்ட ராதா உயர்தர வகுப்புப் படிக்கும் வரை சாரணர் இயக்கத்தில் இருந்து கல்லூரியின் பயிற்சிப் பாசறைக்கே தலைவனாக இருந்ததினால் கல்லூரிக் காலத்தில் இருந்தே அவரிடம் நிர்வாக ஒழுங்குகளும் கட்டுப்பாடுகளும் நிறைந்து காணப்பட்டன.

யாழ் இந்துக் கல்லூரியில் மாணவத் தலைவர்கட்கு முதன்மை மாணவத் தலைவனாக இருந்த ராதா வகுப்பறைகளின் நடைபாதைகளில் நடந்து வந்தாலே மாணவர்கள் அதிபரைக் கண்டது போல் அமைதியாகி விடுவார்கள். இது ராதா மாணவப் பருவத்து நினைவுகள்.

கல்வி, விளையாட்டு, நிர்வாகம் என்று எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய ராதா தனது கல்லூரி வாழ்வை முடித்துக்கொண்டு கொழும்பில் வங்கியொன்றில் பணிபுரிந்தார். 1983ல் நடைபெற்ற இனப்படுகொலைகளை கண்களினால் கண்ட ஹரிச்சந்திரா உடனடியாகத் தன்னை விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இணைத்துக்கொண்டார்.



அறிவும், ஆற்றலும், வீரமும், விவேகமும் ஒருங்கே கொண்ட ஒரு வித்தகனை விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுக் கொண்டது. இந்த வித்தியாசமான வீரனை நடமாடும் பல்கலைக்கழகத்தினை இனங்கண்டு கொண்ட தேசியத் தலைவர், ராதாவின் ஆற்றலும், ஆளுமையும் அவரைப் போல பல நூறு போராளிகளை உருவாக்கும் என்பதை உணர்ந்து கொண்டு பயிற்சி முகாமினை நடாத்தும் பணியினை ராதாவிடம் ஒப்படைத்தார். அந்தப் பல்கலைக்கழகத்திடம் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள் படித்துக் கொண்ட பாடங்கள் தான் எத்தனை? எத்தனை?

பயிற்சி முகாமில் புலிக்கொடி பறக்கிறது. போராளிகள் அணிவகுத்து நிற்கின்றார்கள். இப்போது கல்லூரியில், வீதிகளில் கண்ட ஹரிச்சந்திராவை அங்கே காணமுடியவில்லை. ஆங்கிலப் படங்களில் வெறுமனே வேஷமிட்டு வரும் ஒரு பெரிய இராணுவ அதிகாரி ஒருவனை அங்கே காணமுடிந்தது.

" Scout Attention " என்ற அதிகார அறைகூவலும், உருமறைப்பு உடைகள் உரசும் சத்தத்துடனான இராணுவ நடையும் அவருக்கே உரியவை. பயிற்சிக் களத்தில் ராதாவைப் பார்த்தாலே பயமாக இருக்கும். அவ்வளவு கடுமை அசுர வேகம் அது தான் ராதா.

ராதா அசைக்க முடியாத தன்னம்பிக்கை மிக்கவர். அதே போல தலைவரும் ராதாமேல் நம்பிக்கை கொண்டிருந்தார். பயிற்சி முகாம்களில் பயிற்சி பெறும் போராளிகள் கடுமையான கொமாண்டோ பயிற்சிகளை பெறும் போது அவர்களின் பின்னே Dumb றவுன்ஸ் எனப்படும் போலிக்குண்டுகளைப் பாவித்து போர்க்கள நிலமையைப் போன்ற பிரமையை உருவாக்கும் போர்ப்பயிற்சி மரபுமுறை. ஆனால் ராதா இந்த மரபுகளை மீறினார்.

தான் போலிக் குண்டுகளைப் பாவிக்க விரும்பவில்லை நிஜமான குண்டுகளைப் பாவிக்கப் போவதாக ராதா தலைவரிடம் அனுமதி வேண்டினார். ராதாவின் திறமையிலும் நம்பிக்கையிலும் நம்பிக்கை கொண்டிருந்த தலைவர் ராதாவிற்கு அனுமதி கொடுக்கிறார்.

"Down position" இது ராதாவின் கட்டளை. பயிற்சி பெறும் போராளிகள் வேகமாக நிலை எடுத்து நகர்கிறார்கள். அப்போது அவர்களின் பின்னே நின்ற ராதா M16 ரகத் துப்பாக்கியினால் அவர்களின் பாதணி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைக் குறிபார்த்துச் சுடுகிறார். நிஜமான குண்டுகள் பாதணிகளில் பட்டும் படாததுமாய் செல்கின்றன. அருகே நின்று பயிற்சியை மேற்பார்வை செய்து கொண்டிருந்த பொன்னம்மான் சொல்கிறார் " அது தான் ராதா ''. அன்றைய பயிற்சி முடிந்து போராளிகள் தங்கள் தங்குமிடங்கட்கு செல்கின்றார்கள். அங்கே தங்களது இரும்பாலான அடிப்பாகங்களைக் கொண்ட சப்பாத்துக்களைக் கழற்றிப் பார்க்கிறார்கள். சிலரது பாதணிகளை M16 ரவைகள் துளைத்திருந்தன. இந்த ஓய்வு நேரத்தில் அந்த 'அதிகாரி ராதா'வைக் காணவில்லை. ஒரு நல்ல நண்பனை, தோழனை அங்கே காணமுடிந்தது. என்ன I Say கஷ்டமா இருக்கா, துன்பந்தான். இப்படிக் கதைப்பது ராதாவின் வழமை.

பள்ளிக்கால காதல் கதை கேட்கும் அளவிற்கு பழகுவார் ராதா. ஒரு மாலை நேரம் பயிற்சி முடிந்து எல்லோரும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒரு போராளி தனது பள்ளிக் காதலியின் பெயர் இராசாத்தி என்றும் அவளைப் பற்றிய கதைகளையும் ராதாவோடுகதைத்திருந்தான். சிறிது நேரத்தில் முகாமின் ஒலிபெருக்கி "இராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு '' என்ற பாடலை மெதுவாக ஒலித்துக் கொண்டிருந்தது. இப்படி ராதா வித்தியாசமானவர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்று மூன்று மொழிகளையும் நன்கு அறிந்திருந்த ராதாவின் மேசையில் புத்தகங்களும் குவிந்திருக்கும். அவர் தெரிந்து வைத்திருக்காத துறையே இல்லை என்று துணிந்து கூறலாம். ராதாவின் ஆற்றல் கண்டு தலைவரே ஒரு தடவை வியந்து புகழ்ந்ததுண்டு.

அடர்ந்த காடு குறிப்பிட்டளவு போராளிகள், பொன்னம்மான், விக்டர் உட்பட சில தளபதிகள் அவர்களோடு தலைவர். இவர்களுடன் கையில் வாக்கிடோக்கியுடன் ராதா. எல்லோரும் மிகுந்த மகிழ்வுடன் தலைவரும், பொன்னம்மானும் கூறும் கதைகளைக் கேட்டபடியே காட்டின் வழியே நடந்து கொண்டிருந்தார்கள். எல்லோரோடும் சேர்ந்து சிரித்துக் கதைத்தபடி நடந்து கொண்டிருந்த ராதா திடீரென "Down Position" என உரத்த குரலில் கட்டளை பிறப்பித்தான்.

தலைவர் உட்பட எல்லோரும் கட்டளைக்குப் பணிந்தார்கள். தலைவனும் தளபதிகளும் உள்ளிருந்து வெளி நோக்கி வியூகம் அமைக்குமாறு சைகையால் கட்டளை கொடுத்தார்கள். அதுவரை எதுவுமே நடக்கவில்லை. சிறிது சிறிதாகக் கேட்ட ரீங்கார சத்தம் ஒன்று மட்டும் கூடிக் கொண்டு வந்தது. அதுவரை ராதாவைத் தவிர எவருக்கும் எதுவும் புரியவில்லை. சிறிது நேரத்தில் காட்டுத் தேனீக்களின் பெரிய பட்டாளம் ஒன்று பேரிரைச்சலுடன் எல்லோரையும் கடந்து பறந்து சென்றது.

தேனீக்கள் கண்களில் இருந்து மறைந்ததும் எல்லோரும் எழுந்தார்கள். பொன்னம்மானும், தலைவரும் ராதாவைப் பார்த்தார்கள். "காடு பற்றிய புத்தகம் ஒன்றில் படிச்சனான்



அண்ணை. சத்தம் சிறிதாக இருக்கும் போதே இதுவா இருக்குமோ என்று நினைச்சுத்தான் Command கொடுத்தனான். அது போலவே நடந்து விட்டுது. இந்தத் தேனீக் கூட்டம் பாதை மாறாதாம் வந்த வழியே பறக்குமாம். நாங்கள் கீழே படுக்காமல் நடந்து வந்திருந்தா இண்டைக்கு எங்களிலை கனபேருக்குக் கண் பறந்திருக்கும்'' என்று ராதா கூறி முடித்தார்.

ராதாவைத் தொடர்ந்த பொன்னம்மான் போராளிகளைப் பார்த்து "இண்டைக்கு இதிலை இரண்டு விஷயம் படித்திருக்கிறியள். ஒரு திடீர் Alert வந்தால் எப்பிடி Position எடுக்கிறது எண்டது ஒன்று. Order வந்தால் கேள்வி கேட்கக்கூடாது எண்டது இரண்டாவது. ஏன் படுக்கவேணும் எதற்குப் படுக்க வேணும் என்று ஆரும் கேட்டுக் கொண்டு நிண்டிருந்தால் இப்ப கண் போயிருக்கும் Down எண்டால் Down தான்" என்று சொல்லிச் சிரித்தார்.

இவ்வாறு எண்ணற்ற திறமைகளைக் கொண்டிருந்த ராதா தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்ற விஷேட கொமண்டோ அணியிற்கும் பயிற்சி அளித்தார்.

பயிற்சியாளனாக இருந்த ராதா லெப். கேணல் விக்டருடன் மன்னார்க் களம் நோக்கிச் சென்று சாதனைகள் செய்யத் தொடங்கினான். மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதலில் ராதாவின் திறமையை விக்டர் பல இடங்களிலும் குறிப்பிடுவது வழக்கம்.

விக்டர் இறந்த பின் மன்னார்ப் பிரதேசத் தளபதியாகப் பொறுப்பேற்ற ராதா உலகில் கண்ணிவெடியால் தகர்க்கப்படாததென புகழப்பட்ட " பவ்லோ'' கவசவாகனத்தைத் தகர்த்து விடுதலைப் புலிகளின் தொழில் நுட்பத்திறனை உலகிற்குக் காட்டினார்.

கேர்ணல் கிட்டு அவர்கள் காலை இழந்த பின் யாழ் பிராந்திய தளபதியாகப் பொறுப்பேற்ற ராதா குறுகியகால இடைவெளியில் குரும்பசிட்டி இராணுவமுகாம், மயிலியதனை இராணுவமுகாம், காங்கேசன் துறை காபர்வியூ இராணுவ முகாம் என பலமுகாம்களைத் தாக்கிப் பல வெற்றிகளைக் குவித்தார்.

பலமுனைகளிலும் திறமை கொண்ட இந்த நடமாடும் பல்கலைக்கழகம் இன்னும் சில காலம் இருந்திருந்தால் ..... இது தலைவர் உட்பட எல்லோர் மனதிலும் எழும் கேள்வி. " சண்டைக்கு எண்டு போய் சாகிறதெண்டால் I say எங்களுக்கெண்டு ஒரு ரவுண்ஸ் அல்லது ஓர் செல் துண்டு இருக்கு அது வந்தால் தான் சா வரும். இல்லையெண்டால் ஒரு போதும் சாகேலாது I say'' இது ராதா போராளிகளைப் பார்த்து அடிக்கடி கூறும் வாசகம். ஆம் அவர் கூறியது போல 20.05.87ல் அவரைத் தேடி எதிரி ஏவிய குண்டொன்று அவரது மார்பினைத் துளைத்தது. ஹரிச்சந்திரா என்ற ராதா காவியமாகி ஆண்டுகள் பத்துத் தாண்டிய போதும் அவரது பசிய நினைவுகள் எம் மண்ணில் இருக்கும். ராதாவின் சாதனைகளில் இன்னும் ஊமையாய் இருக்கும் உண்மைகள் சில, எம் தேசம் மீண்ட பின்பே பேசப்படும்.

- பேபி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடாவிலொரு நண்பனுக்கு விடாமல் விடுத்த மடல்

யாழ் நகரில் வாழ்கின்ற.... வாழ்கின்ற? இன்னுமுயிர்
வாழ்கின்ற நண்பனுக்கு வணக்கங்கள்! நீ வரைந்த
மடல், மாதம் இரண்டின்பின் வாய்கிழித்து வாசிக்கப்
படுங் 'கிரியை' நிறைவேறிப் பக்குவமாய் கிடைத்ததடா!
'இங்கெல்லாம் இயல்புநிலை, இங்கெல்லாம் இன்பநிலை
தங்குதடையின்றிச் சாமான்கள் தாராளம்!
கோயில் விழாப் பூசைகளும் குதூகலம்! குடும்பமாய்
வா' வென நீ எழுதியதால் மரணத்தைத் தடுத்துய்ந்தாய்!
இப்படித்தான் வாவென்றே எல்லோரும் எழுதுகிறீர்!
செப்பியதைச் செப்பிடிலே சீவிக்க முடியும் உம்மால்!
விடுவிக்கப்பட்டீராம் விடுதலைப் புலிகளது
கொடுமைக்குள் இருந்து! அந்தக் கொடுமை
முடிந்த பின்னும்
குடாநாட்டுள் மேலும் பல பொருள்களினைக் கொண்டுவர
விடாமல் தடுப்பதுவாய் விமர்சகர்கள் விளம்புவதேன்?

படைக்கட்டுப் பாடுள்ள பகுதிகுடா நம்பியவர்
நடக்கின்ற விடுதலைப் போர் நலன்மறந்து
சென்றவர்கள்!
பத்தாயிரம் புலிகள் பல்லாயிரம் மக்கள்
விட்டுயிரை விளைவித்த விடுதலைப் போர் வெற்றிக்கு
ஊறளிக்கு மென்றறியா உல்லாசம் விரும்பியவர்

சோறுசொத்துச் சுகத்திற்காய்த் துட்டர்வலை வீழ்ந்தாலும்
அந்தரங்க அடிமனமோ ஐயோநான் துரோகியென
நொந்தரற்றச் சோதனைசெய் நூறுமுகாம் தினங்கடந்து
செத்துப் பிழைத்துநிதம் தின்பதுவுஞ் செமிக்காமல்
கத்திமேல் நடப்பதுவாய்க் காலத்தைக் கழிக்கின்ற
கதைகளின் உவத்தலிலாக் காய்தலிலா ஆய்வாளர்

"இது உண்மை யாழ்குடா" என்றுபடங் காட்டுகிறார்.
இனத்தோல்வி என்னழிவே! இனவீழ்ச்சி என்வீழ்வே
எனும் தெளிந்த தத்துவத்தை இன்றேனும் உணர்ந்தவர்கள்
அதர்மத்துக் கினியும்நான் அடிப்பூசை ஆற்றேன்! எவ்
விதமாயும் இச்சிறைநீங் குவேனென்றே கொழும்புக்கும்
வெளிநாடு பலவுக்கும் விரைந்தோடல் ஒருபக்கம்
'வளவாழ்வு இங்கேதான்! வாருங்கள்' எனும் தூது
மடல்கண்டு யாழ்ப்பொறிபோய் மாட்டுண்டு விழிக்கின்ற
தடுமாறும் மனச்சான்றுச் சபலங்கள் ஒருபக்கம்
குடாவுக்குள் சிக்கியவர் கூண்டுடைக்கத் துடிக்கின்றார்.
குடாவுக்கு வெளியில் சிலர் குடாப்புகவே துடிக்கின்றார்.

'கல்யாணக் கோட்டை'க்குள் காதலுடன் புகுந்தவர்கள்
சொல்லாமல் கொள்ளாமல் துடிக்கின்றார் வெளியேற!
கோட்டையதன் வாசலிலே 'கூர்த்தாவல்' நிற்பவரோ
ஓட்டமாய் உள்நுழைய ஒற்றைக்கால் தவம்தன்னில்!
ஐநூறின் மேலான காணாமற் போனவரின்
அன்னையருக் கென்றாலோ அழுதாறப் பிணமுமில்லை!
அதர்மத்தை ஆதரித்த அநியாயப் பழிப்பயனோ?
விதியென்றால் சாவரட்டும் வெறியரசிற்கடி பணியோம்

நூறுவித நோய்க்காய்ச்சல் முளம்புக்கடிக் கிரையானால்
ஆறமனம் உடல்கிடைக்கும்! அழுதிடலாம்; தர்மப்போர்
வெற்றிக்குச் சிறுதீங்கும் விளைவிக்கோம் நாம் எனும் தர்மப்
பற்றாளர் பலரிங்கும் இறக்கின்றோம்! என்றாலும்
உயிர்போகும்; இறுதிநொடி ஒன்றுவரை இறுமாப்பாய்
துயர் அச்சம் அணுகாமல் துடிப்போடே வாழ்ந்திறப்போம்!

ச. வே. பஞ்சாட்சரம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய சுதந்திரத்தை நோக்கி.....

மே 5 அன்று, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது 21-வது அகவையில் காலடி எடுத்து வைக்கிறது. இதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது



ஆர்ப்பரித்து எழுந்து நிற்கின்றது எமது தேசத்தின் சுதந்திரப் போர். பல்லாயிரம் இராணுவ துப்பாக்கிகளும், நவீன கடற்படை – விமானப்படைத் தளபாடங்களும் எம்மை நோக்கி வீசும் கொடும் கணைகளை எதிர்த்து நின்று எம் சின்னஞ் சிறு தேசம் போராடுகின்றது. விடுதலை பற்றி பிரக்ஞை செய்கின்றது. விடுதலை சார்ந்து கலை இலக்கியங்களைப் படைக்கின்றது. போர்ப் பரணி பாடும் தலைமுறை உருவாகி வருகின்றது. பிரபாகரன் என்ற கோட்பாடு தேசிய ஆதர்சனமாகி எம் மக்களின் இருப்பை எம் தேசத்து முகத்தை பறையறைகிறது. ஆம், இது நாம் கடந்து வந்த பாதை படைத்த சரித்திரம். 21வது வருடத்தை அடைந்துள்ள எமது தேசிய விடுதலை இயக்கம் கண்ணீரும் செந்நீரும் சிந்தி உருவாக்கிய வரலாறு இது.

ஆயுதம் தரித்த தமிழீழ மக்களின் சுதந்திரப் போர் என்பது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றத்துடன் உருவாகி அதனது பரிணாம வளர்ச்சியுடன் வளர்ச்சி கண்டது. சங்கருடன் ஆரம்பித்த விடுதலைப் புலிகளின் மாவீரர் சரித்திரம் பல்லாயிரக்கணக்கான வீரம்மிகு இளைய மாவீரர்களை தமிழீழ தேசத்தின் தேசிய ஆன்மாவில் பதித்துக்கொண்டுள்ளது. இந்த வளர்ச்சிப் போக்கு எம் தேசத்தின் விடுதலைத் தாகத்தை பலப்படுத்தி நாங்கள் வெற்றிபெறப் போகின்றோம் என்ற இறுமாப்பையும், வெற்றிபெற்றே தீர வேண்டும் என்ற தேசிய கௌரவத்தையும் உருவாக்கியுள்ளது.

★

இன்று சர்வதேச மத்தியத்துவம் என்ற எமது தேசிய விடுதலை இயக்கத்தின் கோரிக்கை உலக சமூகத்திடம் ஆதரவுபெறத் தொடங்கியுள்ளது. பாலஸ்தீன அதிபர் யாசிர் அரபாத், சிங்கள – தமிழ் முரண்பாட்டிற்கு மத்தியத்துவம் வகிக்கத் தயார் என்று அறிவிக்கின்றார். பிரித்தானியா முதல் பல்வேறு நாடுகள் தமது அரசுகள் மத்தியத்துவம் வகிப்பதற்குத் தயாராக உள்ளதாக கூறுகின்றனர். அமெரிக்க அகதிகள் ஆணைக்குழு சர்வதேச மத்தியத்துவமே ஒரேவழி என முன்மொழிகின்றது. ஐக்கிய நாடுகள் சபை மன்றமொன்றில் பேசித் தீர்ப்பதே வழி என அமெரிக்கா பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றது. இது எமது அரசியல் போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியைக் காட்டுகின்றது. உள்நாட்டுப் பிரச்சினை எனக் கூறும் சிறீலங்கா அரசின் அரசியல் சதியை எதிர்கொண்டு போராடிய எமது தேசிய விடுதலைப் போர், இன்று எமது மக்களின் கோரிக்கையை சர்வதேச விடயமாக – இரு தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடு என்பதை வெளிக்காட்டியுள்ளது.

எமது அரசியல் கோரிக்கை என்றுமில்லாதவாறு பலம் பெற்று நிற்கின்றது. சிங்கள – தமிழ் தேசியங்களுக்கிடையிலான முரண்பாடு இரண்டு தேசியங்களினதும் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு பரஸ்பர கௌரவம் பேணப்படுவதன் மூலமே தீர்க்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கப்படும் என்ற தீர்க்கதரிசனம் சர்வ தேச மட்டத்தில் உருவாகியுள்ளது. இந்த வெற்றியின் பின்னால் எம் தேசத்தின் கடுமையான உழைப்பு உள்ளது. தலைவர் பிரபாகரனின் வழிநடத்தலில் எமது போர் கண்ட வெற்றி இது.

உள்நாட்டுப் போராக சிறுபான்மை இன மக்களின் கூக்குரலாக அன்று எமது போராட்டம் நோக்கப்பட்டது. சிங்கள இனவாத அரசு காக்கி உடை கொண்டு இதனை நசுக்க முனைந்தது. சமரசம் பேச முனைந்த தமிழ்த் தலைவர்கள் கூட வேட்டையாடப்பட்டனர். இங்கே தேசிய எதிர்ப்பின் அடையாளமாக புலிப்படை தோற்றம் கண்டது. எமது அரசியல் அபிலாசைகளுக்கு முனைப்புக் கொடுக்கும் ஈட்டியாக, "பிரபாகரன்" உருவாகினார். நாம் போராடினோம். ஜெயவர்த்தானா அரசின் அரசியல் குயுக்திகளுக்கு எதிராக போராடினோம். மாவட்ட சபைகள், புதிய அரசியல் அமைப்பு என எம்மை நோக்கி சிங்கள அரசு வீசிய எலும்புத் துண்டுகளும், பொய்யுரைகளும் எமது அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யாது என்பதை விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

காக்கி உடைகள் பச்சைத் தொப்பிகளால் இடம்மாற்றப்பட்டன. சிங்கள இராணுவக் காடைத்தனம் எமது பூமியை சேதப்படுத்தி எமது அரசியல் கோரிக்கையை நசுங்கடிக்க முனைந்தது. திம்புவும், பெங்களூரும் எமது அரசியல் அரிலாசைகளை, எமது மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளை புறக்கணித்து சிங்கள இனவாத மேலாண்மையை தூக்கிப்பிடித்த பொழுது பிரபாகரன் புலியாய் நின்றார். மக்கள் மலையாய் நின்றனர். எமது அரசியல் வேண்டுகோள் பாதுகாக்கப்பட்டது.

1987. எமது அரசியல் வேண்டுகோளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மிகப்பெரிய சூழ்ச்சியும் சவாலும் நிறைந்த காலமாகும். ராஜீவ் – ஜே.ஆர். உடன்பாடும், எம்மீது அதனைத் திணிக்க எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளும், எமது அரசியல் அபிலாசைகளை முறியடிக்கத் தேவையான அனைத்துச் சதிகளையும் கொண்டிருந்தது. அதனை முறியடித்த போரை எமது தலைவர் வழிநடத்தினார். திலீபன் தொடக்கி வைத்த தர்ம யுத்தம் எமது நியாயமான வேண்டு



கோளைப் பாதுகாத்தது. எமது அரசியல் இலட்சியத்தை உயிர்ப்புடன் வைத்திருந்தது.

எமது நியாயமான நோக்கை அழிக்க பிரேமதாசா அரசு முட்டி மோதியது. பொருளாதாரத் தடை, முஸ்லீம் காடையர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஊர்காவல்படை என்பன எமது தாயத்திற்கு எதிரான போரில் புதிய அம்சமாக இணைக்கப்பட்டன. நாம் போராடினோம். எமது தேசம் எழுந்து நின்றது. நாம் வெற்றிபெற்றோம்.

எமது அரசியல் கோரிக்கை பெற்ற சர்வதேச அங்கீகாரத்தையும், அதன் அகப்புற வளர்ச்சியையும் கவனத்திலெடுத்த சிங்கள இனவாத அரசு பிரசவித்த 'சதியே' சந்திரிகா என்ற நவீன மயப்படுத்தப்பட்ட சிங்கள பௌத்த இனவாதத் தலைமையாகும். எமது அரசியல் கோரிக்கையை – அதன் நியாயத்தை தமது திட்டமிட்ட பிரச்சாரக் கபடத்தனத்தால் முறியடித்து எமது மக்களை அரசியல் கோரிக்கையற்ற – முகமிழந்த கூட்டமாக்க முனைந்த சந்திரிகா அங்கு 'பிரபாகரனை' எதிர் கொண்டார்; அரசியல் தீர்க்கதரிசனமும் விழிப்பும் கொண்ட தமிழர் தலைமையை எதிர் கொண்டார். நாம் போராடுகின்றோம். சிங்கள அரசின் கபடத்தனங்கள் மெதுவாக ஆனால், உண்மையாக முறியடிக்கப்படுகிறது.

எமது தேசத்தை இராணுவ பாதணி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களால் ஆக்கிரமித்து, போராடும் ஒரு தேசிய இனத்தின் துரோகிகளை எமது தேசத்தின் தலைமையாகப் பாவனை பண்ணும் சந்திரிகாவின் அரசியல் இரட்டை வேடம் களையப்பட்டு சர்வதேச மத்தியத்துவத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேசி, தமிழரின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய் என பகிரங்கமாக உலகை பேச வைத்தது எமக்கு கிடைத்த ஒரு அரசியல் வெற்றியேயாகும்.

★

எமது விடுதலைப் போராட்டத்தின் முதுகெலும்பாக எமது தேசிய விடுதலை இராணுவம் எழுந்துநிற்கின்றது. ஆண்களும் பெண்களும் ஆர்ப்பரித்து ஆயுதம் தரித்து சிங்கள இனவாத எதிரியை எதிர்கொள்கின்றனர். முல்லைத்தீவில் நாம் பெற்ற வெற்றி தென்னாசியாவில் மட்டுமல்ல தென்கிழக்காசிய இராணுவ வரலாற்றிலேயே இடம்பெற்ற மிகப் பெரிய வெற்றி எனக் கணிக்கப்படுகின்றது.

தளபதி 'பால்ராஜ்' எங்கே நிற்கின்றார் என்பது சிங்கள இராணுவ ஆய்வாளர்கள் அறியத்துடிக்கும் விடயமாகிவிட்டது. தளபதி 'சொர்ணமோ' 'பானுவோ' என்ன செய்கின்றார்கள் என அறியத்துடிக்கின்றது சிங்கள




இனவாதப் பத்திரிகைகள். 'பொட்டம்மான்' பற்றி ஆராய்வது சிங்கள, இந்திய உளவுத் துறைகளுக்கு மட்டுமல்ல சர்வதேச உளவு நிறுவனங்களுக்கும் தேவையான விடயமாகிவிட்டது.

இந்த வீரம்மிகு வரலாறு, இருபது ஆண்டுகளுக்கு மேலாக நாம் போராடிப் படைத்த சாதனையாகும். தமிழர்களின் தேசிய கௌரவத்திற்கு அடையாளமாக எம் தேசிய இராணுவம் எழுந்து நிற்கின்றது. நாம் படைத்த இமாலய சாதனை இது. இந்த வைராக்கியம் – வீரம்மிகு அணிவகுப்பு எமது தேசத்தின் வெற்றியை நோக்கி நாம் வைக்கும் ஒவ்வொரு அடிகளிலும் பிரதிபலிக்கிறது.

★

எமது தேசிய விடுதலை இயக்கமானது தனித்து ஒரு அரசியல் இராணுவ இயக்கமாக மட்டும் வளர்ச்சி காணாது ஒரு முழுமையான தேசமாக வளர்ச்சி கண்டது. எம்முள் பலமான இலக்கியப் பலம் உருவாகியது. ஒரு புதிய கலாச்சாரம் முகிழ்கிறது. "எழுந்து வாருங்கள்" என எமது கவிதைகள் அறைகூவல் விடுகிறது. எமது போராட்ட இலட்சியத்தைத் தாங்கி பல 'உயிர்ப்பூக்கள்' மலர்கின்றன. ஆயிரம் தோழர்களும் தோழிகளும் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு புத்துணர்வும் புத்தொளிர்வும் தருகின்றன. ஆம், எமது தேசிய அடையாளம் பலப்படுத்தப்படுகின்றது. 'எமது' என்ற பெருமை மிளிரும் இயலும் இசையும் பொங்கி எழ நாம் வெற்றியை நோக்கி நடக்கின்றோம்.

★

'செஞ்சோலைகள்', 'ஆதரவற்றோர் புனர்வாழ்வு அமைப்புக்கள்', 'பொருளாதாரத் திட்டமிடல் பிரிவுகள்', 'ஆய்வு நிறுவனங்கள்' என ஒரு உட்கட்டுமானம் எம்மிடம் எழுந்து நிற்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றது. காலம் காலமாக அந்நிய அரசுகளிடம் உதைபட்டு முகமிழந்து நிருவாக இயந்திரத்தில் வெறும் கருவி களாகக் கிடந்த நாம் இன்று திட்ட மிடுகின்றோம் – ஆய்வுசெய்கின்றோம் – 'எம் தேசம்' எனக் கூவி உழைக்கின் றோம்.

ஒரு தேசம் உருவாகின்றது என்பதை இனங்காட்டும் முதிர்வு எம்மிடம் உரு வாகியுள்ளது. நாம் போராடுகின்றோம். வெற்றி மட்டுமே எமது பாதையின் இலக்கு ஆகும்.

★

எமது தேசிய இயக்கத்தின் இரு தசாப்த வரலாறு உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை ஒன்றாகப் பிணைத் துள்ளது. அந்தத் தேசிய இலட்சியத்தின் தேவையை உணர்ந்த வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் கரம்பற்றி எழுந்து நிற் பது எமது வளர்ச்சிப் போக்கின் மற்று மொரு வெளிப்பாடாகும். ஐ.நா.சபை முன் கூடிநின்று எம் உரிமைகளைக் கேட்கின்றோம் – சரித்திரம் அறிந்த காலந்தொட்டு பல அரசியல் மறு மலர்ச்சிகளை உருவாக்கிய பாரிஸ் நகரில் எமது மக்கள் இலட்சியம் பற் றிக் கோஷிக்கின்றனர். இலட்சோப இலட்சம் தமிழ் மக்கள் தமது உணர்வை ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலையின்பால் இணைத்து சிந்திக் கின்றனர் – செயற்படுகின்றனர். இது எமது தேசிய இயக்கம் படைத்த மற்றுமொரு சாதனையாகும்.

'அடிமை சனத்திடம்' ஆக்ரோசத் தைக் கொடுத்து தட்டிக் கேட்கும் குரலைக் கொடுத்த தலைவனின் கைகளை பலப்படுத்தி தொடர்ந்து நடப்போம். வெற்றி என்பதே எமது இலக்கு ஆகும்.

**- நாதன்**

# புலிகளின் ஆழ்கடல் யுத்தத்திற்கு ஓர் பயிற்சியே முல்லைச்சமர்!

**– இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ்**

ஆழ்கடற்பரப்பில் கடற்படையுடன் நடாத்தும் யுத்தத் திற்கு ஒரு பயிற்சியாகவே முல்லைக் கடற்சமரை புலிகள் திட்டமிட்டிருக்கிறார்கள். மிகவும் கவனமான முறையில் கணிக்கப்பெற்று நடத்தப்பட்ட இத் தாக்குதல் இது வரையில் எதிர்பார்க்கப்படாததாகும். இவ்வாறு 'சண்டே ரைம்சின்' இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் கூறு கின்றார்.

முல்லைத்தீவில் நடைபெற்ற கடற்சமர் பற்றி "சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழில் அவர் மேலும் தெரிவித் திருப்பதாவது:

கடந்த சில மாதங்களாகவே, முல்லைத்தீவின் கடற் கரையோர பகுதியும், கடற்புலிகளின் முக்கிய தளமுமான "சாலை''யில் இவ்வாறான தாக்குதல் ஒத்திகைகளில் கடற்புலிகள் ஈடுபட்டிருந்தனர். இது கடற்புலிகளின் தளபதி சூசையின் நேரடிக் கண்காணிப்பிலேயே நடை பெற்றது. விமானப்படை சந்தித்துள்ள இழப்புக்களால் அதன் உதவி பெறப்படாத சந்தர்ப்பத்தில் கரையில் இருந்து பல மைல் தொலைவில் கடற்படையை யுத்தத் திற்கு இழுக்கலாம் என புலிகள் உணர்ந்திருக்கின்றனர்.

மிகவும் இரகசியமான முறையில் திருகோணமலை துறைமுகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட கடற்படையின் நடவடிக்கையை புலிகள் எவ்வாறு அறிந்திருக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பப்படுகிறது.

துறைமுகத்தின் தெற்குப்புறமாக கட்டைப்பறிச்சானில் இருந்து பவுள்முனைவரையிலான பகுதிகளில் உள்ள நிலைகளிலிருந்தே கடற்படைக் கப்பல்களின் புறப்பாட் டைப் புலிகள் அறிந்திருக்கலாமென்றே கடற்படை அதி காரிகள் கருதுகின்றனர். இப்பகுதி முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது.

இது பற்றி குறிப்பிட்ட கடற்படையதிகாரி ஒருவர், இவ்வாறான கடல் ரோந்துக்கென கடற்படைக் கப்பல்கள் கடந்த எட்டுவாரங்களுக்கும் அதிகமாக புறப்படவில்லை என்றும், முதற்தடவையாக இரகசியமான முறையில் புறப்பட்டபோது அதற்காகவே புலிகள் காத்திருக்கின்ற னர் என்றும் தெரிவித்துள்ளார் என இக்பால் அத்தாஸ் மேலும் கூறுகின்றார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேல்நோக்கிய பயணி

பிரம்மஞானி

**பிரேமிள் [தர்ம சிவராமு] ஒரு புதுமைக் கவிஞர். புதுக் கவிதையில் புதிய பரிமாணங்களைத் தொட்டுக் காட்டியவர். படிம உலகில் புதுமைகள் செய்தவர். அவர் படைத்த கவிதை உலகம் தனித்துவமானது. அபூர்வமான உணர்வுகளைக் கிளறிவிடும் வீச்சும் வேகமும் அவரது கவிதைகளுக்குண்டு.**

படிமவாதி என்றும், குறியீட்டுக் கவி என்றும், கனவுலகக் கற்பனாவாதி என்றும், மிகையுணர்ச்சிக் கவி என்றும் தனது படைப்பிலக்கியத்திற்கு குத்தப்படும் அடையாள முத்திரைகள் எதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. காவியத்தனமான ஆன்மீகச் சுயதேடலிலிருந்து தனது கவிதைகள் உருவகம் பெறுவதாக அவர் கூறுவார். "நான் என்னையே தேடிச் செல்கிறேன். இந்தத் தேடலில் தான் என்னுடைய சாராம்சம் உள்ளது. தேடலின்போது நான் நடந்துசெல்லும் பாதை கவிதையினுடையது" என்று பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

1939–ம் ஆண்டு, திருகோணமலையில், ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த பிரேமிள், அறுபதுகளில் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' பத்திரிகை மூலம் பிரபல்யமானார். எழுபதுகளின் ஆரம்பத்திலிருந்து தமிழ் நாட்டில் வசித்து வந்தார். எழுத்தில் அவர் படைத்த புதுக் கவிதைகள் சொற்பம். ஆனால், புதுக் கவிதை பற்றி நிறைய எழுதினார். 'எழுத்து'விற்குப் பின் சிறு பத்திரிகைகளில் அவரது கவிதைகள் வெளிவந்தன. குறுநாவல், சிறுகதைகள், இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளாக அவரது படைப்பிலக்கியம் விரிகிறது. எனினும் கவிதை இலக்கியம் அவரது சிருஷ்டிக் களம். கவிதையில்தான் புதுமை செய்திருக்கிறார்.

புரியமுடியாதவாறு பூடகமாக எழுதுகிறார் என அவர் பற்றி கண்டன விமர்சனங்கள் எழுப்பப்படுவதுண்டு. தனது கவிதைகளை புத்திபூர்வமாகப் புரிந்து கொள்வதைவிட உணர்வுபூர்வமாக



உணர்ந்துகொள்வதுதான் முக்கியம் என்பது அவரது வாதம். வாசகனை உணர்வுபூர்வமாக ஒரு உன்னத நிலைக்கு இட்டுச் செல்வதுதான் எனது நோக்கம் எனக் கூறுவார்.

'மேல் நோக்கிய பயணம்' என்ற நீண்ட கவிதையை நூலாக வெளியிட்டு எனக்கு ஒரு பிரதியை அனுப்பியிருந்தார். பின்பு நேரில் சந்தித்தபொழுது அக்கவிதை பற்றி எனது கருத்தைக் கேட்டார். "அகவெளியின் ஆழங்களைத் தொடும் 'மெட்டாபிஸிக்ஸ்' கவிதை" என்றேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை. அவரது மௌனத்தில் ஒரு இணக்கப்பாடு தெரிந்தது.

இளம் பராயத்திலிருந்தே நிறைய வாசித்தவர். ஆங்கிலம், சமஸ்கிருதத்தில் பாண்டித்தியம் பெற்றவர். மேலைத்தேய கீழைத்தேய நாகரீகங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள், தத்துவங்கள் என்ற ரீதியில் உலகளாவிய சிந்தனைப் போக்குகளை கிரகித்துத் தெளிவுபெற விடாது முயற்சி செய்தவர். அவரது கவிதைகள் காணப்படும் படிமச் செறிவுக்கு இந்தப் பரந்த வாசிப்பு உதவியது. தமிழுக்கும் அது புதிய செழிப்பை அளித்தது.

ஆழ்நிலை அனுபவங்களுக்கு இட்டுச் செல்லும் படிமச் சித்திரங்களாக அவரது கவிதைகள் அமைவதைக் காணலாம். படிமங்களில் பரிசோதனை செய்து புதுக்கவிதைக்கு புதுமை சேர்த்தார். படிமப் பிரயோகத்தில் அவரது ஆற்றலை வெளிப்படுத்தும் இந்தக் கவிதையைப் பாருங்கள், 'முதுமை' என்ற தலைப்பில் வெளியான சிறு கவிதை.

காலம் பனித்து விழுந்து
கண்களை மறைக்கிறது
கபாலத்தின் கூரையுள்
ஒட்டியிருந்து
எண்ணவலை பின்னிப்பின்னி
ஓய்கிறது மூளைச் சிலந்தி
உணர்வின் ஒளிப்பாட்டில்
புலனின் வாடைக்காற்று
வாரியிறைத்த பழந்தூசு.
உலகை நோக்கிய
என் வீழி வியப்புகள்
உயிரின் இவ் அந்திப் போதில்
திரைகள் தொடர்ந்து வரும்
சவ ஊர்வலமாகிறது.
ஒவ்வொரு திரையிலும்
இழந்த இன்பங்களின்
தலைகீழ் ஆட்டம்
அந்தியை நோக்குகிறேன்
கதிர்க்கொள்ளிகள் நடுவே
ஏதோ எரிகிறது...
ஒன்றுமில்லை
பரிதிப் பிணம்.

'முடிச்சுக்கள்' என்ற கவிதையின் ஒரு அலகாக இந்த வரிகள்,

மண்ணைப் பிடித்தான் கடவுள்
மனிதனாயிற்று, ஆகி
அது என்ன உளிச் சத்தம்?
கல்லைச் செதுக்கிச் செதுக்கி
கடவுளைப் பிடிக்கிறது
மண்.

கிரகிக்கும் மனதின் நேரடி அனுப



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வத்திற்கு அப்பால் உணர்வுலக விழிப்பு நிலைகளை தூண்டிவிடும் படிமக் குறியீட்டுக் கவிதைகள் நிறைய எழுதியிருக்கிறார். விபரிக்க முடியாத ஒரு வசீகரம் அவற்றில் இழையோடும். அந்த வரிசையில் இதுவும் ஒரு குட்டிக் கவிதை.

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது

பிரேமிளின் கவிதைகளில் வெளிப்பாடு காணும் சுயதரிசனத்தை நோக்கிய தேடல் ஆன்மீகரீதியானது. இந்த ஆன்மீகம் மதம் சம்பந்தப்பட்டதல்ல. சத்தியத்தை நோக்கிய மனிதத் தேடலையே அது குறிக்கும். இந்த மெய்ஞானத் தேட்டத்தில் நாட்டம் கொண்டவரான பிரேமிள், ஜிட்டு கிருஷ்ண மூர்த்தி, ரமண மகரிஷி போன்றோரை ஆழமாகப் புரிந்துகொண்டவர். அவரிடம் கிருஷ்ணமூர்த்தியின் தாக்கம் அதிகமாகத் தென்படும். கிருஷ்ண மூர்த்தி கூறும் அகன்ற பிரபஞ்ச விழிப்புணர்வை கலாரீதியான உணர்வாகக் கொள்கிறார் பிரேமிள். இதனை ஒரு பேட்டியில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார். "கலாரீதியான உணர்வு என்பது, எல்லாவிதமான மனத்தடைகளையும், சமூகரீதியான தடுப்புக்களையும், வேலிகளையும், தேசங்கள் மொழிகள் சம்பந்தமான எல்லைகளையும், நம்பிக்கைகளையும் தாண்டி, மனிதனை மனிதன் தொற்றக்கூடிய தன்மையுள்ள ஒரு வீர்யம்" இதுதான் பார்வையின் அத்திவாரம் என்கிறார் பிரேமிள்.

தமிழ் இலக்கிய உலகில் பிரேமிள் ஒரு சர்ச்சைக்குரிய படைப்பாளியாக விளங்கினார். அவரது இலக்கியத் திறனாய்வு எழுத்துக்கள் தமிழ் இலக்கிய உலகில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது. மிகவும் கடுமையான தொனியில் கண்டன விமர்சனங்களை எழுதி முதுபெரும் எழுத்தாளர்களை ஈவிரக்கமின்றிச் சாடினார் பிரேமிள். விமர்சகர்களை கடுமையாக விமர்சித்தார்,

> பிரேமிள் இன்று உயிருடன் இல்லை. உணர்வுத்தூரிகையால் அவர் வரைந்த படிம ஓவியங்கள் உயிர்க் கவிதைகளாக தமிழுலகில் என்றும் நிலைத்திருக்கும்.

இதனால் பல எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் பகைத்துக்கொண்டார். தமிழ் இலக்கிய உலகில் பிரேமிளின் கவித்துவத்திறனாற்றல் ஓரங்கட்டப்பட்டு அந்நியமானதற்கு இதுவும் ஒரு காரணம்.

பிரேமிள் ஒரு விசித்திரமான தனிப்போக்குடையவர். தன்னைச் சுற்றி ஒரு தனியுலகை சிருஷ்டித்து வாழ்ந்தவர். அந்தத் தனித்துவ அறிவுலகில் சகிப்புத்தன்மைக்கும் சமரச மனப்பான்மைக்கும் அவர் இடமளிப்பதில்லை. இது பிரேமிளின் ஆளுமைச் சிக்கலாக இருக்கலாம். ஆயினும் இக்குறைபாட்டை மிகைப்படுத்தி அவரது படைப்பாற்றலை இழிவுபடுத்துவதோ அவரது கவிதைகளின் மகத்துவத்தை மதிப்பிறக்க முனைவதோ தவறானதாகும்.

எண்பதுகளின் நடுப்பகுதியில், சென்னையில் பிரேமிளை ஒரு தடவை சந்தித்தபோது, 'தமிழீழத்தில் ரணகளம்' என்ற புகைப்பட நூலுக்கு ஒரு கவிதை எழுதித்தருமாறு கேட்டேன். மறுநாளே கவிதையுடன் வந்தார். 'உதிர நதி என்ற தலைப்பில் வெளியான அக்கவிதை இது.

அச்சிட்ட எழுத்துக்களின்
அறிவிப்புப் பவனி
ஸ்தம்பிக்கிறது.
செய்தித் தாளில்
பிரதிபலிக்கும்
வாசக முத்துக்குள்
அலறுகின்றன
ஓராயிரம்
கபாலங்கள்
அலறும் ஒவ்வொரு
அச்செழுத்திலும்
குரல்பெறுகிறது ஓர்
மூதாதை இனம்.
மனித வர்க்கத்தின்
மனச்சாட்சியினுள்
பாய்கிறது அதன்
உதிர நதித் துடிப்பு.
நேற்றிலிருந்த முற்றத்தில்
மழலை விளைத்து இன்று
குற்றுயிராய் துடிக்கும்
குழந்தையின் நாளத்தில்
நேற்றைக்கும் மிகமுந்தி
எகிப்தின் பிரமிட்கள்
எழுமுன்னாடி ஒரு
யுகத்தின் வாசலில்
இமயம் உருகி
ஏழு கிளை விரித்து
பிரவஹித்த சப்த
சிந்து துடிக்கிறது.
துடித்துக் கொடுங்கோலின்
துப்பாக்கி ரவை மழையில்
உடைந்து சொரிகிறது.

பிரேமிள் இன்று உயிருடன் இல்லை. உணர்வுத் தூரிகையால் அவர் வரைந்த படிம ஓவியங்கள் உயிர்க்கவிதைகளாக தமிழுலகில் என்றும் நிலைத்திருக்கும்.

★★★

## இலங்கையில் யுத்தத்தினால்
# பல மில்லியன் டாலர் இழப்பு

இலங்கையில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை பல மில்லியன் டாலர்கள் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் ஆரம்பித்த நாள் முதல் இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது வரை நேரடி இழப்புகளாகவும் இழந்த வாய்ப்புக்களாகவும் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பு 160 கோடி அமெரிக்க டாலர்கள் என உலகவங்கி மதிப்பீடு செய்துள்ளது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின் இன்றுவரை யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு முன்னையதிலும் பார்க்க பல மடங்கு அதிகமாகும் என கொழும்பில் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தேசிய இனப்பிரச்சனை தீர்க்கப்படாத காரணத்தினால் நாடு இன்று பாரிய உள்நாட்டு யுத்தம் ஒன்றிற்கு முகம் கொடுத்து நிற்கின்றன. இந்த யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வராவிட்டால் நாட்டின் முன்னேற்றத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க முடியாது எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுட்டும் விழிச் சுடர்



வெம்மை பரவிய வீதி. அவசரமாக ஓடுகின்ற மனிதர்களாக சருகுக் குவியல்கள் காற்றில் அள்ளுண்டு போயின. மனம் முளுக்க வெப்பியாரமாக இருந்தது. ஆரவாரங்களின்றி எல்லாம் முடிந்து போன வாழ்க்கையில் குறுக்கிடயாரும் வரமாட்டார்கள். அந்த அமைதி, எவரது குறுக்கீடுகளுக்குமற்ற குரூமான திருப்தியைத் தந்தது. எதற்கும் பயந்து ஒடுங்கி, எல்லாவற்றுக்குமே அஞ்சி வாழ்ந்த வாழ்க்கை இனி இல்லை.

இந்த மூன்று இரவுகளும் அவளுக்கு வாழ்வில் என்றுமேயில்லாத நிம்மதியைக் கொடுத்தன. இனிவரப்போகும் இரவுகளும் அப்படித்தான் இருக்கும். அப்படித்தான் இருக்க வேண்டுமென உள்ளம் அங்கலாய்த்தது.

இனிமேல் இரவின் அகால வேளைகளில் அடுக்களையில் பானைகளும், சட்டிகளும் உருளாது, மதுவாயுடன் நாக் குழறஉறுமுகின்ற அந்த ஆண் குரலின் அதட்டல் ஒலியும் கேட்காது. இன்னும் தாங்க முடியா உதைகள் பட்டு, வலிகள் நிறைந்து போன மனமும் உடலும் அமைதியடையும்.

மாட்டுக் கொட்டிலுக்குள் நிறைந்த சாணத்தை மிதித்துச் சேறாக்கியபடி சிவப்பிப் பசு கத்தியது. அதனது கன்று லட்சுமிக் குட்டி துள்ளி ஓடிப்போய் பூவரசங் கதியாலே தன் உடலைத் தேய்த்துக் கொண்டது. கன்றுக் குட்டியைத் தேடி அழைத்துத் தான் அது கத்தியிருக்க வேண்டும். அம்மா கொட்டிலுக்குள் இருந்த மேய்ந்த புற்களின் அடிவேர்களை எடுத்து வெளியே எறிந்துவிட்டு புதிய புற்கட்டு ஒன்றை அதற்குள் போட்டாள்.

சிவப்பிப் பசு ஒருமுறை தனது நீள் வாலால் தன்மேலுள்ள ஈக்களை விரட்டியபடி புற்களை முகர்ந்து விட்டு அப்பால் விலகியது. அம்மா அதை வாஞ்சையோடு தடவிக் கொடுத்தாள். அதை ஏற்றுக் கொண்டது போல தலையை ஒருமுறை ஆட்டிவிட்டு மீண்டும் கத்தியது. தனது பிள்ளையைப் போல பாசம் வைத்த அந்தப் பசுவோடுதான் அவளது வாழ்க்கையும் சீவியமும் போய்க்கொண்டிருக்கிறது. அதனாலோ, என்னவோ தனது மகளைப் போல என்னவோ தனது மகளைப்போல மாய்ந்து மாய்ந்து தீனிபோட்டு அதனை வளர்த்தாள். அது இப்போது அவளது வாழ்வின் ஓர் அங்கமாகிவிட்டது.

எத்தனையோ தடவைகள் அவளது கணவன் தனது சட்டைப் பையினுள் காசு வரண்டவேளைகளில் குடிப்பதற்காக அதனை விற்கப்போவதாக சண்டை பிடித்திருந்தான். அவள் மறுத்து முரண்டுபிடித்த நேரங்களில் அவளை வாயில் வந்தபடியெல்லாம் வசைமாரி பொழிந்துவிட்டு, இருக்கின்ற தட்டு முட்டுச் சாமான்களை ஒவ்வொன்றாகக் கொணஅடு போனான். அவன் வீட்டிலுள்ள பெறுமதியான பொருட்கள் எல்லாவற்றையும் வித்துச் சுட்டுக் குடித்தபோது, அவளது புத்திசாதுரியத்தால் அந்தச் சிவப்பிப் பசுமட்டும் அவளிடம் எஞ்சியிருந்தது.

நேற்றும் பொன்னையர் வீட்சுக்குப் பால் வித்த காசாக முன்நூறு ரூபா வந்தபோது, தனது உழைப்பின் பலாபலன்களை எண்ணிப் பூரித்துப் போனாள். அந்தக் காசில் மகள் வாணிக்குச் சட்டை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக நினைத்திருந்தாள். வாணிக்கு நல்ல சட்டைகள் ஒன்றும் இல்லாத தையிட்டுக் கவலைப்பட்ட நாட்கள் அதிகம்.

எல்லோலையும் போல் அவளுக்கும் ஒரு நல்ல தந்தை வாய்த்திருந்தால் அவள் இயன்றவரை குறைகூறாது வளர்ந்திருப்பாளோ?

எதற்கெடுத்தாலும் அவளுக்கு இப்போது சீறிச் சினக்கின்ற குணம் வந்துவிட்டது. யாரோடும் இந்த வாழ்க்கையை ஒப்பிட்டுக் கதைக்கத் தொடங்கியிருந்தாள்.

"எப்பவும் நீங்கள் இப்பிடித்தான். மாலா வீட்டைப்பாருங்கோ அதுகள் எப்பிடிஇருக்குதுகள் எண்டு"

அவளுக்கு விவரம் புரிகிற வயதுதான் என்று எல்லாவற்றையும் கேட்டு இயன்றவரை அவளைக் கவலை தெரியாமல், குறைகள் கூறாமல் வளர்க்க அவள் படுகிறபாடு.

"விரலுக்குத் தக்க வீக்கம் வேணும் பிள்ளை. எல்லாரையும் போல உண்டு, உடுக்கிறதுக்கு கையிலை வேணும் மேனை"

என்ன இருந்தாலும் அம்மா கலங்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வதை அவளால் பொறுத்துக் கொள்ள முடியாதுதான். அப்பா என்ற பிறவி குடியில் மூழ்கிப்போன பின்பு எல்லாத் துன்பங்களையும் தன் தலையிலே சுமந்து அவளுக்கு எல்லாமுமாய் விளங்குகின்ற அம்மா கவலைப்படுவதைத் தாங்கமாட்டாள்.

இவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் அவள் படிக்க வேணும் என்பதில் அம்மா விடாப்பிடியாய் நின்றாள்.

"பெட்டைக் கழுதைக்குப் படிப்பென்னத்துக்கு?"

என்று ஒரு முறை வீட்டுக்கு நேரம் பிந்தி வந்ததற்காக தகப்பன் அவளைப் படிப்பிலிருந்து நிறுத்தச் சொன்ன போது, அம்மாதான் அவளைப் படிப்பிக்க வேணும் என்பதற்காக வாதாடினாள். தான் கையெழுத்துகூட வைக்கத் தெரியாத நிலையில் சின்னத்தம்பிக்கு வாழ்க்கைப்பட்ட கதி தன் மகளுக்கு வந்துவிடக்கூடாது என்பதை அடிக்கடி தன் மகளுக்குச் சுட்டிக் காட்டுவாள். அந்தத் தாயுள்ளத்தின் வேதனைகளும் எதிர்பார்ப்புகளும் தன்னால் நிறைவேற வேண்டும் என்ற ஆசை வாணியிடம் இருந்தாலும் பொருளாதார நெருக்கடிகளால் திணறும் போது அவள் சில வேளைகளில் சலிப்படைந்ததுண்டு.

"எனக்குப் புத்தகம் வாங்கித்தாணை. இல்லாட்டி நான் பள்ளிக்கூடம் போக மாட்டன்.

என்று அடம்பிடிக்கும் போது, அவளுக்குப் புதிமதிகூறி அனுப்புவதற்குள் அவளுக்குப் போதும் போதும் என்றாகிவிடும். அவளது கணவனைப் போல வாணியின் எதிர்காலமும் குணங்களும் ஆகிவிடக்கூடாது என்று அவள் எதிர்பார்த்திருந்தாலும், அவனது அந்தப் பிடிவாதக் குணம் இவளிடம் அப்படியே இருந்தது. அவள் அதை அவளைவிட்டு இல்லாமல் செய்வதற்கு மிகுந்த பாடு பட்டிருக்கின்றாளி.

"பிள்ளை நீ ஒருத்தனோடை வாழப் போறனீ மேனை, உப்பிடியே எல்லாத் துக்கும் முரண்டுபிடிச்சுக் கொண்டு நிண்டியெண்டா நீ உருப்படமாட்டாய் மேனை"

அம்மா தன்னுடைய காலத்து நியாயங்களைக் கூறியபோதும் அவளிடம் அவைகள் எடுபடாது.

'விருத் தெரியிற வயசில எல்லாம்
சரியாப் போகும்'

என்று அம்மா தனக்குள் சமாதானப் பட்டுக்கொண்டாள்.

வெயில் அனல் பறந்தது. முற்றத்தில் நின்ற செம்பருத்திச் செடியும் துளசியும் வாடிப்போயிருந்தன. படலையைத் திறந்து கொண்டு கையில் புத்தகங்களுடன் வாணி வந்தாள். வரும்போதே 'பசிக்குது' என்று வருகின்ற அவளது குரல் வழமைக்கு மாறாக அடங்கிப் போயிருந்தது.

"பிள்ளை, நான் இஞ்சை நிக்கிறன். முகத்தைக் கழுவிப்போட்டுச்சாப்பிடு"

அம்மாவின் குரலுக்கு அவளிடமிருந்து ஒரு அசைவுமில்லை. ஏதோ பறிகொடுத்தவள் மாதிரி இருந்தாள். அடிக்கடி தலையைப் பிடித்தபடி ஆழமாக எதையோ சிந்தித்தாள். அம்மாவுக்கு அவளைப் பார்க்க விசித்திரமாக இருந்தது.

இரண்டு மூன்று நாட்களாக இப்படித்தான் ஏதோ பிரமை பிடித்தவள் போல அசைவற்றிருந்தாள். ஒழுங்காக நேரத்துக்குச் சாப்பிடவில்லை. கேட்கிற கேள்விகளுக்கு பெரும் பிரயத்தனத்தின் பின்னரே அவளிடமிருந்து பதில்வந்தது. அம்மாவுக்கு அவளை விளங்கிக் கொள்ளமுடியாமல் இருந்தது. கண்கள் ஒளியிழந்தன போல் இரத்தப் பசையின்றித் தெரிய, அவள் முன்பைவிட மெலிந்திருந்தாள்.

பக்கத்து வீட்டுச் சின்னாச்சிக் கிழவிக்கு இவளது தோற்றம் மாறுபாடாகத் தெரிந்திருக்க வேண்டும். என்ன நினைத்தாளோ?

"கேக்கிறன் எண்டு கோவிக்காதை மேனை. உவன் தகப்பன் செத்தாப் பிறகு உவளுக்கு உது வந்திருக்கிறபடியாலை ஏதேனும் கெட்டகாத்துப்பட்டுதோ? ஒருக்கா மை போட்டுப் பார் மேனை"

அம்மா அதைக் காதில் கேளாதவள் போல் விட்டிருந்தாள். சின்னாச்சிக் கிழவிக்கு வாய்த்துடுக்கு அதிகம். வீட்டு வண்டவாளங்களையும் தூக்கிப் பிடித்தபடி ஊர் பூராவும் கதை காவாவிட்டால் அவளுக்குப் பைத்தியப்படாது. இப்படியான தன்மை கொண்ட சின்னாச்சிக் கிழவியுடன் அம்மா தொடர்புகளை வைத்திருக்க விரும்புவதில்லை. எவருடைய பிச்சல், பிடுங்கலுமின்றி அம்மா வாழ விரும்பினாள்.

"மேனை என்ன தலையிடிக்குதே? அல்லது படிக்கப்போன இடத்திலை ஏதும் நடந்ததே?"

வாணி விம்மி விம்மி அழுதாள். முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்தபடி அவள் குலுங்கிக் குலுங்கி அழுவதைப் பார்க்க அம்மாவுக்குத் தாள வில்லை. முன்னொரு போதும் அவள் இப்படி அழுததை அம்மா பார்த்ததில்லை. தகப்பன் வீட்டில் 'ருத்திர தாண்டவம்' ஆடிக்கொண்டிருக்கும் நேரத்தில் அவள் ஒடுங்கிப் போய் இருப்பாள், உயிரைக் கொல்ல வருகின்ற ஒரு மெலிய பிராணியைப் போல விழிகள் பிதுங்க காத்திருக்கின்ற அந்த நேரங்களைவிட இன்று அந்த நேரங்களைவிட இன்று பயந்துபோய் இருந்தாள்.

ஊரிலுள்ளோர் அவளது மகளைப் பற்றி இப்போது கண், மூக்கு, காதெல்டுலாம் வைத்துக் கதைக்கத் தொடங்கி விட்டனர். அவள் இப்போது ஒடுங்கிப் போய் விட்டிருந்தாள். அம்மா பெரிய கனவுகளோடு வளர்க்க ஆசைகொண்ட மகள் மெல்ல மெல்ல வாடிக்கொண்டிருந்தாள். இப்போது வெளியில் அவளது தலைக்கறுப்பே தெரிவதில்லை. வீட்டுக்குள் குருட்டு யோசனையுடன் ஆழ்ந்திருப்பாள். முன்னைய அந்தத் துடிப்பாட்டங்கள் கலகலப்பு எல்லாமே அவளைவிட்டு விடை பெற்றிருந்தன. சதா ஏக்கம்பிடித்த விழிகள் அவளுக்கு வயதுக்கு மீறிய தோற்றத்தைக் கொடுத்தன. அந்தச் சமுதாயம் அவளை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருந்தது.

சின்னாச்சிக் கிழவி, அதை அழித்து விடும்படி சொன்னாள். எல்லாம் நீ கொடுத்த இடம்" என்று அம்மாவைத் திட்டிக் கொண்டு போனாள்.

அம்மா தன் வெப்பியாரங்களையெல்லாம் தன் மகளிடமே காட்டத் தொடங்கினாள். தனது இயலாமையால் சில வேளைகளில் அவளின் கைகள் நீளும் பின்பு எல்லாம் அடங்கி மனம் நொந்து அழுவாள். ஒரு பாவமும் அறியாத உயிர் ஒன்று அழிவதை அம்மா துளியும் விரும்பவில்லை.

அவளது மகளின் வாழ்வைச் சீரழித்தவனை அம்மா தேடித்தேடி அலுத்துப் போனாள். அந்தக் கயவனை அடிக்கடி வீட்டுக்குக் கூட்டிவந்து அண்டிய அவளது குடிகாரக் கணவனை சபித்தாள்.

"ஏணிப்பிடி ஏமாந்துபோனாய்? சொல்லன் மேனை"

மகளை உலுக்கி எடுத்தாள். அம்மாவுக்குத் தாங்கமுடியாமல் இருந்தது. அவளது தொண்டை அடைத்தது, குரல் கரகரத்தது வாழ்வின் தேக்கத்தால் குழிவிழுந்துபோன கண்களில் நீர் நிறைந்தது.

"அவர் கடைசிவரையும் என்னை வச்சுக் காப்பாத்துறன் எண்டு சொன்ன



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரணை"

அழுகையினூடே திணறித் திணறி அவள் சொன்னாள். சின்னாச்சிக் கிழவி மூன்றாவது முறையாகவும் வந்து புத்தி மதி சொன்னாள்.

"தேப்பன் பேர் தெரியாத பிள்ளை யெண்டு ஊர் சிரிக்கப்போகுதெல்லே. ஊர்ப்பரியாரியிட்டைப் போனாள், ஒரு கணக்குமில்லாம முடிச்சுப் போடு வார் ஆளுக்கும் பேருக்கும் தெரியாது"

அம்மாவுக்குச் சினமாக இருந்தது. சின்னாச்சிக் கிழவியின் வார்த்தைகள் அம்மாவுக்கு வெறுப்பை ஊட்டின.

ஒருநாள் அதிகாலை பின்வளவில் அம்மிக்குழவி தேய்கின்ற சத்தம் கேட்டு அம்மா திடுக்கிட்டபடி எழும்பிச் சென்று பார்த்தாள்.

அலரி விதைகள் அரைகுறையாக அரைபட்ட நிலையில் அம்மியில் குழையலாக இருந்தன. வாணியினு டைய முகம் அழுது வீங்கி உப்பி இருந்தது.

அம்மாவுக்கு நெஞ்செல்லாம் பற்றி யெரிவது போலிருந்தது. ஓடிச்சென்று எல்லாவற்றையும் தூக்கி வீசி....

அம்மாவைக் கூட்டிக் கொண்டு அவள் அழுதாள். அதன் பிறகு அம்மா அவளைத் தனியே விட்டுப் போவ தற்குப் பயந்தாள்.

வாணிக்கு மிகுந்த மன வலியையும் உடல் வலியையும் கொடுத்துக் கொண்டு அந்தக் குழந்தை இந்த மண்ணுக்கு வந் தது. பூவாக மலர்ந்திருந்த அந்த அழ கிய பெண் குழந்தையை அவள் நீண்ட நேரம் பார்த்தாள். அவளது விழிகளில் நீர் நிறைந்தது.

அம்மா ஓடி வந்தாள். குழந்தை யைத் தூக்கி அணைத்தாள். அவளது கண்களில் பிரகாசம் தென்பட்டது என்றுமில்லாத அமைதியும் பூரிப்பும் முகத்திற் பரவியிருந்தது.

"ரெண்டு மூண்டு நெல்லுமணியை மூக்குக்குளை வச்சுவிடு"

மெல்லிய குரலில் மகளிடம் அவர் கள் சொன்னார்கள். அம்மா திடுக்கிட் டபடி திரும்பினாள், அவளின் பார்வை யில் வெறுப்புப் படர்ந்திருந்தது. குழந்தை வீரிட்டுக் கத்தியது அம்மா வாஞ்சையோடு அதன் பிஞ்சுவிரல் களை வருடினாள். அது அமைதியாய் விழிகளை விரித்தது.

கரிய நிழல் படர்ந்த பனைவெளி யூடாக சூரியக்கதிர்கள் மண்ணிற் படர்ந்தன. சுருக்கங்கள் படிந்த முகத் திலே அவளுக்குள் கனவு விரிந்தது.

★★★

# சிறுகதையின் கதை

சிறுகதை என்பது ஒரு தனிப்பட்ட இலக்கிய வகையாகும். அது உலகிலே தோன்றி 140 ஆண்டுகளுக்கு மேலாகின்றது.

அமெரிக்கரான உலகப் புகழ்பூத்த இலக்கிய ஆதிரியர் 'எட்கார் அலன் போ' என்பவரால் தொடக்கிவைக்கப்பட்ட வைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட இலக்கிய வடிவமே சிறுகதை எனலாம்.

இந்திய மொழி ஆசிரியர்களில் முதன் முதல் சிறுகதை ஆக்கமுயற்சியில் ஈடுபட்டவர் கவி ரவீந்திரநாத் தாகூரே. தாகூரை பின்பற்றி தமிழ் மொழியில் வ.வே.சு. ஐயரும், சுப்பிரமணிய பாரதியாரும் சிறுகதை இலக்கியத்திற்கு உருவம் அமைத்தனர்.

தாகூர் எழுதிய கதையொன்றை முன்மாதிரியாகக் கொண்டே வ.வே.சு ஐயர் 'குளத்தங்கரை அரசமரம்' என்னும் சிறுகதையை எய்தினார். அவர் எழுதிய கதைகள், 'மங்கையற்கரசியின் காதல் முதலிய கதைகள்' என்னும் பெயரில் நூல் வடிவில் வந்துள்ளன. "லைலா மஜ்னூன்", "எதிரொலிகள்", "அழேன் முக்கே" என்னும் கதைகளில் அவர் பிறநாட்டுக் கதாபாத்திரங்களை மிக ஆழமாகச் சித்தரித்துள்ளார்.

எந்த நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் தமிழ் மொழியிலே திறம்படச் சித்தரிக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக மேற்குறிப்பிட்ட கதைகள் விளங்குகின்றன. அவர் சிருட்டித்த கதாபாத்திரங்கள் உயிருடன் நடமாடுவன.

உண்மைக் காதல், தியாகம், வீரம் முதலிய மாண்புடைய மக்கட் பண்புகள் அவர் கதைகளில் சிறந்து விளங்குகின்றன. எனினும் அவர் எழுதிய கதைகளிலே சிறு கதைக்குரிய பூரண வடிவம் அமையவில்லை என் ஆய்வாளர் கருதுவர்.

சிறுகதை என்னும் இலக்கிய வடிவத்தை தமிழ் மொழியில் முதலில் அறிமுகப்படுத்தியவர் எந்த வகையிலும், சிறுகதை எழுதுவதில் ஓரளவு வெற்றிபெற்றுள்ளார் என்பதனாலும் வ.வே.சு. ஐயரை தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்று சொல்லுகிறார்கள்.

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளான வ.வே.சு.ஐயர், சுப்பிரமணிய பாரதியார், மாதவையா போன்றோரின் கதைகள் படித்து இன்புறத்தக்கதாக இருந்தபோதிலும் அவற்றை சிறந்த இலக்கியத் தரமுள்ள கதைகளாக இலக்கிய ஆய்வாளர்கள் ஏற்பதில்லை. தமிழில் சிறந்த சிறுகதைகளை எழுதியவர்களில் சிலராக புதுமைப்பித்தன், கு.ப.ரா. மௌனி, தி. ஜானகிராமன், லா.ச.ராமலிங்கம் முதலியவர்களைக் குறிப்பிடலாம்.

**ச. பாலசுந்தரம்** பி. ஏ.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இசைக்கலை



வாழ்வின் மொழி பெயர்ப்பே கலை என்பர். உள்ளத் துடிப்பின் வெளிப்பாடு, உணர்ச்சியின் உருவகம் என்றும் கூறலாம்.

வாழ்க்கையின் பல்வேறு கோணங்களிலிருந்தும் எழும் அனுபவத்தில் பிறந்து, கற்பனையுடன் கலந்து பிறர் மனத்திலும் அவற்றை உணர்ச்சிபூர்வமாகப் புகுத்துவதுதான் உயரிய கலைப் படைப்பாகும்.

ஆதி மனிதன் காட்டில் அலைந்து திரிந்த காலத்திலே வெறும் ஒலிகளாகவும் ஓலமாகவும் பிறந்த மகிழ்ச்சிக் கூச்சல் நாளடைவில் நாகரீக வளர்ச்சிக்கேற்ப இராகம், தாளம், பாவம் முதலிய விதிகளுடன் உயிர் பெற்று வளர்ந்துள்ளது. இத்தகைய இசைக்கலையானது செவிக்கு மட்டுமன்றி மனதுக்கும் இன்பம் தரும் இன்கலையாகும்.

இக்கலையானது மனித வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ளது. உள்ளம் சோர்வுறும் பொழுதும் உடல் தளர்வுறும் பொழுதும் அவற்றை போக்கிப் புத்துணர்ச்சியளிக்கிறது. ஆன்மாவோடு இசைந்து உணர்ச்சிகளைத்தூண்டி இன்பத்தைத் தருகின்றது. இவ் இசைக்கலை இறைவனைத் தொழவும் முதன்மையான கருவியாகக் கொள்ளப்படுகிறது. தெய்வீகக் கலையாக எண்ணப்பெறும் இக்கலையின் இன்றியமையாத கூறு இராகமேயாகும்.

இராகங்கள் ஜனகராகங்கள், ஜன்னிய இராகங்கள் என இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்திய இசையில் காணப்பெறாத இராகமோ, தாளமோ வேறெங்கும் காண முடியாதென்பர். இவ் இராகமுறையும் 72 மேள முறையும் இசையுலகிற்கு இந்திய இசைமேதைகள் வழங்கிய இன் கொடையெனில் மிகையாகாது. தூய இசை உண்டாவதற்கு வழிகாட்டியாக அமைவதும் இராகமே. இவ்விராகங்களைப் பழந்தமிழ் 'பண்' எனக்கூறும். பண் இசைத்தவரைப் பாணர், பாடினியர் எனும் பழந்தமிழ், பல்வகை யாழ்களையும், குழல்களையும் பயன்படுத்திக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் எழுவகைப் பண்களை இவர்கள் இசைத்தனர் என்கிறது. இவற்றிலிருந்து பிறந்தனவே இராகங்கள்.

இசையை நாட்டியத்தின் கூறாகக் கருதும் பரத முனிவர் இசையில்லா நாட்டியத்தை வெறும் உடற்பயிற்சியாகவே கருதுகிறார். நடனத்துக்கும் நாடகத்துக்கும் இசை இன்றியமையாதது. ஸப்த ஸ்வரங்கள் எவ்வாறு பயன்படுத்தப் பட வேண்டும் எனக்கூறும் பரத முனிவர் 'ஸ,ரி' இரண்டும் அற்புதம், வீரம், பயம் முதலியவற்றையும் 'க,நி' சோகத்தையும் 'ம,ப' காதல், மகிழ்ச்சி என்பவற்றையும், 'த' பயம், வெறுப்பு ஆகியவற்றையும் வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படவேண்டுமென்கிறார். இசைக்கு வேண்டப் பெறும் தாளம் பற்றிப் பரதர் கூறுகையில் 108 தாளங்கள் பற்றிக் கூறுவதுடன் அத்தாளம் அமையாவிடில் நாட்டியத்திற்கு உயிரேயில்லை என்றும் கூறுகிறார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இசை நாடகங்களில் மிக நீண்டது நாராயண தீர்த்தரின் கிருஷ்ணலீலா, தரங்கிணி என்னும் மகா வைத்தியநாத ஐயர் இயற்றிய 72 மேளராக மாலிகையும் இராமசாமி தீட்சிதரின் 108 இராக தாளமாலிகையும் மிக நீண்ட உருப்படிகளாகுமென்றும் கூறுவர்.

திருப்பதியிலிருந்த தாளம்பாக்கம்பாட்டாசிரியர்களே முதன்முதலாகப் பல்லவி, சரணம் என்னும் உறுப்புக்களுடன் கீர்த்தனங்களை இயற்றினாரென்றும், பின்னர் புரந்தரதாஸரே அவற்றுடன் அனுபல்லவியையும் சேர்த்தாரென்றும் கூறுவர். இவர்தான் அப்பியாசகான உருப்படிகளை முதலில் செய்தவராவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய இசைக்கலையானது அயல்நாட்டவரின் ஆதிக்கத்தாலும் உள்நாட்டவரின் ஆதிக்கத்தாலும் உள்நாட்டவர் ஊக்கக்குறைவாலும் வேற்றுமொழி இசை வந்து வேரூன்ற இடமளித்தது. தனித் தமிழின் இடத்தை வடமொழியும், தெலுங்கும் பெற்றன. 13–ம், 14–ம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களால் இசைப் பாக்கள் வளரவில்லை. 15–ம் நூற்றாண்டில் அருணகிரநாதர் தோன்றி திருப்புகழ் என்னும் சந்தப் பாக்களால் தமிழிசைக்குப் புத்துயிர் அளித்தார். 16–ம் நூற்றாண்டில் பதினென்சித்தர்கள் இனிய கருத்துக்களைச் சிந்து



முதலிய இசைப்பாக்களில் வெளியிட்டனர். சாதாரண மக்கள் உள்ளத்தைச் சித்தர் பாடல்கள் கவர்ந்தன. பின்பு தமிழிசை தாழ்ச்சியடைந்தது. தமிழ் நாட்டு இசையுலகில் அமிழ்தினுமினிய தமிழிசை மறைந்துபோகக் கர்நாடக இசை மலர்ந்தது. அடுத்து முத்துத் தாண்டவர், அருணாசலக்கவிராயர் ஆகியோர் 18–ம் நூற்றாண்டில் தோன்றி தமிழ் இசையைத் தழைக்க வைத்தனர்.

அடுத்து "சங்கீத மும்மூர்த்திகள்" என அழைக்கப்படும் தியாகராஜ சுவாமிகள், முத்துஸ்வாமி தீட்ஷிதர், சியாமா சாஸ்திரிகளின் காலம் மலர்ந்தது. இவர்கள் தெலுங்கிலும், வடமொழியிலும் ஏராளமான உருப்படிகளை இயற்றிக் கர்நாடக இசையை வளர்த்தனர். ஆனால் தமிழிசையை மீண்டும் தளிர்விடச் செய்து, தழைக்கச் செய்த பெருமை முக்கியமாக கோபாலகிருஷ்ண பாரதியையே சாரும். இவரின் "நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகள்" பாமர மக்களிடையிலும் அமோக ஆதரவைப் பெற்றன. கோபால கிருஷ்ண பாரதியைத் தவிர 19–ம் நூற்றாண்டில் தமிழிசைப் பாக்களை இயற்றிய வர்களுள் ஆனை ஐயா, இராமசாமி சிவன், கனம் கிருஷ்ணய்யர், மாயுரம் வேதநாயகம்பிள்ளை, சென்னிக்குளம் அண்ணாமலை ரெட்டியார், இராமலிங்க அடிகளார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் அருமுயற்சியால் நம் ரெட்டி நாட்டரச இராஜாசேர் அண்ணாமலை ரெட்டியார் அவர்களின் ஊக்குவிப்பாலும் நாடெங்கும் தமிழிசை மன்றங்கள் தோன்றின. இசையரங்குகளில் மீண்டும் தமிழிசைப் பாடல்கள் ஒலிக்கத் தொடங்கின.

**– துஷிதா**

# குடாநாட்டிலிருந்து தம் பிள்ளைகளை வெளியே அனுப்புகின்றனர் பெற்றோர்

'சிறீலங்கா இராணுவத்தின் எங்கும் நிறைந்த தன்மையுடன் யாழ். குடாநாடு மிதிவண்டிகளில் நகர்கின்றது' என சென்னை பல்கலைக்கழக தெற்கு – தென்கிழக்காசிய கற்கைகள் நிலைய பணிப்பாளர் பி.சூரியநாராயணன் தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டின் நிலை குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாணத்தில் 87 வீத பாடசாலைகள் இயங்குகின்றன. ஆயினும் 49 வீதமான மாணவர்களே வகுப்புக்களுக்கு சமூகளிக்கின்றனர். சில பெற்றோர் கொழும்புக்கும் பாதுகாப்பான பகுதிகளுக்கும் தமது பிள்ளைகளை அனுப்பியுள்ளார்கள்.

யுத்தத்தின் அழிவுகளையே எங்கும் காண முடிந்தது. கட்டடங்கள் தற்போதும் அழிந்தே காணப்படுகின்றன. மதில் சுவர்கள், கடைகள், வீடுகள் மற்றும் பாடசாலைகளில் துப்பாக்கிச் சன்னங்களின் துவாரங்களை பார்க்க முடியும். நிர்மாணப்பணிகளை அங்கு காணமுடியவில்லை. சீமெந்து தட்டுப்பாடாகவுள்ளது. சொற்ப எண்ணிக்கையான பேருந்துகளும் கார்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மிதிவண்டிகளிலேயே நகர்கின்றதென கூறலாம். அதாவது மிதிவண்டிகளே அங்கு பெருமளவில் போக்குவரத்திற்கு ஈடுபடுத்தப்படுகின்றன.

இரண்டு சதவீதமான மக்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 40 ஆயிரம் இராணுவத்தினரும் 300 பெண் இராணுவத்தினரும் உள்ளார்கள். இராணுவத்தினர் நவீனரக ஆயுதங்களுடன் காணப்படுகின்றார்கள். பாலியல் வன்முறைச் சம்பவங்கள், உடல் ரீதியான இம்சை சம்பவங்கள் ஆங்காங்கே இடம்பெறுகின்றன. அத்துடன் காணாமல் போனோர் தொகையும் அதிகரித்துக் காணப்படுகின்றதெனவும் குறிப்பிட்டுள்ளார்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணின் சுதந்திரம்

## முள்ளியவளை வன்னியர்கள்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே வன்னிப் பிரதேசங்களில் சிற்றரசுகள் சில தோன்றியிருந்தன. இற்றைக்கு ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வன்னியில் நாக மன்னனும் அவன் மகள் அநுராதியை மணம் புரிந்த உத்தி மன்னனும் ஆட்சி செய்தது பற்றி பெரிய புளியங்குளத்திலுள்ள நான்கு கல்வெட்டுக்களால் அறிகிறோம். இவர்கள் காலத்தின் பின் அநுராதபுர அரசு எழுச்சியுற வன்னிச் சிற்றரசுகள் தளர்ச்சியடைந்தன. பொலநறுவை இராச்சியம் எழுச்சிபெற்ற காலத்தில் (கி.பி.1017 – 1212) வன்னிப் பிரதேசம் முக்கிய சம்பவங்கள் நடைபெற்ற பிரதேசமாக விளங்கியது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வன்னிப் பிரதேசத்தில் மீண்டும் சிற்றரசுகள் வலுப்பெற்றன. வட இலங்கையில் யாழ்ப்பாண அரசு எழுச்சிபெற முன்பே வன்னிமைகள் தோன்றியிருந்தன. இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களான புத்தளம், அடங்காப்பற்று, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய வற்றில் வன்னியனார் அல்லது வன்னிபம் என அழைக்கப்பட்ட குறுநில மன்னர் ஆட்சியதிகாரம் செலுத்தியதற்கு வரலாற்றுச் சான்றுண்டு.

இவ்வன்னிமைகளில் தற்போதைய வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய அடங்காப்பற்று வன்னிமைகள் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானிய ஆவணங்களும் சுதேச வரலாற்றாதார நூல்களும் செப்பேடுகளும் அடங்காப்பற்று வன்னிமைகள் பற்றியே கூடுதலான தகவல்களைத் தருகின்றன. வையா பாடல், யாழ்ப்பாண வைபவ மாலை, புராதன யாழ்ப்பாணம் (Ancient Jaffna - C.Rasanayagam) வன்னிக் கைநூல் (Manual of Vanni District - J.P.Lewis) என்னும் நூல்களும் கயிலை வன்னியனார் மட தர்ம சாதனப் பட்டையம், நல்லமாப்பாணனின் ஓலை ஆகிய செப்பேடுகளும் ஒல்லாந்த தேசாதிபதிகளினதும் யாழ்ப்பாணக் கொமாண்டர்களினதும் அறிக்கைகளும் அடங்காப்பற்று வன்னிமைகளதும் வன்னிபங்களதும் பெயர்களையும் நிர்வாக முறைகளையும், மக்களின் சமுதாய வரலாற்றையும் கூறுகின்றன.

போர்த்துக்கேய ஒல்லாந்தர் காலங்களில் (1505 – 1796) அடங்காப்பற்றில் செட்டிக்குளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னன்மரப்படி, கருநாவற்பற்று ஆகிய வன்னிப்பற்றுக்கள் இருந்தன.

> **பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் கால இறுதியிலும் பிரித்தானியர் கால ஆரம்பத்திலும் வாழ்ந்து வன்னிப் பிரதேசத்தை ஆட்சி புரிந்திருக்கிறான். ஒல்லாந்தருக்கும் பிரித்தானியருக்கும் எதிராகத் தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறான்.**

அடங்காப்பற்று வன்னிமைகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்ட போதும் பெரும்பாலும் சுதந்திர அரசுகளாகவே திகழ்ந்தன. ஆரியச் சக்கரவர்த்திகளோ அல்லது பின்வந்த ஐரோப்பிய ஆட்சியாளர்களோ அடங்காப்பற்று மீது மேலாண்மை செலுத்தமுடியவில்லை. முள்ளியவளை, . பனங்காமம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வன்னியர்கள் யாழ்ப்பாண அரசருக்குப் படையுதவி அளித்ததோடு தாங்களே நேரிற் சென்று இராச்சியத்தைக் காப்பதற்கான போர்களில் ஈடுபட்டார்கள். ஆரியச் சக்கரவர்த்திகளில் ஒருவரான ஆறாம் பரராசசேகரன் (1519) ஒரு சிறிது காலம் முள்ளியவளைக்கு வந்து கோட்டையமைத்து ஆட்சி புரிந்தான் என்றும் முள்ளியவளை மூத்தயினார் ஆலயத்தைக் கட்டுவித்தான் என்றும் வையாபாடல் கூறுகின்றது.

கந்தமலி தாரிளவல் செகராசசேகரனைக்
கருணைகூர
இந்த யாழ்ப்பாணத்தில் இருக்கவென்றே
சித்தர வேலரையுமீந்து
வந்து முள்ளிமா நகரில் கோட்டையும்
நற்சினகரமும் வகுப்பித்தானால்.

இக்காலத்தில் முள்ளியவளை வன்னிமையின் அதிபதி யார் என்று தெரியவில்லை. போர்த்துக்கேயர் மிகக் குறுகிய காலமே (1620 – 1658) யாழ்ப்பாணத்தை ஆண்டனர். இவர்கள் காலத்தில் கயிலை வன்னியனது பெயரையே அறியக்கூடியதாக இருக்கிறது. ஏனைய வன்னிப்பற்றுக்களின் வன்னிபங்களின் பெயர்கள் தெரியவில்லை. பரராசசேகரமன்னன் முள்ளியவளையிற் கோட்டை கட்டி அரசு நடத்திய காலம் பதினாறாம் நூற்றாண்டின் முற்கூறாக இருக்கலாம். இற்றைக்கு 475–ஆண்டுகளுக்கு முன்னர் முள்ளியவளை ஒரு தமிழ் மன்னனின் இராசதானியாக விளங்கியிருக்கிறது.

ஒல்லாந்தரின் ஆவணங்களில் குட்டிப்பிள்ளை வன்னியனின் பெயர் குறிப்பிடப்படுகின்றது. 1675–ஆம் ஆண்டிற்கும் 1679–ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஒல்லாந்த தேசாதிபதியாக இருந்த றைக்லொவ் வான் கூன் ஸின் அறிக்கை மேற்பற்று முள்ளியவளை வன்னிமைகளுக்கு குட்டிப்பிள்ளை வன்னியநார் (Cottepille) வன்னிபமாக இருந்தார் எனக் கூறுகின்றது. யாழ்ப்பாண ஒல்லாந்தக் கொமாண்டராக இருந்த ஹென்றிக் சுவாடாக்குறூன் 1697–இல் எழுதிய அறிக்கையில் முள்ளியவளை. வன்னிமைக்கு அதிபதியாக பெருமையினார் இருந்தாரெனக் குறிப்பிடப்படுகின்றது.

கயிலை வன்னியனார் சிதம்பர மட தர்ம சாதனப் பட்டையத்தில் (1722) வன்னிச் சிற்றரசர்கள் சிலர் பனங்காமம் பற்றுக் கயிலை வன்னியனார் பெயரில் சிதம்பரத்திலேயுள்ள மடத்திற்கு தானம் வழங்கியதாகக் குறிக்கப்பட்

முல்லைமணி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுள்ளது. அடங்காப்பற்றைச் சேர்ந்த வன்னியர்கள் ஒன்றுசேர்ந்து மடதர்ம ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். கள்ளியங்காட்டில் வசித்த ஓதுவார் சிவக்கொழுந்து அவர்களிடமிருந்து பெற்ற இந்தச் செப்பேட்டை ஏககாலத்தில் கலாநிதி சி.பத்மநாதன் அவர்களும் குணசிங்கம் அவர்களும் பதிப்பித்துள்ளனர். இச்செப்பேடு 1722–இல் எழுதப்பட்ட போதும் கி.பி 1697–ம் ஆண்டிற்கும் கி.பி. 1715–ஆம் ஆண்டிற்குமிடையே தானம் வழங்கப்பட்டிருக்கிறது. இச்செப்பேட்டில் மேற்பற்று முள்ளியவளை வன்னிமைகளை ஆட்சிபுரிந்தவராக இலங்கை நாராயண முதலியார் குறிப்பிடப்படுகிறார். இவரின் கீழ் மயிலாத்தை உடையார் பணியாற்றியதாகவும் குறிப்பு உண்டு. இதே செப்பேட்டில் மேற்பற்றின் ஒரு பகுதிக்கு ரணசூர ரணதீரராக வன்னியனார் அதிபதியாக இருந்தார் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இவர் மேற்பற்றின் ஒருபகுதிக்கு வன்னியராக இருக்க மற்றப்பகுதிக்கும் முள்ளியவளைக்கும் இலங்கை நாராணய முதலியார் வன்னியப் பதவியை வகித்திருக்க வேண்டும். இவர், ரணசூர ரணதீரராகவரை விட ஆற்றலும், அதிகாரமும் கூடியவராக இருந்திருக்கிறார் என ஊகிக்க இடமுண்டு. இவரின் பெயரால் அமைந்த இலங்கை நாராயணன் குளம் முல்லைத்தீவு நெடுங்கேணி வீதியில் இருக்கிறது.

ஒல்லாந்த தேசாதிபதியாக இருந்த சுரொய்ட்டரின் 1762–ஆம் ஆண்டு அறிக்கையில் அமரக்கோன் முதலியார் முள்ளியவளை வன்னியனராக இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வன்னிநாட்டின் இறுதி மன்னனாகத் திகழ்ந்த குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் ஆட்சிபுரிந்த இடம் திட்டவட்டமாகத் தெரியாவிட்டாலும் பெரும்பாலும் மேற்பற்று – முள்ளியவளை வன்னிமைகளிலேயே இவரது ஆட்சியதிகாரம் நிலவியிருந்தது என்று கொள்வதில் தவறில்லை. பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் கால இறுதியிலும் பிரித்தானியர் கால ஆரம்பத்திலும் வாழ்ந்து வன்னிப் பிரதேசத்தை ஆட்சி புரிந்திருக்கிறான். ஒல்லாந்தருக்கும் பிரித்தானியருக்கும் எதிராகத் தனது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறான். ஒரு முறை ஒல்லாந்தர் சாயவேர் திறையாகத் தரும்படி கேட்டபோது அக்கோரிக்கையை நிராகரித்தான். 1803 ஒக்டோபர் 31–ல் பிரித்தானியக் கூலிப்படையிலிருந்த டச்சுத்தளபதி கப்டன் வொன்

## அதோ... விடியல் தெரிகின்றது

"அக்கா என்று அழைத்தவுடன்
அழைத்த உடனே கிடைப்பதற்கு
சுக்கா, மிளகா சுதந்திரம் கிளியே"
என்று பாடினான் பாவேந்தன்
ஆம்!....
அன்று பாவேந்தன் பாடியதற்கு
இன்று இலக்கணம் படைக்கிறார்கள்
எங்கள் உயிர்த் தோழர்கள்!
அடடா!யயய
உலக வரலாற்றில்
இதற்கு முன் கண்டதுண்டோ?
இப்படி ஒரு விடுதலைப் போரை!
தன்னலம் இல்லாத்
தலைவனின் தலைமையில்
தலை கொடுக்கின்றார்கள்
எங்கள் தம்பிகள்!
புறநானூற்றுக் காலத்தில்
தமிழன்
போர்புரிந்த செய்திகள் உண்டு
அந்த....
புறநானூற்றுக் காலத்தையும்
வென்றதடா – எங்கள்
புலிகளின் காலம்!
கருவாகி, உருவாகி
காளையராய் வளர்ந்த
எங்கள் கண்மணி....
இன்று களத்திலே நிற்கின்ற
காட்சியைப் பார்த்து
பூரிப்படைகின்றாள் – எங்கள்
புறநானூற்றுத் தாய்!
எங்கள் போரை
எள்ளி நகையாடும்
இனி பிறவிகளே!...
தமிழ் ஈழம் பிறக்கின்ற
நாள்
தொலைவில்
இல்லை!
ஆதிக்க
வெறி கொண்ட
ஆணவப் பேய்களே!
– நீங்கள்
வீழ்ச்சியை தழுவப்போவது
விரைந்து வருகின்றது!
எத்தனை கொடுமைகள் இழைத்தாய்!
கொஞ்சும் குழந்தையைக் கூட
கொன்று குவித்த சிங்களமே! – நீ
செங்களத்தில் சிதறுண்டு...
தங்கத் தமிழ் ஈழத்தை விட்டு
தலை தெறிக்க ஓடும் நாள்
அதோ.... தெரிகின்றது!
'முல்லை'யிலே நீ வாங்கிய அடி...
நாளை – உனக்கு
தொல்லைகளே கூடும்
என்பதற்குச் சான்று.
எண்ணிக்கை அதிகம் என்பதால்...
வெற்றி என்று எண்ணி விடாதே!
காட்டிக்கொடுப்போரும்
கயமைத்தனம் கொண்டோரும்
உனக்கு –
துணையாக இருக்கலாம்!
அவர்கள் எல்லாரும்
ஓர் நாள் வீழ்வது உறுதி!
அந்நாளில் நீ படிக்கும் பாடம்
வரலாற்றில் நிலைபெற்று நிற்கும்!
தமிழனின் வரலாறு
படிக்காத தறுக்கர்களே!
தமிழந் தோற்றதாக
வரலாறு இல்லையடா!
நாடாண்ட தமிழன்
நாடுநாடாய் அலைகின்றான்
இதை–
பாராள்வோர் பாராது இருக்கலாம்!
ஆனால்...
தமிழ் ஈழக் கொடி – நாளை
உலக ஒன்றிய சபையில்
பறப்பது உறுதி!

காடுகளில்,
வயல்களில்
ஓலமிடுகின்ற – எங்கள்
தாய்மார்கள், பச்சிளம்
குழந்தைகலின்
கண்ணீர் துளிகள்
நாளை மலரப்போகும் –
தமிழ் ஈழ நாட்டுக்காக...
இன்று செய்யும்
ஈடிணையற்ற ஈகம்.

எங்கள் தலைவன்
இன்றுனக்கு 'பயங்கரவாதி'
நாளை நீ அவருக்கு
சிவப்புக் கம்பள வரவேற்பு
கொடுத்துத்தான் ஆகவேண்டும்!

அதோ தெரிகின்றது விடியல்
ஆம்!
தமிழ்ஈழம் மலர்ந்துவிட்டது
வாழ்க தமிழ் ஈழம்

புதுகை எழுஞாயிறு
தமிழ்நாடு.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டிறிபேக் கற்சிலை மடுவில் பண்டாரவன்னியனைத் தோற்கடித்ததற்கும் பரிசாக மேற்பற்றிலுள்ள பண்டாரிக்குளமும் கிராமமும் அவனுக்குப் பரிசாக வழங்கப்பட்டது. பண்டாரவன்னியனின் காதலியாகக் குறிப்பிடப்படும் குருவிச்சி நாச்சியார் வாழ்ந்த இடமும் மேற்பற்று – முள்ளியவளை வன்னிமைப் பகுதியிலேயே இருக்கிறது.

அடங்காப்பற்று வன்னிமைகளில் பனங்காமம் முள்ளியவளை வன்னிப் பற்றுக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் வன்னி மண்ணின் சுதந்திரத்தைக் கட்டிக்காப்பதில் தீவிரமான பங்களிப்பைச் செய்தனவாகவும் திகழ்கின்றன.

முள்ளியவளைப்பற்று ஆரியசக்கரவர்த்திகள் காலம் தொடக்கம் (1242 – 1620) பிரித்தானியர் ஆட்சிக்காலம் வரை (1769 – 1948) தொடர்ச்சியாக வரலாற்று ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு வருகின்றது. 1807–ம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சியின் கீழ் வன்னி தனி மாவட்டமாக ஆக்கப்பட்டு இதன் தலைமைக் காரியாலயம் முல்லைத்தீவில் அமைக்கப்பட்டது. ரேணர் என்பார் வன்னியின் இறைவரி முகவராக நியமிக்கப்பட்டார். புதிய வன்னி மாகாணம் பதினேழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இப்பிரிவுகளில் ஒன்றாக முள்ளியவளை இடம்பெறுகிறது.

வையாபுரி ஐயர் இயற்றிய வையா பாடலில் முள்ளியவளை முள்ளிமாநகர், முள்ளியவளை என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. மல்லிகை வனம் என்னும் பெயரும் வையாபாடலில் இடம்பெறுகிறது. இப்பெயரும் முள்ளியவளையைக் குறிக்கிறது எனக் கொள்ளலாம்.

வையாபாடல் சில வரலாற்று உண்மைகளை உள்ளடக்கிய நூலாகும். அடங்காபற்றை வன்னியர் கைப்பற்றியதைக் குறிக்கும் கதையொன்று இந்நூலில் உண்டு.

செயதுங்க வீரவராசசிங்க மன்னன் தன் மாமன் மகள் சமதூதியைத் திருமணம் செய்ய விரும்பினான். இதன் பொருட்டு தூதுவர்களை மதுரை மன்னனிடம் அனுப்பினான். மகிழ்ச்சியடைந்த மதுரை மன்னன் தன் மகளை அறுபது வாட்படை வன்னியருடன் இலங்கைக்கு அனுப்பிவைத்தார். வரராசசிங்கன் இளவரசியை மணந்த பின்னர் வேண்டும் பரிசினைக் குறிப்பிடுமாறு வன்னியரைக் கேட்டான். அடங்காப்பற்றை பரிசளிக்குமாறு அவர்கள் கேட்டனர். அடங்காப்பற்றுக்குச் சென்று அதனைக் கைப்பற்றி ஆளுமாறு பணித்தான். இதிலிருந்து பெயரளவில் மட்டும் செயதுங்க வீரவராச சிங்கனின் ஆட்சியில் அடங்காப்பற்று இருந்தது. ஆனால் நடைமுறையில் சுதந்திரமான குறுநிலத் தலைவர்கள் இப்பிரதேசத்தில் அதிகாரம் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கதையை நாம் அப்படியே நம்பாவிட்டாலும் இந்த பின்னணியில் ஒரு வரலாற்று உண்மையை ஊகிக்கலாம். மதுரை மன்னனின் தூண்டுதலால் வன்னியர்கள் வந்தார்கள் என்றும் செயதுங்க வீரவராசசிங்கன் காலத்தில் வன்னியர் குடியேற்றம் நடைபெற்றது என்பதையும் வரலாற்று உண்மையாகக் கொள்ளலாம். முத்துராஜக்கவிராயர் எழுதிய கைலாய மாலையில் இடம்பெறும் முதற் சிங்கை ஆரியனான செயவீரசிங்கை ஆரியனே வையாபாடலில் செயதுங்க வீரவராராச சிங்கன் எனத் திரிபடைந்ததாக கலாநிதி சி. பத்மநாதன் கருதுகிறார். வன்னி வரலாற்றினைக் கூறும் கல்வெட்டு ஒன்றில் இதே கதை இடம்பெறுகின்றது. இதில் செயதுங்க வீரவரராசசிங்கன் என்னும் பெயர் இடம்பெறுகின்றது. இக்கல்வெட்டை மேற்கோள் காட்டுகின்றார் வன்னிக் கைநூல் ஆசிரியர் ஜே.பி.லூயிஸ் அவர்கள்.

**கோட்டை இராச்சியமும், யாழ்ப்பாண இராச்சியமும் ஒல்லாந்தரினால் அடிமைப்படுத்தப்பட்ட போதும் வன்னிராச்சியங்கள் சுதந்திரமாக இருந்தமைக்கு இலங்கா நாராயண வன்னியனார் போன்றோரின் ஆற்றலும், ஆளுமையும், இராஜதந்திரமும் காரணமாக அமைந்தன.**

அறுபது வாட்படை வன்னியரின் அழைப்பின் பேரில் அடங்காப்பற்றுக்கு வந்த இளஞ்சிங்க மாப்பாணன், நல்லவாகு மெய்த்தேவன் கறுத்தவாகு, இராஜசிங்க மாப்பாணன், சிங்கமாப்பாணன் என்போர் முள்ளியவளையைக் கைப்பற்றி ஆண்டார்கள். முள்ளியவளை 70 கிராமங்களைக் கொண்ட பெரிய பிரதேசமாகத் திகழ்ந்தது. இந்த ஐந்து வன்னியர்களும் முள்ளியவளையைப் பிரித்து ஆட்சிபுரிந்தனர் என எண்ணத்தோன்றுகின்றது.

முள்ளியவளை வன்னியர்கள் சுதந்திர வன்னிச் சிற்றரசராகவே இருந்தனர். ஓர் அரசனுக்குரிய எல்லா அதிகாரமும் அவர்களுக்கிருந்தது. வன்னியர் மீது ஆதிக்கம் செலுத்துவது யாழ்ப்பாண ஆட்சியாளர்களைப் பொறுத்த அளவில் பெரும்பாலும் இயலாததொன்றாகவே இருந்தது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரத்திற்கு வெகு தொலைவில் இருந்ததாலும் காடுகளால் சூழப்பட்டிருந்ததாலும், கைப்பற்றினாலும் நிர்வகிப்பதற்கு முடியாமல் இருந்ததாலும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய ஆக்கிரமிப்பாளர்களால் வன்னிமீது தமது மேலாண்மையைச் செலுத்தமுடியவில்லை. இவை எல்லாவற்றுக்கும் மேலாக வன்னித் தலைவர்களது வீரம், அஞ்சாநெஞ்சம், நாட்டுப்பற்று, இராஜதந்திரம் என்பவையும் முள்ளியவளை வன்னிமையை சுதந்திர இராச்சியமாக நிலைக்கச் செய்தன. வன்னியர்கள் தமது அந்தஸ்திற்கேற்ப குடை, கொடி, கவசம், படைக்கலம் முதலிய சிறப்புச் சின்னங்களை வைத்திருந்தனர். ஆட்சி உரிமை பரம்பரை வழியாக இருந்தது. வன்னிமையின் நிர்வாகத்திற்கும் நீதிபரிபாலனத்துக்கும் அவர்களே பொறுப்பாக இருந்தனர். சொந்தமான படையமைப்புடையவராகவும் இருந்தனர். தமக்கு கீழுள்ள முதலியார், உடையார், கங்காணி, பண்டாரப்பிள்ளை, தலையாரி, அடப்பனார், மொத்தக்கர் போன்ற பதவிகளை வன்னியர்களே நியமித்தனர். அத்துடன் வன்னி நாட்டிலுள்ள வாரம் தீர்வை, காணிக்கடன், ஆள்வரி முதலிய எல்லா இறைவரிகளையும் வன்னியரே பெற்றனர். முதலியார் என வழங்கிய தலைவர்கள் நிர்வாக முறையில் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் வன்னிமையின் உட்பிரிவுக்கு அதிபதிகளா இருந்தனர். தேசவழமைகளைப் பேணி மக்களிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துவைத்தனர். வழக்குகளை விசாரித்து குற்றவாளிகளிடமிருந்து ஐந்து பொன்னுக்கு மேற்படாமல் தண்டனை விதிப்பதற்கும் குற்றம் கொடுக்க முடியாதவர்களை அடிப்பதற்கும் உரிமை பெற்றிருந்தனர். பண்டாரப்பிள்ளைகள் இறைவரி முதலியவற்றை மக்களிடமிருந்து பெறுவதற்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உதவியளித்தனர். முதலியாருக்கு பல சிறப்புரிமைகளும் இருந்தன. பதவிச் சின்னங்களாக பல்லக்கு, வெள்ளைக் கதிரை, வில்லுக் குஞ்சம், ஒட்டுவிளக்கு, பாவாடை, கொடி, நாகசுரம், தாரை, மேளம் முதலிய வரிசைகளைப் பெற்றிருந்தனர். சேவைக்கு ஊதிபமாக நிலங்களையே பெற்றனர்.

உடையார் என வழங்கிய பிரதானிகள் ஊர் நிர்வாகத்துக்குப் பொறுப்பாக இருந்தனர். இது முதலியாருக்குக் கீழ் உள்ள பதவியாகும். கண்காணிமார் நிலங்களை அளவிடுதல், வரிமதிப்பீடு செய்தல் முதலிய கடமைகளைச் செய்தனர். மொத்தக்கர் யானைகளைப் பிடித்து அவற்றைப் பழக்கும் பணிக்கர்களின் தலைவர்களாக இருந்தனர். தலையாரி ஊர்த்தலைவராக இருந்தார்.

பண்டாரப்பிள்ளை இறைவரிகளை மக்களிடமிருந்து அறவிடுவதற்கு பொறுப்பாய் இருந்தார்.

## இலங்கை நாராயண வன்னியனார்

முள்ளியவளை வன்னியர்களது பெயர்கள் பல ஐரோப்பிய ஆட்சியாளர்களதும் சுதேசிகளதும் குறிப்புக்களிலும் இடம்பெற்றாலும் அவர்களில் பெரும்பாலோர் பற்றி விபரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. முள்ளியவளை, மேற்பற்று என்னும் இரு வன்னிமைகளுக்கும் பொறுப்பான வன்னியராக இருந்த இலங்கை நாராயண முதலியார் பற்றிச் சற்று விரிவான குறிப்பு உண்டு. இவர் வன்னியனார் பதவியைப் பெறுவதற்கு முன்பு முதலியார் பதவியைப் பெற்றிருந்தார். வன்னியனார் பதவியைப் பெற்ற பின்பும் இலங்கை நாராயண முதலியார் என்றே பல விடங்களில் குறிப்பிடப்படுகின்றார். இவர் கயிலை வன்னியனார் மடதர்மசாதனப் பட்டையத்திலும், ஒல்லாந்தர் ஆவணங்களிலும் இடம்பெறுகின்றனர். ஒல்லாந்தர் ஆவணங்களில் தொன் கஸ்பார் இலங்கை நாராயண முதலியார் என்றே அழைக்கப்படுகின்றார். தொன் என ஆரம்பிக்கும் பெயர் கத்தோலிக்க மதத்தையே குறிக்கும். இதனால் இலங்கை நாராயணர் தம் இளமைக் காலத்தில் போர்த்துக்கேயரின் கத்தோலிக்க மதச் செல்வாக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவர் பதவி வகித்தது ஒல்லாந்தர் காலத்திலாகும். ஒல்லாந்தர் இவரைத் தம் மதத்திற்கு மாற்ற முனைந்ததாகத் தெரியவில்லை. எனினும் இவர் கத்தோலிக்க மதத்தை இதயசுத்தியுடன் தழுவினார் என்று கூறுவதற்கில்லை. இவர் அடங்காப்பற்று வன்னியர்கள் சிலருடன் சேர்ந்து சிதம்பரத்திலுள்ள சைவக் கோயில் மடம் ஒன்றிற்குத் தானம் வழங்கியதை கயிலை வன்னியனார் மடதர்மசாதனப் பட்டையம் குறிப்பிடுகின்றது. இதில் இவரது கத்தோலிக்க சமயப் பெயர் குறிப்பிடப்படவில்லை. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஒல்லாந்த குறிப்புகளின்படி கயிலை வன்னியனின் பின் பனங்காமத்தின் அதிகாரப் பதவியைப் பெற்ற நல்ல மாப்பாணரின் மகன் நிச்சய சேனாதிராயருக்கு இவர் மைத்துனர் முறையானவர். சிலவேளை நல்லமாப்பாணரின் மகளை மணம்புரிந்திருக்கலாம். இத்தகைய ஒரு உறவுமுறை முள்ளியவளை வன்னிப்பதவியை இலங்கை நாராயணர் பெற்றுக்கொள்வதற்கு உதவியாக இருந்திருக்கலாம். தொன்பிலிப் நல்லமாப்பாணர் காலத்திலே பனங்காமம் பற்றுக்கும் இவர் இரண்டாவது வன்னியராக இருந்தார்.

வன்னிமையின் சுதந்திரத்தைக் காப்பதற்காகத் தீவிரமான பங்களிப்பை இலங்கை நாராயண வன்னியர் ஆற்றியிருக்கிறார். ஒல்லாந்தருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட வன்

# புலிகளின் தலைவர் பிரபாகரனால் விமானப்படைப் பிரிவு உருவாக்கம்

**–'சண்டேலீடர்' இராணுவ ஆய்வாளர்**

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் விமானப் படை பிரிகேட் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளதாகவும் – தற்போது இப் படைக்கென தாக்குதல் ஹெலி கொப்டர்களை கொள்வனவு செய்ய புலிகள் திட்டமிட்டு வருவதாகவும்– றோய் தினேஷ் என்னும் இராணுவ ஆய்வாளர் "சண்டேலீடர்" ஆங்கில வார இதழில் கூறுகின்றார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்:

ஆண்,பெண் இருபாலாரும் புலிகளின் விமானப்படையில் இணைக்கப் பட்டு தற்போது வடபகுதி காடுகளில் அவர்களுக்கு தீவிர பயிற்சி அளிக்கப் படுகின்றன.

இவர்களுக்கு சிறீலங்கா விமானப் படையை ஒத்த சீருடைகள் வழங்கப் பட்டுள்ளன.

இதேவேளை தாம் கொள்வனவு செய்யலாம் என தீர்மானித்த ஹெலி கொப்டர்களின் விமானமோட்டிகளாக புலிப் போராளிகளில் சிலர் மேற்கு நாடுகளிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சிறீலங்கா விமானப்படையிடமுள்ள ஹெலிகொப்டர்களைவிட நவீனமானதான ஹெலிகளை கொள்வனவு செய்யவே புலிகள் நாட்டம் கொண்டுள்ளனர்.

ஏற்கனவே புலிகளின் இராணுவத்தில் விசேட நிபுணத்துவம் பெற்ற அணிகள் இருக்கின்றன. 'சாள்ஸ் அன்ரனி பிரிகேட்', 'சிறுத்தைப் புலி கொமாண்டோ அணி', அங்கயற் கண்ணி கடற்புலிகள் பிரிவு' 'சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவு', 'பெண்கள் படைப்பிரிவு', 'விமான எதிர்ப்பு துப்பாக்கி அணி', 'பிஸ்டல் அணி' என இவை உள்ளன.

புலிகள் ஆகாயத்தில் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வேண்டுமானால், தற்போது தென்னாபிரிக்காவிலுள்ள அமைச்சர் பீரிசும், சட்டமா அதிபர் சரத்சில்வாவும் – புலிகள் விமானங்களைப் பெறுவதற்கு உதவ வேண்டாமென சர்வதேச சமூகத்தை கோர முடியும் என்றும் அந்த இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னியர்களுள் இவர் முக்கிய இடத்தை வகிக்கிறார். 1697–இல் ஒல்லாந்தரின் அழைப்புக்கிணங்க அவர்களின் கூட்டத்திற்குச் சமூகமளிக்கவில்லை. நல்ல மாப்பாணர், புவிநல்லமாப்பாணர், அம்பலவாணர் ஆகியோருடன் சேர்ந்து கூட்டத்தை இவர் பகிஷ்கரிப்பதன் மூலம் எதிர்ப்பைக் காட்டியுள்ளார்.

1697–ஆம் ஆண்டிற்கு முன்பே இவர் பதவிக்கு வந்திருக்க வேண்டும். பனங்காமம் நல்ல மாப்பாண வன்னியனாரின் (1678 – 1697) ஆட்சிக்காலத்தில் இவர் வன்னியனார் பதவி பெற்றிருக்கலாம் என ஊகிக்கலாம். ஒல்லாந்தருக்கு திறை செலுத்துவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. சில சமயங்களில் ஒல்லாந்தருடன் முரண்படுவதைத் தவிர்ப்பதற்காக இராஜதந்திர உபாயங்களைக் கையாண்டுள்ளார். நல்லமாப்பாண வன்னியனுக்குத் தான் பகையாக இருப்பதாகப் பாசாங்கு செய்து ஒல்லாந்தரை ஏமாற்றியுள்ளார். 1697–இல் றைக்கொவ் டி பீற்றர் (Ryckof de Bitter) என்ற ஒல்லாந்த அதிகாரி இருவருக்குமிடையேயுள்ள பகைமைக்கான காரணங்களை அறிவதற்காக இவர்களுடன் உரையாடினார். இதன் முடிவில் இவர்களுக்கிடையே பகைமை இல்லையென்றும் வெறும் போலி நடிப்பு என்றும் தெரியவந்தது. திறையாக யானைகளைக் கொடுக்காததற்குரிய காரணத்தைக் கேட்டபோது ஏற்கனவே செலுத்திவிட்டதாக இலங்கை நாராயண வன்னியனார் கூறினார். ஆதாரம் கேட்டபோது நல்லமாப்பாணரே தனது பங்கையும் செலுத்தியபடியால் அவரிடமே அதற்கான ஆதாரம் இருப்பதாகக் கூறினார். உண்மையிலேயே யானைத் திறை செலுத்தப்படவில்லை என்பது ஒல்லாந்த அதிகாரிக்குத் தெரிந்தும் அவர்கள் மேற்கொண்டு வற்புறுத்தவில்லை.

இதிலிருந்து நாம் அறிவது ஒல்லாந்தரைப் பகைக்காது ராஜதந்திர நடவடிக்கையால் மண்ணின் சுதந்திரத்தைக் காப்பாற்றியவர் என்ற பெருமை இலங்கை நாரயாண வன்னியரைச்சாரும். இதே நேரத்தில் ஒல்லாந்தரும் முள்ளியவளை வன்னியருக்கு எதிராக, இராணுவ நடவடக்கை எடுக்க முயலவில்லை. இலங்கை நாராயணரால் நேரடியாகத் திறைகொடுக்க மறுக்கும் சக்தி இல்லை எனக்கூறல் பொருந்தாது. ஒல்லாந்த அதிகாரிகளுடன் உரையாடும்போது முரண்படாத முறையில் பேசினாலும் திறை செலுத்தவில்லை என்ற உண்மையை மறுக்க முடியாது. ஒல்லாந்த எதிர்ப்பு இயக்கத்தில் கயிலைவன்னியருக்கு அடுத்த நிலையில் இவரது செயற்பாடுகள் இருந்தன.

கோட்டை இராச்சியமும், யாழ்ப்பாண இராச்சியமும் ஒல்லாந்தரினால் அடிமைப்படுத்தப்பட்ட போதும் வன்னிராச்சியங்கள் சுதந்திரமாக இருந்தமைக்கு இலங்கா நாராயண வன்னியனார் போன்றோரின் ஆற்றலும், ஆளுமையும், இராஜதந்திரமும் காரணமாக அமைந்தன.

அமரக்கோன் வன்னியனாரும் பண்டாரவன்னியனாரும் முள்ளியவளை, மேற்பற்று வன்னிமைகளின் ஆட்சி அதிகாரத்திற்குப் பொறுப்பாக அமரக்கோன் வன்னியனார் இருந்திருக்கிறார். இவரைப்பற்றி 1762–ம் ஆண்டு ஒல்லாந்த தேசாதிபதியின் குறிப்பின் மூலம் அறிகிறோம். இவர் எத்தனை காலம் வன்னியப் பதவியை வகித்தார் என்பது தெரியவில்லை. இவரின் பின்பு அவ்விரு வன்னிமைகளுக்கும் பண்டாரவன்னியன் அதிபதியாக இருந்திருக்க வேண்டும். கி.பி. 1780–ஆம் ஆண்டு ஒல்லாந்தர் அடங்காப்பற்று வன்னிமைகளைத் தமது நேரடி நிர்வாகத்துக்குள் கொண்டு வந்துவிட்டதாக கலாநிதி சி. பத்மநாதன் கூறுகின்றார். இவரின் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாதது. கி.பி. 1782–ஆம் ஆண்டில் அடங்காப்பற்று வன்னியர் ஒல்லாந்தருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்திருக்கிறார்கள். கி.பி. 1790–ஆம் ஆண்டு ஒல்லாந்தருக்கு எதிராக துரோகச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டி பனங்காமத்து குலசேகர நல்ல மாப்பாண வன்னியனாரை ஒல்லாந்தர் சிறைப்படுத்தினர். 1781–ம் ஆண்டளவில் பனங்காமப்பற்று தற்போது வவுனியாவாக இருக்கும் கிழக்கு மூலையைச் சேர்ந்த விளாங்குளம் வரை பரந்திருந்தது. நல்லமாப்பாண வன்னியனின் ஓலை குறிப்பிடுகின்றது. பண்டாரவன்னியனின் யுத்த நடவடிக்கைகள் 1811–ஆம் ஆண்டு வரை நீடித்திருக்கிறது.

முடிவாகக் கூறுமிடத்து முள்ளியவளை மேற்பற்று வன்னியர்கள் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தின் முற்பகுதி வரை வன்னிமண்ணின் சுதந்திரத்திற்காக அஞ்சாது போராடியுள்ளனர். ஈழத்தமிழர் வாழும் பிரதேசங்களில் வன்னி நாடே இறுதி வரை மண்ணின் சுதந்திரத்தைக் கட்டிக்காத்துள்ளது.

# உங்களைப் போலல்ல....

உங்களைப் போலல்ல
எதிரிகளே!

சரித்திரம் உண்டு
எங்கள் சாவுக்கும்!

வீரியம் அதிகம்
இந்த
மண்ணில் விழுந்த விதைக்கு!

இங்கு முளைக்கும்
புல்லுக்கும்
புலிக்குணமிருக்கும்!

உங்களைப் போலல்ல
எதிரிகளே!

தலைவன் பெயர் சொன்னால்
நிழல் தூவும் சூரியன்!
சிலிர்த்தெழும் பூமி!
கைகட்டி
சேவகம் கேட்கும் கடலலை!

மறவர்படை
காத்திருக்கிறது
அவன் ஆணைக்காக!

முடிந்தால்
கைகுலுக்கிக்கொள்ளுங்கள்!

உங்களைப் போலல்ல
எதிரிகளே!

சரித்திரம் உண்டு
எங்கள் சாவுக்கும்!

**— துறையூரான்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விதையுள் விருட்சம்

- இளந்திரையன்

விதை வெடித்து
முளைத்துப் பெருத்துக் கன்றாகிப்
பருவ நிலைகட்குப் பணியாது சளையாது
விண்வெளி துளாவி வளர்ந்திற்று!

கிளைத்துக் கிளைத்து
கிளையிற் கிளைத்து
துளிர்த்து சடைத்து
இலையுதிர்த்து,
துளிர்துத் துளிர்துச் சடைத்திற்று!

ஆழவேர்க் கால் புதைத்து
மண்பற்றிப் பெயரா மலையென
நிமிர்ந்து,
கனியாகக் காற்றாக
நிழலாக மழையாக
பலதாகப் பயன் செரியும் அது!

புள்ளி வித்துள்
பெரிய விருட்சம்!

விருட்சமென விசாலித்த மெய்
வாழ்க்கை
என்று வரும்,
மனிதர் பலருக்கு!?

சுயச் செயல் அல்லது மீறியெழல்

குயிலுக்குப் போல குரல் வளம்
எனக்கும் இருப்பதாய்
உணர்கிறேன்!
பாடத் தோன்றுகுது.
பாடிவிட முனைகிறேன்!

சபிக்கச் சினக்க
நக்கலடிக்க நகைத்தொதுக்க
சுற்றியிருப்பவர் பலர்!
குரல்வளை நெரிக்கவு கூடும் அவர்!

எனினும் நான் என் பாட்டில்
ஓர் புறமிருந்து பாடுவேன் உரத்து;
என் இயல்பாய் இசையில் லயித்து
இயற்றி
இனிமையான புதுப்பாட்டு!





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரித்தானியர் ஆட்சியில் யாழ்ப்பாணம்

பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் எப்படி இருந்தது என்பதை அறியும்போது பல சுவையான தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

மனிதன் செய்யும் குற்றங்களுக்காக வழங்கப்பட்ட சித்திரவதைத் தண்டனை 1803ல் நிறுத்தப்பட்டது. குற்றங்களை விசாரித்து தண்டனை வழங்குவதற்காக பொலிஸ் நீதிமன்றங்கள் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, முல்லைத்தீவு, பருத்தித்துறை, சாவகச்சேரியில் 1841ம் ஆண்டு ஆடி மாதம் 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. விதானையார் முறை 1806–ல் ஒவ்வொரு கிராமத்திலும் அமுலுக்கு வந்தது. சேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்சோன் யூரி முறையை 1812–ல் ஏற்படுத்தினார். இராஜகாரிய முறை – அரசிற்கு இலவச சேவை செய்வது – 1802–ல் ஒழிக்கப்பட்டது.

பிரயாணங்கள், தபால் கொண்டு செல்வதெல்லாம் மாட்டுவண்டியிலேயே இருந்தன. கண்டிக்கு வண்டியில் போய்வர இருபது அல்லது முப்பது நாட்கள் சென்றன. யாழ்ப்பாணத்திற்கும் மாத்தளைக்கும் தபால் கொண்டு செல்வதற்கு 1878–ல் அனுமதிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து, காங்கேசன்துறை, பருத்தித்துறைக்கு கால்நடையாகவே தபால்கள் எடுத்துச் செல்லப்பட்டன. ஒரு மணித்தியாலம் இரண்டரை மைல்களைக் கடக்கவே அவர்களால் முடிந்தது.

யாழ்ப்பாணத்தில் ஆசைப்பிள்ளை என்பவர் குதிரை வண்டிச் சேவையை முதன்முதலாக நடாத்தினார். படிப்படியாக முன்னேறி யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தளைக்கும் குதிரை வண்டிச் சேவையை விஸ்தரித்தார். பணக்காரர்கள் பல்லக்குகளை உபயோகித்தனர். அரச உத்தியோகத்தர்களில் நீதவான், பிரபுக்கள் பல்லக்கிலேயே போக்குவரத்துச் செய்தனர்.

இலங்கைக்கு 1883–லேயே 'றிக்சோ' அறிமுகமானது. 19–ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிஷனரிமார் யாழ்ப்பாணம் வந்தபோது சைக்கிள் உபயோகிக்கப்பட்டது. அக்காலத்தில் போக்குவரத்திற்கு குதிரைகளும் பாவிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்திற்கு புகையிரதம் வர வேண்டுமென்று பலதுறைப் பெரியார்கள் முயற்சி செய்தார்கள். சட்ட நிரூபணசபையில் சேர் பொன். இராமநாதன் இதற்கான தீர்மானத்தைக் கொண்டுவந்தார். இதன் பயனாக 1906–ல் புகையிரதம் யாழ்ப்பாணம் வந்தது. ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை என்பன முக்கிய துறைமுகங்களாக இருந்தன. காங்கேசன்துறை துறைமுகம் 1851–ல் திறக்கப்பட்டது. அப்போது யாழ்ப்பாண அரச அதிபராக விருந்த 'டைக்' என்பவர் இதற்கு முன்னின்றுழைத்தார்.

லேடி விறவலொக், டேடிலி ஹோடன், அத்தாசியா என்ற நீராவிக் கப்பல்கள் சேவையிலிருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து நாகபட்டினம் சென்றுவர நீராவிக்கப்பல் பயன்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து இலங்கையின் வேறு பட்டினங்களுக்கு முத்திரை ஒட்டப்பட்ட தபால் போக்குவரத்து 1855–ஆடி மாதம் ஏற்பட்டது. டெலிபோன் வசதி 1867–ல் ஏற்பட்ட சில வருடங்களில் யாழ்ப்பாணத்திற்கு டெலிபோன் வசதி கிடைத்தது. முதன் முதல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த புதினப் பத்திரிகை 'மோணிங் ஸ்ரார்' என்ற ஆங்கிலப் பத்திரிகையாகும். இது 1841–ல் வெளிவந்தது. இதன் தமிழாக்கம் 'உதய தாரகை' என்ற பெயரில் வெளிவந்தது. அப்புக்காத்து கூல் என்பவர் 'யவ்னா பிறீமான்' என்ற இலக்கியப் பத்திரிகையை ஆங்கிலத்தில் 1862– செப்டம்பர் 8–ம் திகதி வெளியிட்டார். சி. டபிள்யூ கதிரவேற்பிள்ளை 1863–ல் 'சிலோன் பேற்றியற்' என்ற பத்திரிகையை வெளியிட்டார். யாழ் கத்தோலிக்க மிஷனரிமார் கத்தோலிக்க காடியனை 1875–ல் அறிமுகப்படுத்தினார். சத்திய வேத பாதுகாவலன் என்று தமிழிலும் இதனைப் பிரசுரித்தனர்.

இப்பத்திரிகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து மலேசியா வரை அனுப்பப்பட்டன. இவற்றுடன் 1880–ல் 'உதயபானு'வும், 'இலங்காநேச'னும் பிரபலமான இதழ்களாக இருந்தன. அ. முத்துத்தம்பிப்பிள்ளை என்பவர் தமிழில் வைத்திய புதினங்களை 1898–ல் பிரசுரித்தார். ஆங்கில மருத்துவக் குறிப்புகள் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன. சபாரத்தின முதலியார் என்பவர் 1812–ல் 'புதினலங்காரி'யை வெளியிட்டார். 'சைவாபிமானி', 'ஞானப்பிரகாதம்' என்பன 19–ம் நூற்றாண்டின் பின்பகுதியில் பிரசுரமாயின. அச்சுவேலி எஸ். தம்பிமுத்து என்பவர் 'சன்மார்க்க போதினி'யை 1884–விலும், புலோலி குமாரசுவாமிப் புலவர் 1900 அளவில் 'திராவிட கோகில'த்தையும் வெளியிட்டனர்.

யாழ்ப்பாணக் கச்சேரி 1815–ல் கட்டப்பட்டது. சட்ட மூலகம் 1845–லும், விக்டோரியா நூதனசாலை 1895–லும் நிறுவப்பட்டன. வெஸ்லியன் மிஷனரிமார் 1817–ல் யாழ் மத்திய கல்லூரியையும், யாழ்ப்பாணக் கல்லூரியை 1872–இலும், உடுவில் பெண்கள் பாடசாலையை 1824–இல் அமெரிக்கன் மிஷனரிமாரும், யாழ்ப்பாணக் கொன்வென்ரை ஐரோப்பிய றோமன் கத்தோலிக்க சபையும் (1863–ல் அங்கு ஒரு பெண்கள் விடுதியையும்) முதலாவது யாழ்ப்பாண பிஷப் சென் பற்றிக்ஸ் கல்லூரியை 1850–லும், வேம்படி மகளிர் கல்லூரியை வெஸ்லியன் மிஷனரிமார் 1877–லும், சென்யோன்ஸ் கல்லூரியை 1891–லும் ஏற்படுத்தி ஆங்கிலக் கல்வி வளர்ந்தோங்க உதவினர்.

ஆறுமுக நாவலர் அவர்கள் வண்ணார்பண்ணைச் சைவப் பிரகாச வித்தியாசாலையை 1848–ல் நிறுவி மாணவருக்கு இலவசக் கல்வியை அளித்தார். தமிழ். சமஸ்கிருதம் இங்கு கற்பிக்கப்பட்டன. சைவபரிபாலன சபையினர் 1890–ல் யாழ் இந்துக்கல்லூரியை நிறுவினர். இங்கு தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என்பன பாடமொழிகளாக இருந்தன.

★★★



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நரக நகரம்

**- எல்லாளன் -**




சென்ற இதழ் தொடர்ச்சி

பிணங்களை அகற்றும்போது இவ்விதம் சிலர் உயிருடன் கிடப்பதை சொண்டகொமாண்டோக்கள் அடிக்கடி காணுவர். பிணக்குவியல்களுக்கு நடுவில் அகப்பட்டதாலும் – சுவர் மூலைகளுக்குள் முகம் நெரித்தபடி கிடப்பதாலும் குறைந்தளவு நச்சு வாயுவைச் சுவாசித்து உயிர்போகாமல் கிடந்துள்ளனர். அதனால் எந்த நன்மையும் அவர்களுக்குக் கிடைக்காது. அவர்களும் சாகத்தான் வேண்டும். அதுதான் 'அவுஸ்விச்'சின் மாற்றமுடியாத சட்டம். 'அவுஸ்விச்'சின் கதவுகளுக்கூடாக உள்ளே நுழைபவர்கள் சாவுத் தேர்தலில் பங்குபெறும் வேட்பாளர்கள்தான். 'அவுஸ்விச்'சின் தேர்தல் விதிகளில் வெற்றி – தோல்வி என்ற வார்த்தைகள் இல்லை. சாவு என்ற முடிவுதான் உண்டு. துன்பமும் – துயரமும் – வேதனையும் – பீதியும்தான் 'அவுஸ்விச்'சின் தாரகமந்திரங்கள்.

இதேபோன்று இதயத்தை இடம் மாற்றி வைக்கக்கூடிய இன்னுமொரு கோரச்சம்பவத்தையும் ஆசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.

நச்சுவாயுக்கூடத்திற்கு சாய்த்துச் செல்லப்பட்டபோது ஒரு தாயும் அவரது இரு புதல்வர்களும் விறகுக் குற்றிகளுக்குப் பின்னால் ஒழித்து அந்த துயர முடிவிலிருந்து தப்பிவாழ முயன்றனர். தப்பியும் விட்டனர். ஆனால், மூன்று நாட்கள் மட்டுந்தான். விறகு தூக்கச் சென்ற சில சொண்டகொமாண்டோக்கள் குளிர் விறைத்தபடி சாகக் கிடந்த மூவரையும் நூலாசிரியரான மருத்துவர்முன் கொண்டுவந்து நிறுத்தினர். "சிகிச்சை செய்தபின் மாஜரின் பூசப்பட்ட சில துண்டுப் பாண்களையும் ஆளுக்கு ஒரு கோப்பை தேனீரும் கொடுத்தேன். தம்மை மறந்து சாப்பிட்டனர். அதுதான் அவர்களின் இறுதி விருந்து என்பது எனக்குத் தெரியும்" என்று வேதனையுடன் நூலாசிரியர் எழுதுகின்றார். வழமைபோலவே மூவரையும் – மருத்துவரின் அறைக்குள் – ஜேர்மன் அதிகாரிகள் கண்டுவிடுகின்றனர். 10 வயது, 12 வயதுடைய தனது இரு புதல்வர்களையும் கட்டியணைத்தபடி இருந்த அந்தத் தாய் – தன்முன்னால் நின்ற ஜேர்மன் அதிகாரிக்கு – கண்ணீரால் கருணைமனுச் சமர்ப்பித்தார். ஜேர்மன் இராணுவத்திற்காக சிறையில், தான் நான்கு வருடங்களாக உடைதைத்துக் கொடுக்கும் வேலையைச் செய்துகொண்டிருந்த ஒரு கடின உழைப்பாளி என்று தன்னுடைய வேலைச் சான்றிதழை எடுத்து அடுக்கினார். எந்தக் கடின வேலையையாவது தந்து





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனக்கும் தனது இரு கொழுந்துகளுக் கும் உயிர்ப்பிச்சை வழங்குமாறு அந்த அபலைத் தாய், காலில் விழுந்து வணங் கினாள். இந்த மூன்று மனித ஜீவன் களுக்காகவும் நூலாசிரியரான மருத்து வரும் 'ஜேர்மன் மொழியில்' பரிந்து பேசினார். ஆனால் அந்த பாலைவ னத்து நெஞ்சில் ஒரு சொட்டு நீரும் சுரக்கவில்லை. "இவர்கள் சாகத்தான் வேண்டும். அதுதான் சட்டம்" என்று அந்த ஜேர்மன் அதிகாரி உறுதியுடன் கூறினான். சொன்னது போலவே அவர் கள் தலையில் சுட்டுக் கொன்றான்.

'அவுஸ்விச்'சின் இன்னொரு காட் சியை நூலாசிரியர் இப்படிக் காட்டு கின்றார்.

"ஒரு நாள், ஒரு 'ட்றக்'கில் 70 – 80 பேர் வரை கொண்டுவரப் பட்டு மைதானத்தில் இறக்கப் பட்டனர். அவர்கள் சோர்ந்து போய் இருந்தனர். பல வரு டங்களாக சிறையில் இருந்தவர் களைப் போல் தோற்றமளித்த னர். ஒரு ஜேர்மன் அதிகாரி கையில் றிவோல்வருடனும் இடுப்பில் ரவைப் பெட்டியுட னும் மரம்போல் நின்றான். ஒவ் வொரு கைதியாக தனது 'றிவோல்வர்' முனையடிக்கு இழுத்துக்கொண்டு வரும்படி சொண்டகொமாண்டோக்க ளுக்குக் கட்டளையிட்டான். சில கைதிகள் அடம்பிடித்தனர். சிலர் பேசாமல் நடந்தனர். அந்த அதிகாரி விசைவில்லை இழுக் கும் வேலையை மட்டும் செய் தான். சில நிமிடங்களுக்குப் பின்னர் அத்தனை உடல்களையும் பிணப்போற ணைக்கு அனுப்பினான். இதேபோன்று இன்னொருநாள், பெருந்தொகைப் பெண்களை வரிசையாக நிற்கவைத்து அவர்களின் தலைக்கூடாக 6.மி.மீ குண்டுகளைப் பாய்ச்சிக்கொன்றனர்.

இவ்விதம், படுகொலை அனர்த்தங் களால் 'அவுஸ்விச்' அவலப்பட்டுக் கொண்டிருந்தபோது, வீரமிகு சம்பவம் ஒன்று அங்கு நடந்தது. நாஜிகளுக்கு எதிரான எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த சிலர் 'அவுஸ்விச்'சின் வெளிப்புறப் பாதுகாப்பைத் தாண்டி தடுப்புமுகாம் வேலியருகே வந்து 2 இயந்திரத் துப் பாக்கிகளையும், 20 கைக்குண்டுகளை யும் போட்டுவிட்டுச் சென்றனர். அவற்றை சொண்டகொமாண்டோக் கள் எடுத்து ஒளித்துவைத்தனர். ஒரு தப்பியோடும் முயற்சிக்கான திட்டத்தை வரைந்தனர். 'அவுஸ்விச்'சின் ஒரு முனை யில் ஒரு வெடிமருந்துத் தொழிற் சாலை இருந்தது. அங்கே போலந்து யூதர்கள் கட்டாய வேலையில் ஈடு படுத்தப்பட்டிருந்தனர். அங்கிருந்து எப்படியோ 100 பெட்டிகள் உயர்ரக வெடிமருந்துகளை சொண்டகொமாண் டோக்கள் கடத்தி வந்தனர்.

ஏறக்குறைய 400 பேரை உள்ளடக் கிய 12—வது சொண்டகொமாண்டோ அணியே தப்பி ஓடுதலை நடாத்த இருந் தது. காவலுக்கு இருக்கும் படையின ரைச் சுட்டுவிட்டு கம்பிவேலிகளை வெட்டியெறிந்து தப்பி ஓடுவதுதான் திட்டம். தாக்குதல் தொடங்கியது. ஆனால், திட்டமிட்டது போல் முயற்சி



வெற்றிபெறவில்லை. ஆயினும் வீரத்து டன் போராடினர். 12 சொண்ட கொமாண்டோக்கள் மட்டும் சிறையை விட்டு தப்பினர். அவர்கள் "விஸ்ருலா" ஆற்றைக் கடந்து ஒரு வீட்டில் தஞ்சம் புகுந்தனர். அந்த வீட்டு உரிமையாளன் ஜேர்மன் படைக்கு தகவல் அனுப்ப, அன்றிரவே வீடு சுற்றிவளைக்கப்பட்டு அனைவரும் கொல்லப்பட்டனர். எவ ருமே தப்பவில்லை. தப்பியோடாதி ருந்த சொண்டகொமாண்டோக்களும் சாகடிக்கப்பட்டனர். மொத்தம் 853 சொண்டகொமாண்டோக்கள் அன்று கொல்லப்பட்டனர். ஆனால், அந்தச் சண்டையில் 70 ஜேர்மன் படையினர் பலியாகினர். 'அவுஸ்விச்' சின் வரலாற்றில் யூதர்கள் நடாத்திய ஒரே ஒரு வீரமிகு முயற்சி துரதிஸ்ட வசமாக இரத்த வெள்ளத்தில் முடிந்தது.

'அவுஸ்விச்' முனையில் — நாஜிக்கள் — யூதர்களை நரபலியிட்டுக்கொண்டி ருக்க, நேசநாட்டு அணிகளுடனான போர்முனையில், ஜேர்மன் படைகள் மண்கவ்விக்கொண்டிருந்தன. ஜேர்மன் எல்லைவரை நேசநாட்டுப் படைகள் நெருங்கிவிட்டன. இந்த நேரத்தில் 'கிறி மினல் டொக்ரர்' என்று நூலாசிரிய ரால் வர்ணிக்கப்பட்ட 'அவுஸ்விச்'சின் பிரதம அதிகாரி டொக்ரர் ஜோசப் மெஞ்சேல் எங்கோ தப்பியோடிவிட் டான் என்ற செய்தி பரவியது. படு கொலைகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டன. பிணப்போறணைகள் குளிர்ந்து கிடந்தன. எரிகூடப் புகைபோக்கிக ளில் பனி படர்ந்திருந்தது. ஜேர்மன் படை தோற்றோடுகின்ற அந்த நேரத் தில் நச்சுவாயுக்கூடத் தடயங் கள் உலகிற்கு கிடைப்பதை நாஜிகள் விரும்பவில்லை. வாயுக் கூடங்கள் போறணைகள் என் பன வெடிவைத்துத் தகர்க்கப் பட்டன. 'அவுஸ்விச்'சிற்கு அருகே சோவியத் படைகள் வந்துவிட்டன என்ற செய்தி வந்ததும் 'அவுஸ்விச்'சைக் கைவிட்டோட நாஜிகள் முடி வெடுத்தனர். நூலாசிரியர் உட்பட எஞ்சிய கைதிகளையும் அழைத்துக்கொண்டு ஜேர்ம னிக்குள் பின்வாங்கினர். சில நாட்களில் நாஜிகள் சரணடைந் ததும் கைதிகள் சுதந்திர மனிதர் கள் ஆகினர். நூலாசிரியர் தனது நாட்டிற்குத் திரும்பினார்.

அந்தத் துயர்மிகு நினைவுக ளிலும் அவருக்குக் கிடைத்த மிகப்பெரும் மகிழ்ச்சியை இப்படி விபரிக்கின்றார்.

"நான் வீட்டுக்கு வந்து பல வாரங் களுக்குப் பின்னர் ஒரு மாலை நேரம், கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. நான் எழுந்து சென்று திறப்பதற்குமுன் இருவர் நுழைந்தனர். நான் உறைந்து போனேன். எனது மனைவியும் மக ளும் நின்றிருந்தனர். நான் ஓடிச்சென்று எனது இரு தோள்களிலும் அவர்க ளைத் தாங்கிக் கொண்டேன். அவர் கள் ஏதோ சொல்ல முயன்றார்கள். இடைவிடா விம்மல் அதைத் தடுத்தது. 'அவுஸ்விச்'சில் எனக்குப் பரிச்சயமான மொழி அது. துன்பமும் — இயலா வாகித்தனமும் ஒன்றுசேரும் போது பிறக்கும் மனிதப் பொதுமொழி அது. அந்த மொழி அவர்களது இதயத் துய ரங்களை மெதுமெதுவாக ஆற்றிக் கொண்டிருந்தது. திடீரென எனக்கு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்க்கை இனித்தது” என்று மகிழ்ச்சியுடன் எழுதிவிட்டு நூலை இப்படி முடிக்கின்றார்.... “நான் எனது மருத்துவப் பணியை தொடங்கப்போகின்றன். ஆனால், எனக்குள்ளேயே நான் ஒரு சத்தியப்பிரமாணத்தை எடுத்துக்கொண்டேன். ‘நான் உயிரோடு இருக்கும் வரை எந்த ஒரு சத்திரசிகிச்சையையும் மீண்டும் தொடமாட்டேன்.” ‘அவுஸ்விச்’சின் பிண அறுவை அனுபவங்கள் ஆசிரியரின் ஆன்மாவை காயப்படுத்திவிட்டது என்பதற்கு அவரது சத்தியப் பிரமாணம் சான்று பகர்கின்றது.

இந்நூலை வாசித்து முடித்த பின்னர் பல்வேறு விதமான கேள்விகளும் பல்வகையான மன உணர்வுகளும் எழுகின்றன.

“இலையான்கள் — கொசுக்களைப் போல இலட்சக்கணக்கில் சாகடிக்கப் படுவதை இந்த மக்கள் ஏன் சும்மா பார்த்துக்கொண்டிருந்தார்கள்? எனும்போது சலிப்பும் வேதனையும் எழுகின்றது.

இரக்கமற்ற இந்த மனிதப்படுகொலைகளை ஜேர்மன் அதிகாரிகள் எப்படி மனவிருப்பத்துடன் செய்துமுடித்தனர்? எனும்போது கோபமும் ஆவேசமும் கொப்பளிக்கின்றது.

**அவலங்களை விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஆனால், விசவாயுக் கூடங்களுக்குள் வரிசை வரிசையாக சென்று செத்தழிந்த யூதர்களின் செயலை விளங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றது.**

சொண்டகொமாண்டோக்களின் கிளர்ச்சியை வாசிக்கும்போது தென்பும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

காட்டுமிராண்டித்தனமான இந்த மனிதப் பரிசோதனைகளுக்கு இந்த நூலாசிரியர் ஏன் தனது நிபுணத்துவ உதவிகளை வழங்கினார்? என்ற கேள்வி எழும்போது நூலாசிரியரை நோக்கிச் சுட்டுவிரல் நீள்கின்றது.

நூலாசிரியர் எழுதியுள்ளதுபோல் பிணப் போறணைகளின் புகைபோக்கிகள் இடைவிடாது நெருப்பையும் — 



புகையையும் கக்கிக்கொண்டிருந்ததை ‘அவுஸ்விச்’சின் கைதிகள் அன்றாடம் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு சாவு அரக்கனின் வாய்க்குள் சண்டையேதும் பிடிக்காமல் சென்றார்கள் என்பதை ஜீரணிக்க முடியாமல் உள்ளது. 40—இலட்சம் யூதர்கள் கொல்லப்பட்ட ‘அவுஸ்விச்’சில் ஆக 400 சொண்ட கொமாண்டோக்களை உள்ளடக்கிய ஒரு அணி மட்டும் எதிர்த்துப் போராடியதும், மற்றையவர்கள் எதிர்த்துப் போராடாததும் ஏன்? அவ்விதம் போராடியிருந்தால் 60—இலட்சம் யூதர்கள் கொல்லப்படும் அவலம் நடந்திருக்குமா? என்ற வலுவான கேள்வியும் எழுகின்றது.

யூதர்களுக்கு நடந்தது போல் பெருந்தொகையில் மக்கள் இனம் அழிக்கப்பட்டது பற்றி வரலாற்றுப் புத்தகம் அதிகம் சொல்கின்றது. ஆயினும் அந்த அவலங்களை விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஆனால், விசவாயுக் கூடங்களுக்குள் வரிசை வரிசையாக சென்று செத்தழிந்த யூதர்களின் செயலை விளங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றது.

100 வருடங்கள் நடந்த சிலுவைப் போரில், மதத்தின் பெயரால், பல இலட்சம் மக்கள் இறந்துவிட்டதை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

ஆசியாக் கண்டத்தை சொந்தமாக்க முயன்று பின் அதற்கு விலையாக அமெரிக்கா வீசிய அணுக்குண்டுகளுக்குப் பலியான இலட்சக்கணக்கான யப்பானியர்களது சாவை விளங்கிக் கொள்ள முடிகின்றது.

வெறிபிடித்த முகாலயர்களின் படை ஊரை நெருங்குகின்றது என்று அறிந்ததும் கற்பழிப்புக்கும் — கொடுமைகளுக்கும் அஞ்சி, தீ மூட்டி கூட்டங்கூட்டமாகத் தற்கொலை செய்துகொண்ட பண்டைய மதுரைப் பெண்களது செயலையும் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆனால், சுற்றிவளைப்புக்கள் என்றவுடன் சூட்கேசுகளுடன் புகைவண்டியேறிய யூதர்கள் இறங்கியதுமே சூட்கேசுகளை ஒப்படைத்துவிட்டு நேராக, விசவாயுக் கூடத்திற்குள் வரிசை வரிசையாக நடந்துசென்று செத்து விழுந்ததை விளங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றது.

12—வது சொண்டகொமாண்டோக்களின் சிறைக்கிளர்ச்சிக்கு நூலாசிரியர் அதிக பக்கங்களை ஒதுக்கியுள்ளார். அப்படிப் படுகொலை செய்தான். இப்படிப் படுகொலை செய்தான். என்று ஒரே படுகொலை மயமாகவுள்ள இந்த நூலில் அந்தக் கிளர்ச்சி பற்றி வாசிக்கும்போதுதான் வீரமனிதர்களின் வரலாறு வருகின்றது.

‘அவுஸ்விச்’சின் வரலாற்றில் வந்து போன மொத்தம் 14 சொண்ட கொமாண்டோ அணிகளில் ஆக ஒன்றே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றுமட்டும் கிளர்ச்சி செய்ய மற்றவை மௌனமாகச் செத்தது ஏன்? என்று நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளவர் வினாவுகின்றார். இதற்குப் பல காரணிகள் உண்டு. கலாச்சாரத்தால் யூதர்கள் என்று அடையாளம் காணப்பட்டிருந்தாலும் கூட நாஜிகளிடம் சிக்கிய யூதர்கள் எல்லாம் ஒரு மொழி பேசிய யூதர்கள் அல்ல. தாம் வாழ்ந்த ஐரோப்பாக் கண்ட நாடுகளின் மொழிகளையே தமது மொழியாக வரித்துக் கொண்டவர்கள். கங்கேரிய மொழி, பிரான்சு மொழி, போலந்து மொழி, டச்சு மொழி... என்று பல்வேறு மொழியைப் பேசும் மக்களாக இருந்ததால் தடுப்பு முகாம்களில் ஒன்றாகத் திரண்டு ஒரு உணர்வை வளர்க்க அவர்களால் முடியவில்லை. ஊமை மொழி பேசி உள்ளத்து உணர்வுகளைக் கிளறி ஒரு போராட்டத்தை நடத்த மதரீதியாக தங்களை யூதர்கள் என்று இனங்காட்டுவதில் அவர்கள் அக்கறை காட்டினார்களேயல்லாது தங்களது சொந்த மொழியைப் பேசி தாங்கள் ஒரு இனத்தைச் சேர்ந்த மக்கள் என்கின்ற தேசியப் பிரக்ஞையை அவர்கள் பாதுகாத்திருக்கவில்லை. இதனால் ஆபத்து ஏற்பட்ட வேளையில் அவர்களால் ஒன்றுதிரள முடியவில்லை.

இதேவேளை, நம்பிக்கையான எதிர்கால வாழ்க்கையை வெறும் நம்பிக்கைகளுக்குள் தேடும் சுபாவம் கொண்டவர்கள் அன்றைய யூதர்கள். எகிப்திய மன்னனிடம் அடிமைகளாக இருந்த யூதர்களை மீட்க – அன்று, 'மோசஸ்' என்ற இரட்சகர் வந்தது போல் தங்களையும் தடுப்பு முகாம்களில் இருந்து மீட்டுச் செல்ல வான்வழியாக ஒரு இரட்சகர் வருவார் என்று நம்பி – போராடி வெளியேறாது காத்திருந்திருப்பர். நாஜிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒவ்வொரு ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்ப்பியக்கங்கள் இருந்து செயற்பட்டிருக்கின்றன. அந்த எதிர்ப்பு இயக்கங்களில் இணைந்து நாஜிகளுக்கு எதிராகப் போராடியிருந்தால் வரலாறு வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும்.

**நாஜிகளால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒவ்வொரு ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்ப்பியக்கங்கள் இருந்து செயற்பட்டிருக்கின்றன. அந்த எதிர்ப்பு இயக்கங்களில் இணைந்து நாஜிகளுக்கு எதிராகப் போராடியிருந்தால் வரலாறு வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும்**

சொண்டகொமாண்டோக்களின் சிறைப் புரட்சியின் ஆரம்பத்தை வர்ணிக்கும்போது நூலாசிரியர் தரும் ஒரு தகவல் கவனத்தை ஈர்க்கின்றது. அதாவது தாக்குதலை தொடங்குவதற்கு சற்று முன்னர் எதிர்பாராத வகையில் சொண்டகொமாண்டோக்களின் இருப்பிடத்திற்கு வந்த ஜேர்மன் அதிகாரிகள் அவர்களை வரிசையாக நிற்கும்படி கட்டளையிட்டனர். கட்டளை நிறைவேற்றப்பட்டிருந்தால் தாக்குதல் முறியடிக்கப்பட்டிருக்கும். ஏனெனில், இவர்களை வரிசையில் நிறுத்திவிட்டு முகாமை சோதனையிடும்போது, ஆயுதங்கள் சிக்கியிருக்கும். முயற்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கும். ஆனால், வரிசையில் நிற்கும்படி கட்டளை வந்ததும், கட்டளைக்குப் பழக்கப்பட்ட சில சொண்டகொமாண்டோக்கள் போவதா? விடுவதா? என்று தடுமாறிக்கொண்டிருந்த போது, கைக்குண்டொன்றைக் கையிலெடுத்த ஒரு சொண்டகொமாண்டோ அதை ஜேர்மன் அதிகாரி மீது வீசி சண்டையைத் தொடங்கினான். அவன் அவ்விதம் செய்திருக்காவிட்டால் அந்த வீரவரலாறும் 'அவுஸ்விச்'சில் நடந்திருக்காது. வரலாறு பாராட்டும் அந்தக் கிளர்ச்சியின் கதாநாயகன் அவன்தான். இத்தகைய கதாநாயகர்கள் வழிகாட்டிகள், சொண்டகொமாண்டோ அணிகளுக்குள் அல்லது தடுப்பு முகாம்களுக்குள் இல்லாதிருந்திருக்கின்றது. சாவு உலகத்தின் கதவுகளைத் திறந்துகொண்டு யூதர்கள் வரிசையாக உள்ளே சென்றதற்கு இதுவும் ஒரு பிரதான காரணம். அத்தகையோர் இருந்த வேறு சில தடுப்பு முகாம்களுக்குள் கிளர்ச்சியாளர்கள் தப்பியோடும் முயற்சிகள் நடந்துதான் இருக்கின்றன.

நாஜிகளின் இன அழிப்பிற்குப் பலியான பல இலட்சம் யூதர்களின் கதையை வாசிப்போருக்கு கண்ணீர் சுரக்கலாம். இதயம் வலிக்கலாம். ஆனால் போராடும் வாய்ப்பிருந்தும் – போராட வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தும் போராடாமல் மண்டபத்துள் வரிசை தவறாமல் சென்ற இந்த மனிதர்கள் மீது வரலாற்றுக் கடவுள் அனுதாபம் காட்டமாட்டான். போராடி வாழ முயல்பவர்களையே அவன் போற்றுவான்.

இந்த நூலுக்கு முன்னுரை எழுதியவர் நூலாசிரியரின் சிறைப்பணியை ஆதங்கத்துடன் விமர்சிக்கின்றார்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'அவுஸ்விச்'சில் கைதிகளாக இருந்த பல யூத மருத்துவர்கள் தங்களை இனங்காட்டாமல் வாழ்ந்துள்ளார்கள். சலுகைகள் வழங்கப்படும் என்று தெரிந்திருந்தும் நாஜிகளின் மனித பரிசோதனைக்கு ஒத்துழைக்க விரும்பாது கடுமையான சிறைவாழ்வை விரும்பியேற்றவர்கள். இத்தகைய மருத்துவர்கள் சிலரைப் பெயர் சொல்லிக்காட்டிவிட்டு, "நீர் மட்டும் ஏன் எதிரிக்கு உதவி செய்தீர்?" என்று நூலாசிரியரை நோக்கி சுட்டுவிரல் நீட்டுகின்றார்.

"உயிர் வாழ்வதற்காக அதைச் செய்தேன். நான் விரும்பாதுவிட்டாலும் அதைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு இருந்தது" என்று நூலாசிரியர் தன்னை நியாயப்படுத்தலாம். ஆனால் அப்படிச் செய்து உயிர்வாழ்வதை விரும்பாத சக மருத்துவர்களுடன் ஒப்பிடும்போது, மனிதமாண்பில், நூலாசிரியர் தாழ்ந்தே இருக்கின்றார்.

'அவுஸ்விச்' இரகசியத்தின் அடிமுடிகளை அறிந்தவர்களுள் நூலாசிரியரும் ஒருவர். இவரும் சொண்டகொமாண்டோ வகைக்குள்ளேயே நாஜிகளால் வைக்கப்பட்டிருந்தார். ஆனால், மற்றைய சொண்டகொமாண்டோக்களைப் போல நாலு மாதத்தில் சாவு இவரைத் தீண்டவில்லை. அத்துடன் அவுஸ்விச்சின் பிரதம நாஜி அதிகாரி தன்னை இரண்டு தடவை சாவிலிருந்து பாதுகாத்தார் என்று நூலாசிரியர் நன்றிக்கடனும் செலுத்துகின்றார். 'அவுஸ்விச்' மூடப்படும் போது இரகசியம் காப்பதற்காக அனைத்து சொண்டகொமாண்டோக்களும் நாஜிகளால் கொல்லப்பட்டபோது நூலாசிரியரும் அவரது சகபாடிகள் இரண்டு பேரும் கொல்லப்படவில்லை. தனது உயிரைப் பாதுகாப்பதற்காக அளவுக்கு அதிகமாக நாஜிகளுக்கு நூலாசிரியர் உதவியுள்ளாரா? என்ற ஐயம் எழுவதை தடுக்க முடியாதுள்ளது. அந்தளவுக்கு ஒரு பச்சைச் சுயநலவாதியாக நூலாசிரியர் இருந்துள்ளாரா? என்ற கேள்விகள் எழுவதை மறுக்க முடியவில்லை. இந்த ஐயங்களை நிரூபிப்பது போல நூலுக்கான 'சமர்ப்பணம்' அமைந்துள்ளது.

**கைக்குண்டொன்றைக் கையிலெடுத்த ஒருசொண்டகொமாண்டோ அதை ஜேர்மன் அதிகாரி மீது வீசி சண்டையைத் தொடங்கினான். அவன் அவ்விதம் செய்திருக்காவிட்டால் அந்த வீரவரலாறும் 'அவுஸ்விச்'சில் நடந்திருக்காது**

தான் எழுதிய நூலை, 'அவுஸ்விச்'சில் செத்தொழிந்த 40 இலட்சம் யூதர்களுக்கும் சமர்ப்பணம் செய்திருக்க வேண்டும். அல்லது ஒரு பகல் பொழுதிலேயே உயிரும் பிணமும் எலும்புக் கூடுமாக அவரது மேசை மீது கிடந்த அந்த அப்பாவித் தந்தைக்கும் அதிஷ்ரம் கெட்ட மகளுக்கும் நூலை சமர்ப்பணம் செய்திருக்கலாம். அல்லது நச்சுவாயுக் கூடத்தில் தப்பிப் பிழைத்து பின் சுட்டுக்கொல்லப்பட்ட அந்த இளம்பெண்ணுக்கு, அல்லது சாவிலிருந்து தப்ப விறகுக் குற்றிக்குள் ஒளித்து பின் ரவை தின்று செத்த அந்த அபலைத் தாய்க்கும், பிள்ளைகளுக்கும் சமர்ப்பணம் செய்திருக்கலாம். அல்லது 'அவுஸ்விச்'சின் வீரபுருசர்களான 12–வது சொண்டகொமாண்டோ அணிக்கு நூலை சமர்ப்பணம் செய்திருக்கலாம்.

ஆனால், இதற்குப் பதிலாக "உயிருடன் மீண்டுவந்த எனது மனைவிக்கும், மகளுக்கும் இது சமர்ப்பணம்" என்று நூலாசிரியர் அறிவிப்புச் செய்துள்ளார்.

அன்புக்குரிய மனைவியும், ஆசைக்குரிய மகளும் சாவரக்கனிடமிருந்து தப்பி வந்தது நூலாசிரியருக்கு அளவிலா மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. மனிதர்கள் எல்லோருக்குமே தோன்றக்கூடிய ஒரு இயற்கை உணர்வு. ஆனால், 40 இலட்சம் மக்களின் அவல முடிவை உலகிற்கு வெளிப்படுத்தும் ஒரு நூலுக்கு தனது மகிழ்ச்சியை சமர்ப்பணம் செய்து மனத் திருப்தி அடைய எப்படி இவருக்கு மனம் வந்தது?

ஒருவேளை இனப்பற்று இல்லாத ஒரு உதிரி யூதனாக இவர் இருப்பாரோ?.. அல்லது, தானும் தனது குடும்பமும் மட்டும்தான் உலகம் என்று கருதும் வகையைச் சேர்ந்தவராக இருப்பாரோ? அல்லது, செத்தவர்களை நினைவுகூர்வதை விட வாழ்பவர்களை வாழ்த்தும் வகையைச் சேர்ந்தவராக இருப்பாரோ? அல்லது இவற்றுக்குள் அகப்படாத புதிரான ஒரு மனிதராக இருப்பாரோ?

எது எப்படியோ, நூலாசிரியர் நிகலொஸ் நைசிலி, ஒரு வரலாற்றுப் பணியை ஆற்றியுள்ளார். 'அவுஸ்விச்'சின் அவல வரலாற்றை உலகுக்கு அம்பலப்படுத்தி அளப்பரிய பணி செய்துள்ளார். சொல்லப்படாத தகவல்களை வெளியிட்டு – உலகம் நம்பத் தயங்கும் உண்மைகளைக் கூறி உலகின் தலைசிறந்த இனம் என்று தம் பட்டம் அடித்த ஜேர்மனியர்களை உலகின் காட்டுமிராண்டிகளாகக் கருதும் வகையில் தலைகுனிய வைத்துவிட்டார் நிக்லொஸ் நைசிலி. இந்த கங்கேரிய யூதனை ஜேர்மனியர்களும் மறக்கமாட்டார்கள் – யூதர்களும் மறக்க மாட்டார்கள்.

**நன்றி: வெளிச்சம்**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புத்தொளி பிறந்தது



அந்தக் கிராமம் மனித நடமாட்டம் ஓய்ந்து இருளில் மூழ்கிக் கிடந்தது. முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று நந்திக் கடல் கரையில் விழுந்து வெடித்தது. 'ஷெல்'லின் சத்த அதிர்வில் முள்ளி வாய்க்கால் கிராமக் குடிசைகள் ஒரு கணம் நடுங்கிக் கொண்டன. நாய்கள் ஊளையிட்டன. சாமக் கோழி வெலவெலத்துக் கூவியது.

தொடர்ந்தும் சில 'ஷெல்'கள் டமார்... டமார் என ஆங்காங்கு விழுந்து வெடித்தன. பூரணம் திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். சேலை வியர்வையில் நனைந்து உடல் பிசுபிசுத்தது. பூரணம் படுக்கையை விட்டெழுந்து முற்றத்திற்கு வந்தாள். பௌர்ணமி கழிந்து சில நாட்கள் சென்றதால் சந்திரன் பின்னிரவில் தலைகாட்டி நின்றான். அவள் சிந்தித்தபடி அங்கும் இங்கும் நடைபோட்டாள்.

பூரணத்தின் கணவன் நடேசு விழித்தபடி படுத்துக் கிடந்தார். அவருக்கு முல்லைத்தீவை இராணுவம் வந்து ஆக்கிரமித்ததால் ஊரும் தொழிலும் இழந்து உலகம் இருண்டது போலாகிவிட்டது.

கடல் செத்துப் போய்க் கிடந்தது. அதன் பெருமூச்சுக்கள் ஓய்ந்து போய்விட்டன. ஆனி மாதம் தொடங்கிவிட்டால் இப்படித்தான் கடல் செத்துப்போய்விடுகிறது. சில வள்ளங்களும், படகுகளும், கட்டுமரங்களும், பீரங்கி, விமான ஷெல் தாக்குதலுக்குள்ளாகி ஆங்காங்கு சிதைந்து கிடந்தன. மிஞ்சியவை கவிழ்க்கப்பட்டுக் கிடந்தன. உழைப்பற்று வள்ளங்களின் மரக் கோல்கள் ஓய்ந்து பரணிற்குள் புகுந்து பல வருடங்களாகிவிட்டன.

பூரணம் சிந்தனை கலைந்து வாய் நிறையக் கொட்டாவி விட்டாள். நித்திரை மீண்டும் கண்ணிற்குள் வந்து ஏதோ செய்தது. நித்திரையை முறியடிப்பதற்கு சிரட்டைக்குள் இருக்கும் உமிச் சாம்பலை வாய்க்குள் போட்டுக் கொண்டு கிணற்றடிக்குப் போனாள். குளிர்ந்த நீரை அள்ளி முகத்தைக் கழுவும் போது பரந்த நெற்றியின் வலது புறத்தில் பீரங்கிக் குண்டால் காயப்பட்டு ஆறிப்போன பிளவுக்காயத்தை பல முறை தடவிக் கொண்டாள். முகத்தைத் துடைத்துவிட்டு வற்றாப்பளை அம்மன் கோயில் பக்கம் திரும்பி, இரு கரங்களையும் தலைக்கு மேலே கூப்பி "அம்மாளாச்சி இன்னும் துன்பம் தீருதில்லையே?" என ஏக்கத்துடன் வாய்விட்டுக் கூறி சாமி கும்பிட்டாள்.

பக்கத்து வீட்டுக் கனகம் இடிக்கத் தந்த அரிசியை இரவு ஊறப் போட்டிருந்தாள். அரிசிக் கட்டையையும், பின்னறை, பெட்டி, சுளகையும் எடுத்துக்கொண்டு உரலடிக்கு வந்தாள். அரிசியைக் கிளைந்து உரலில் போட்டு இடிக்கத்தொடங்கினாள். மனதிற்குள் தொடரும் வாழ்க்கைப் பிரச்சனைகள் பொங்கிவிழுகின்றன. தொட்டியில் அடைபட்ட மீன்களைப் போல் கடன் தொல்லைகள் அவளை எங்குமே தலைகாட்டாது அந்தக் குடிசைக்குள் சுழலச்செய்துவிட்டன.

கஷ்ரப்பட்டு கூப்பன் எடுத்தாலும் அது ஒரு கிழமைக்குப் போதாது. ஒரு நேரக் கஞ்சியே குடிக்க முடியாதளவிற்கு வறுமை.

இடித்த அரிசியை பெட்டியில் இறக்கிப் பின்னறையில் போட்டு சுளகில் அரிக்கத் தொடங்கினாள். இரண்டு கைமூட்டுகளும் விண் விண்ணென வலித்தன. கைகளுக்கு சுகம் கூட்ட இரு கைமூட்டுக்களையும் மாறிமாறித் தடவினாள்.

"எட நடேசு!"

வெளியே கேட்ட குரலில் பூரணம் துள்ளி எழுந்தாள். படலையில் ஏகாம்பரத்தார் நின்றிருந்தார்.

"என்ன ஏகாம்பரண்ணை?"

"எங்கையடி பூரணம் உவன் நடேசு? இன்னும் நித்திரையாலை எழும்பேல்லையே?"

"அவர் பகல் முழுக்க மட்டி உழக்கப்போயிற்று வந்து அலுப்பில கிடந்தவர். வாங்கோ ஏகாம்பரண்ணை இப்படித் திண்ணையில இருங்கோ' வாறன்."

பூரணம் கவலையாகக் கூறியபடி குடிசைக்குள் நுழைந்து கணவனை எழுப்பினாள்.

நடேசு பாயில் புரண்டுபடுத்தார். கால், கையெல்லாம் அடித்துப் போட்டது போலிருந்தது. உடல் அலுப்பு கண்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணிமைகளைத் திறக்கவிடாமல் கஷ்டப்படுத்தியது.

"இஞ்சருங்கோ, அந்தாள் வந்து காத்துக்கொண்டிருக்கிறது நீங்கள் கிடந்து புரளுறியள்."

படுக்கையைவிட்டெழுந்து கண்களைக் கசக்கிக்கொண்டு திண்ணைக்கு வந்தார் நடேசு.

"என்ன ஏகாம்பரண்ணேய் விடியக் காத்தால இந்தப் பக்கம்..."

"உனக்குப் புதினம் தெரியுமே? உவன் கந்தனும் அவன்ரை பொடியனும் வயலுக்குப் போனவங்கள். காணேல்லையெண்டு தேடுனாங்களெல்லே?"

"ஓமண்ணை வந்திட்டாங்களே? அவள் பாவம் ராசாத்தி காணேல்லையெண்டு அழுதுகொண்டிருந்தவள்."

"ஆட்களைக் கண்டு பிடிச்சாச்சு ஆனா உயிரோட இல்லை. முல்லைத்தீவுக் காம்பிலை இருந்துவந்த ஆமி இரண்டுபேரையும் சுட்டும், வெட்டியும் போட்டிருக்கிறான். நந்திக் கடலுக்கு வீசப்போன பொடியங்கள்தான் கொண்டந்து சேர்த்தவங்கள். சாவீடு கொண்டாடுதுகள்."

"உந்த அநியாயம் எத்தினை வருசமா நடக்குது. அநியாயப்படுவாருக்கு அம்மாளாச்சி ஒன்றையும் காட்டாவாம்."

"வயல் செய்யாமல் விட்டுக் கனவருஷமாய்ப் போச்சு. இப்ப என்ர காணியிலை கோதாரியில விழுந்த சிங்களவன் இருக்கிறான். வீடு, வாசல், வயல், காணி என்ன பாடோ? மூட்டை மூட்டையாய் நெல் கிடந்த வீட்டிலை கஞ்சி காச்சவும் வழியில்லாமல் கிடக்கு."

"என்ர நிலை ஏதோ குறையவே ஏகாம்பரண்ணை. உங்களுக்குத்தெரியுந்தானே. என்னமாதிரி வள்ளம், வலை வச்சுத் தொழில் செய்தனாங்கள். காசும் நகையுமா நிறைஞ்சு கிடந்த என்னட்டை இப்ப அஞ்சு சதத்துக்கும் வழியில்லை. நந்திக் கடலுக்குப் போனா வெட்டிறான். அதுதான் கறிக்கெண்டாலும் வருமெண்டுதான் மட்டி உழக்கப்போனான்"

"அதுசரி நடேசு உன்ர பொடியன் இயக்கத்துக்குப் போனதுக்கு இன்னும் வீட்டை வரேல்லையே?"

"இல்லையண்ணை அவன் அப்படி. மற்றப் பொடியன் பொடிச்சியளும் பள்ளிக்கூடம் படிப்பு ஒழுங்கா இல்லாமல் சீரழியுதுகள்."

"ஏதோ அதுகளின்ரை விதிபோல, கிடந்து தவிக்குதுகள்."

"அது போகட்டுமண்ணை உங்கட நடுவில் பொடிச்சியும் இயக்கத்தில தானே அண்ணை என்னமாதிரி?"

"அவளை அண்டைக்குப் புதுக்குடியிருப்பிலை கண்டனான். நல்லா நெடுத்திட்டாள். நேவியோட சண்டை பிடிக்கப் பயிற்சி எடுக்கிறாள் எண்டு கேள்விப்பட்டேன்."

"முந்தின பொடிச்சியள் வீட்டுக்கை அடஞ்சு கிடக்குங்கள். இப்பத்தேப் பொடிச்சியள் நாட்டைக் காக்கவெண்டு வெளிக்கிட்டு ஆம்பிளையள் மாதிரி எல்லாம் செய்யுதுகள்"

"அப்ப நடேசு கடைக்கொருக்காப் போகணும்"

"ஓமண்ணை, நானுமொருக்கா வரத்தான் வேணும். போங்கோ வாறன்."

ஏகாம்பரத்தார் படலையைத் திறந்து வீதிக்கு வந்தார். சைக்கிளில் ஏறிக் கடையை நோக்கி விரைந்தார். கடை தெரு சனத்தால் நிரம்பி வழிந்தது. கிபீர் விமானமொன்று திடீரென வானத்தில் பிரவேசித்துக் குண்டுகளைப் போட்டது. குண்டுகள் கடைத்தெருவில் விழுந்து கடைத்தெரு புகைமண்டலமாகியது. சனங்களின் அவலக்குரல் எங்கும் பரவியது. குண்டின் அதிர்வில் விழுந்த ஏகாம்பரத்தார் கண்களைத் திறந்து பார்த்தார். வீதி இரத்தக் காடாய்க் கிடந்தது. சிலர் உடல் சிதறிச் செத்துக் கிடந்தனர். சிலர் காயப்பட்டு துடிதுடித்துக் கத்தினர். வாகனங்கள் விரைந்து வந்து காயப்பட்டவர்களை ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயின. இன்னொரு வாகனம்சிதறிய உடல்களைப் பொறுக்கி உர 'பாக்'குகளில் கட்டிக் கொண்டு நகர்ந்தது. கடைத்தெரு வெறிச்சோடிக் கிடந்தது. ஏகாம்பரத்தார் எழும்பினார். விலா எலும்புகள் வலித்தன. மண்ணைத் தட்டி, சைக்கிளை நிமிர்த்திக் கான்டிலை நேர் செய்தார். வீட்டை நோக்கி கவலையுடன் பெடலை மிதித்தார்.

அவரது மனதிலே பழைய நினைவுகள் படமாக ஓடியது. சைக்கிள் நிதானமிழந்து பள்ளம் புட்டிகளில் ஏறி இறங்கியது.

ஏகாம்பரத்தாரின் சொந்த இடம் கரைச்சிக் குடியிருப்பு. அவருக்குப் பூர்வீக பெரிய வீடும் பல ஏக்கர் நிலமும் உண்டு. ஏகாம்பரத்தார் நல்ல விவசாயியும் நேர்மையான முதலாளியும்கூட. அவருடைய வயல்கள் அவரை வாழ வைத்திருந்தன. வீட்டில் கறுப்பன் நெல்லும் மொறுங்கன் நெல்லும் மூட்டை மூட்டையாய் நிறைந்துகிடக்கும். ஏகாம்பரத்தாருக்கு முல்லைத்தீவு ரவுணுக்குள் அரிசி மில் ஒன்றும் இருந்தது. இப்படி இருந்த ஏகாம்பரத்தார் சிங்கள இராணுவம் ஆக்கிரமிப்பால் ஊரிழந்து சொத்திழந்து நிர்க்கதியானார்.

"என்ன கிழவா நடுறோட்டிலை தாறுமாறாய் சைக்கிள் ஓடுறாய். நசுங்கியெல்லே போகப்போறாய்.

சைக்கிளில் சென்ற இளைஞன் ஒருவன் திட்டிவிட்டு விரைந்தான்.

பழைய நினைவுகளில் மூழ்கிப்போன ஏகாம்பரத்தார் திடுக்கிட்டு சுயநினைவிற்கு வந்தார்.

வீட்டை அடைந்த ஏகாம்பரத்தார் பவ்வியமாக சைக்கிளில் இருந்து இறங்கித் திண்ணையில் அமர்ந்தார்.

'அடி பிள்ளை ராணி, தண்ணி கொஞ்சம் கொண்டா' ராணி செம்பைக் கழுவித் தண்ணி எடுத்துக் கொண்டு முன் திண்ணைக்கு வந்தாள்.

"என்னப்பா! எங்கை 'கிபீர்' அடிச்சவன் ஆருக்கும் காயமே".

"அதையேன் கேட்கிறாய்" சொல்ல மனவற்றவராய் தலைக்கு கையை வைச்சுக் கொண்டு திண்ணையில் சரிந்தார். வீதியில் விழுந்து உடம்பெல்லாம் சிராய்ப்புக் காயம் ஏற்பட்டிருந்ததை இப்பதான் கண்டு கொண்டார். எழும்பி அறையிற் கிடந்த மருந்துப்போத்தலை எடுத்து காக இறகால் சிராய்ப்புக் காயங்களுக்கு மருந்திட்டார். எரிவு சற்றுக் குறைந்திருந்தது.

'அம்மாளாச்சி இவங்களுக்கு சாவு வராதே'.

ஏகாம்பரத்தார் முணுமுணுத்தபடி திண்ணையில் படுத்துக் கொண்டார். சில நிமிடங்களில் உறங்கிப் போனார்.

'டொம்....டொம் டமார்....டமார்
சட் சட் சடசட சட சடார்'

முல்லைத்தீவுக் 'காம்' பக்கமிருந்து 'ஷெல்' சத்தங்களும் சூட்டுச் சத்தங்களும் தாறுமாறாகக் கேட்டன. வானில் நெருப்புக் கோளங்கள் பறந்தன. நடேசுவின் பிள்ளைகள் படுக்கையில் இருந்து எழுந்து குடிசையில் மூலைக்கொன்றாய் குந்திக் கொண்டு இருந்தன. அவர்களின் முகங்கள் பயத்தினால் வியர்த்திருந்தன. நடேசுவும், பூரணமும் முற்றத்திற்கு வந்தார்கள். பக்கத்து வீடுகளில் குப்பி விளக்குகள் எரியத் தொடங்கியிருந்தன. அயலவர்களின் குசுகுசுப்புச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

"என்னப்பா கோதாரியிலை போவான் தொடங்கிட்டான். எத்தனை சனம் செத்துதுகளோ? என்னமாதிரியோ?"

"பூரணம் இண்டைக்குச் சத்தங்கள்

-ஆ. பொற்கோ-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வித்தியாசமாகக் கிடக்கு எங்கட பொடியள் காம்புக்குள்ள பூந்திட்டாங்களோ தெரியாது."

சத்தங்கள் விடிய விடியக் கேட்ட வண்ணம் இருந்தன. வாகனங்கள் வேகமாக விரைந்தன. 'கிபீர்' விமானங்கள் வானில் வட்டமிட்டன.

நடேசு விடிந்தும் விடியாததுமாய் முகத்தைக் கழுவிக் கொண்டு கடைத் தெருவிற்குப் போனார்.

"முல்லைத்தீவு ஆமிக்காம்ப் அடிச்சாச்சு. ஒரு ஆமிகூட தப்பியோட முடியாம எங்கட பெடியள் சுற்றி வளைச்சு பிடிச்சிட்டாங்கள்."

நடேசுவிற்கு தலைகால் புரியவில்லை. மகிழ்ச்சியில் வேகமாக வீட்டை நோக்கி சைக்கிளைச் செலுத்தினார். புலிகள் தரப்பில் பல போராளிகள் வீரச்சாவடைந்திருந்தார்கள். அதில் நடேசுவின் பொடியனும் ஏகாம்பரத்தாரின் பொடிச்சியும் வீரச்சாவடைந்திருந்தனர்.

இரண்டு வீடுகளிலும் தோரணங்கள் கட்டுப் பட்டு சோகத்தில் மூழ்கிக்கிடந்தன. வீதிகள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவர்களின் வித்துடல்களுடன் பல போராளிகளின் வித்துடல்களும் இராணுவ மரியாதையுடன், மாவீரர் துயிலும் இல்லத்தில் புனித விதைகுழியில் விதைக்கப் பட்டனர்.

ஏகாம்பரத்தார் அதிகாலையிலேயே எழுந்து கொண்டார் முல்லைத்தீவு காம்பையும் தன்னுடைய வீடு வளவையும் போய்ப்பார்க்க மனம் ஆவல் கொண்டது. சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீதிக்கு வந்தார். சனங்கள் சந்தோஷமாக முல்லைத்தீவுக் காம்பை நோக்கிப் படையெடுத்துப் போய்க் கொண்டிருந்தனர். ஒவ்வொருவர் முகத்திலும் தங்களுடைய ஊரை, வீட்டைப் பார்க்கின்ற மகிழ்ச்சி தெரிந்தது. ஏகாம்பரத்தாரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்.

சின்னாத்தாங்காட்டை ஊடறுத்து ஆமியின் 'பொயின்ற் லைன்' சென்றது. சனங்களின் வீடுகளை உடைத்து அரண் அமைத்திருந்தான். ஏகாம்பரத்தார் பொயின்ற் லைனைத் தாண்டி சின்னாற்றுப் பாலத்தை அண்மித்தார்.

பாலத்தைக் கடந்து ரவுணுக்குப் போகும் திசையில் சைக்கிளைத் திருப்பினார்.

'முல்லைத்தீவு மகாவித்தியாலயம்' சிங்களத்தில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுக் கிடந்தது அவரின் நெஞ்சு ஒரு கணம் வலித்தது.

"என்ர பெடியன் படிச்ச பள்ளிக்கூடம்!" முணுமுணுத்தபடி ரவுணை அண்மித்தார். ரவுணைப்பார்த்தவருக்கு கவலை தொண்டையை அடைத்தது. மாடிக்கட்டடங்களாகவும், கட்டடங்களாகவும் இருந்த கடைத்தெருவெல்லாம் இடிக்கப்பட்டு வெட்டையாகக் கிடந்தன. அவருடைய அரிசி மில்லிருந்த சுவடு இல்லாமல் அழிக்கப்பட்டிருந்தது.

கரைச்சிக் குடியிருப்பு றோட்டில் சைக்கிளைத் திருப்பினார் ஏகாம்பரத்தார். அவருடைய வயல்கள் தரிசு நிலமாகக் கிடந்தன. வீட்டை ஆமி தங்குவதற்கு பாவித்திருந்ததால் ஓரளவு உடையாமல் இருந்தது. வீடவருக்கு மனதிற்கு சந்தோஷத்தைத் தந்தது. ஆனால் வேறுபல வீடுகள் இடிக்கப்பட்டிருந்தன. கரைச்சிக்குடியிருப்பு பிள்ளையார் கோவில் வந்தது. ஏகாம்பரத்தார் சைக்கிளில் இருந்து இறங்கி சைக்கிளை மரத்தோடு சாத்திவிட்டு நடந்தார். கோயில் பூட்டி சுத்தமாக இருந்தது. பிள்ளையாரைக் கும்பிடலாம் என்று போனவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது அங்கு பிள்ளையாரைக் காணவில்லை. அதற்குப் பதிலாக புத்தரின் சிலை காணப்பட்டது. பூக்கள் வைத்து வழிபடப்பட்ட சுவடு இருந்தது. சுவர் முழுவதும் சிங்கள எழுத்துக்களாலும் படங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

> "அளம்பில்லை ஹெலியாலை ஆமியை இறக்கினவனாம். ஹெலி ஒண்டை எங்கட பொடியள் சுட்டுப் போட்டாங்களாம். கனக்க ஆமியும் செத்துப் போச்சு. எங்கட பொடியள் அடிச்ச ஷெல் விழுந்து நேவிக் கப்பலொண்டும் தாண்டு போச்சாம்."

மனம் கனமாக வலித்தது. தொண்டை வறண்டு கம்மியது. கிணற்றடிக்குச் சென்று தண்ணி அள்ளி மென்று மென்று குடித்தார். மனதில் குளிர்மை படர்ந்தது.

பல்வேறு சுகத்துக்கங்களுடன் வீடு திரும்பினார்.

"எங்கை ஏகாம்பரண்ணை ஊரையும் வீட்டையும் பாத்திட்டு போறியளே"

"ஓமோம் நடேசு நீயுமெங்கை வீட்டையே போட்டு போறாய்?"

"ஓமண்ணை வீடு அங்கனேக்க ஒரு மாரிக் கிடக்கு. போட்டு வலையைத் தான் எரிச்சுப்போட்டான் ."

"அளம்பில்லை ஹெலியாலை ஆமியை இறக்கினவனாம். ஹெலி ஒண்டை எங்கட பொடியள் சுட்டுப் போட்டாங்களாம். கனக்க ஆமியும் செத்துப் போச்சு. எங்கட பொடியள் அடிச்ச ஷெல் விழுந்து நேவிக் கப்பலொண்டும் தாண்டு போச்சாம். மிச்ச ஆமியையும் காயப்பட்ட ஆமியையும், ஆயுதங்களையும் போட்டிட்டு ஓடிட்டாங்களாம்."

"உவை பலாலியிலை இருந்து யாழ்ப்பாணம் வந்த மாதிரி வரலாமெண்டு நெச்சினமாக்கும்."

" அதுதானே!" இப்பெண்டாலும் விடிவு கிடைச்சுது. அது போதும்.

"அதுதான் அண்ணை எங்கடை மண்ணை மீட்கிறதிற்கு என்ரை பொடியனும் பங்குபற்றினதை நினைச்சுப் பெருமைப்படுறன்."

"நானும் அப்படித்தான் நடேசு நினைக்கிறன் என்ரை பொடிச்சியும் கடல் சண்டையிலைதானே செத்தவள்"

"உப்பிடி ஒவ்வொரு இடமா சிங்களவனிட்டை இருந்து மீட்கோணுமெண்டா எல்லோரும் போராடோணும்."

"ஓமடா நடேசு. ஓமடா"

"அது சரி ஏகாம்பரண்ணை நாளைக்கு நான் குடும்பத்தோடை எங்கட வீட்டிக்குப் போகப் போறன். இனியென்ன, எங்கட கடலிலயும் ஆத்திலையும் விரும்பியமாதிரித் தொழில் செய்யலாம். பெருங்கடலிலை நல்ல மீனும், றாலும் பிடிக்கிறாங்களாம்"

"நானும் நாளைக்குக் குடும்பத்தோட வீட்ட போவமெண்டுதான் இருக்கிறன். மில்லெல்லாம் உடைஞ்சு போச்சு ஆனா வீடு ஏதோ தப்பியிட்டுது. ஆடியும் பிறந்திட்டுது. வயலை உழுது விதைக்கோணும்,"

இருவரும் விடைபெற்று தங்களுடைய வீட்டிற்குச் சென்றனர். நடேசுவின் பிள்ளைகள் தகப்பனைக் கண்டதும் ஓடிவந்தார்கள்.

"அப்பா அப்பா "

"என்ன பிள்ளையள்? "

"எங்கடை சொந்த வீட்டுக்குப் போவமே? என்ரை பழைய பெரிய பள்ளிக்கூடமும் தொடங்கப் போகுதாம். போகப்போறன்."

"இனி வடிவாப்படிக்கலாம் சாப்பிடலாம்"

பிள்ளைகள் சொல்லிவிட்டு சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தனர் பூரணம் சந்தோஷத்துடன் முற்றத்திற்கு வந்தாள்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மே-1










நோர்வே

## உலகத் தொழிலாளர்களின் கைகளைப்பற்றி உரிமை முழக்கம்





ஜேர்மனி




சுவிஸ்




பிரான்ஸ்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அச்சுப்பதிப்பு: ஜாசன் அச்சகம், இலண்டன். Tel:0181 646 2885